www.padippakam.com

கணையாழி

7, rue Labat - 75018 PARIS
☎ 42.59.09.90 Fax 42.59.09.9

ன் '96 விலை ரூ.10.00

தசரா

படிப்பகம்

www.padippakam.com

Champa fabrics

YARN, FABRICS, GARMENTS EXPORTERS &
FABRIC SUPPLIERS TO THE EXPORTERS IN INDIA

EXPORT OFFICE :
9, 1st Lane, Vijayaraghava Road,
T. Nagar
Madras - 600 017. (INDIA)
Phones : 044 - 8283298 / 8263635
Telex : 41 - 8856 JAIN IN
Fax : 044 - 825 0875

PRODUCTION OFFICE :
100 - 101, Ganapathipuram,
Karungalpalayam,
ERODE - 638 003. (INDIA)
Phones : 424 - 212788 /
210339 / 212297
Telex : 856 - 261 JAIN IN
Fax : 424 211071

PROCESSING UNIT :
JAIN BRUSHING PEACH INDIA
Madras - 81. Ph : 5953556

SPINNING UNIT :
LAKSHMI SARASWATHI
COTTON MILLS
Kutchipalayam - 637 209.
Ph : 04288 52470

MARKETING OFFICE :

MADRAS :
Mr. Ragraj
7, Balu Mudali Street,
Tondiarpet,
Madras - 600 021 (INDIA)
Phone : 044 5953556 / 5953001
Fax : 044 - 5950384
Telex : 41 - 7014 JAIN IN

DELHI :
Mr. Ramesh Dhingra
Phone : 011 - 237026 / 2916433
Fax : 2931636

BOMBAY :
Mr. Lakhi Sachdev
Phone : 022 - 4954697
Fax : 495 4698

BANGALORE :
Manohar Chawla
Phone : 080 - 368590 / 363334



ASSOCIATE GROUP CONCERNS :
Champa Fabrics Pvt. Ltd.
Champa Exports
Nadasware International
Dhanasware Overseas
Champa Granites
Cosmotex Exports
Rohit Enterprises

MANUFACTURERS & EXPORTERS
All kinds of Cotton,
Rayon, Flex, Yarn Dyed,
Flannel, Solid Dyed,
Printed, Grey Fabrics



Embracing Humanity For Excellence

படிப்பகம்

www.padippakam.com

கணையாழி

ஜூன் '96

கௌரவ ஆசிரியர்
கி. கஸ்தூரி ரங்கன்

நிர்வாக ஆசிரியர்
அருள்மொழி நங்கை சுவாமிநாதன்

மேலாளர்
இரா. சந்திரசேகர்

ஆலோசகர்கள்
இந்திரா பார்த்தசாரதி
சுஜாதா
டிராட்ஸ்கி மருது
க.கணேசன்
கா. அலாவுதீன்
ரெ. பாலகிருஷ்ணன்
சு. போசு.

பதிப்பாளர்
தமன்பிரகாஷ்

சந்தா மற்றும் தொடர்புகளுக்கு
கணையாழி
தசரா அறக்கட்டளை
9, முதல் தெரு,
விஜயராகவா சாலை,
தியாகராஜ நகர், சென்னை - 17.
தொலைபேசி :
4994089
8283298, 8263635
தொலைநகல்
(91)41-8250875
டெலக்ஸ் (81) 41-8856 JAIN IN

அட்டை ஓவியம்
டிராட்ஸ்கிமருது

இந்த இதழில்...

I. கட்டுரைகள்

1. கும்பகர்ணனின் நோய்
   - டாக்டர் ஔவை. மெய்கண்டான்
2. பண்டைய இந்துக்களின் நகர அமைப்பும், கட்டட கலையும்
   - வ.ந. கிரிதரன்
3. மார்க்ஸின் தூரிகை
   - தியாகு

நூல் அறிமுகம்

1. மல்லிகை முகங்கள் - டொமினிக் ஜீவா
   - ச. கணேசலிங்கன்
2. த லி த் கலை, இலக்கியம், அரசியல் - ரவிக்குமார்
   - பகலவன் சேது
3. சாய்வு நாற்காலி - தோப்பில் முகம்மது மீரான்
   - கோவி. பரஞ்சோதி
4. நெருப்பு - தேவகாந்தன்
   - வே. சபாநாயகம்

   உன்னை போகவிடமாட்டேன் - இரவீந்திரநாத் தாகூர்
   - டேவிட் சித்தையா

சிறுகதைகள்

1. புலம்பெயர்ந்த காட்சிகள்
   - பாரதி ராமன்
2. சின்னதாகிப்போன மேடு
   - சு. போசு
3. வரம்
   - பிச்சுமணி கைவல்யம்
4. அவர்க்கென்று ஓர் குடில்
   - கருணாஹரமூர்த்தி
5. உருவம்
   - ராணி திலக்
6. அச்சம் தவிர்
   - ப.மு. ஷெரீப்
7. பொய்க்கும் சமன்பாடுகள்
   - எஸ்.எம்.ஏ. ராம்

கவிதைகள்

எஸ். வைதீஸ்வரன், ரவிசுப்பிரமணியன், அ.கார்த்திகேயன்
பொதிகைச்சித்தர், செ. காமராசன்
மற்றும் கணையாழியின் பரிணாம வளர்ச்சி,
இலங்கைச் செய்திமடல், கடிதங்கள்

படிப்பகம்

www.padippakam.com

கடிதங்கள்

பூமணியின் 'வரப்புகள்' பற்றிய சா. தேவதாஸின் விமர்சனம் படித்தவுடன் எங்கோ படித்த கட்டுரையின சிலவரிகள் நினைவிற்கு வந்தன. 'விபச்சாரி, திருடன், அயோக்கியன், கூட்டிக் கொடுப்பவன், பிச்சைக்காரன், பட்டினியால் வாடும் ஏழை - இவர்களைப் பற்றி எழுதினால் இலக்கியம். மூன்று வேளை சாப்பிட்டு சகஜமான வாழ்க்கை நடத்துபவனைப் பற்றி எழுதினால் அது இலக்கியமல்ல'.

நைவேத்தியம் பிராமணர்கள் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது. வரப்புகள் பள்ளி ஆசிரியர்களின் உறவு பற்றியது. தேவதாஸ் நல்ல இலக்கியத்தை இனங்கண்டு கொள்ளத் தெரிந்தவராகத் தோன்றவில்லை. பூமணி என்ற உன்னத கலைஞனின் பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடுதான் 'நைவேத்யம்', 'வரப்புகள்' நாவல்கள்.

ப. சுப்பிரமணியன்
கண்டனூர், பசும்பொன் மாவட்டம்

இயல்புடைய 'மூவர்க்கும்' - என்பது குறித்த மருதமுத்துவின் நோக்கம் அவருடைய பார்வை. எந்த ஓர் இலக்கியப் பிரதியும், வாசகன் தளத்திற்கு வருகிற போது, தர்க்க ரீதியாகப் பார்ப்பதற்கு அவரவர்க்கு உரிமை உள்ளது. அப்படியானதொரு பார்வைக்கு இடம் கொடுக்கிற பிரதிதான் அசலும் அற்புதமானதுங்கூட. சின்னை வெங்கட்ராமன் இப்பார்வைக்குச் சலித்துக் கொள்ளாமல் அவரும் அவருடைய கருத்தை முன்வைக்கலாமே. ஜனரஞ்சகப் பத்திரிகைகள்தான் துணுக்குக் கதைகள், ஒருபக்கக் கதைகள் என்று பக்கங்களை ரொப்ப வேண்டியுள்ளது. வாசகனின் சுலபமான வாசிப்பிற்காக.. சிற்றேடான கணையாழியுங்கூட தன் வாசகனின் வாசிப்பெளிமைக்காக, நிறைய்யச் சிறுகதைகளை போட்டுள்ளது. ஆனால் வாசகனின் பசிக்குச் சரியான தீனியாகத்தான் அமைந்துள்ளது.

புத்தக விமர்சனங்கள் நிர்த்தாட்சண்யமாக, புத்தகம் பற்றிய அபிப்பிராயங்களைக் கூற வேண்டும். பண்டிதத்தனமான விமர்சனங்களால், பிரயோஜனமேதுமில்லை. தமிழ்ப் பண்டிதர்கள்தான், 'இந்நூல் தமிழுக்குப் புது வரவு'; தரமானது என்று பொத்தாம் பொதுவாகக் கருத்துக்களைச் சொல்லிப் போவார்கள். அப்படிப்பட்ட விமர்சனம் வேண்டாம். சாவித்திரியில் தாய்மைப் பிம்பமும், மரணச் சங்கிலியில் மரண பிரமையும், கந்தூரியில் போரின் விளைவும் பயமும், நீச்சலில் குடும்பத்துள் ஆணின் ஏலாத்தனமும், இமேஜில் தமிழ்நாட்டு மக்களின் சினிமா வெறியும், வெள்ளிக் கிழமை நியாயத்தில் இங்கு நிலவும் முடநம்பிக்கைகளும், பாலியச் சுரண்டல்களும், முகங்களில், மனிதர்களின் வாழ்வாசையும் சொல்லப் பட்டுள்ளன. மரணச் சங்கிலியும், வெள்ளிக்கிழமை நியாயமும், மனதை ஈர்க்கக் கூடியவை. ஒன்றில் பெண் தன்னுடலை இழக்கவும், இன்னொன்றில் இழக்காதிருக்கவும் முயல்கிறாள். மரணச்சங்கிலியால் இயல்புத்தன்மை மிஞ்சி, முன்னதிலுள்ள சினிமாத்தனம் (இது ஒரு தெரிதலுக்காகத்தான்) நிற்கிறது.

ராகுலதாஸனின் கட்டுரை, அகஸ்தியரை நமக்கு தெரிய வைக்கிறது. அதற்காக, இந்த ஒரு முனையில், சிவத் தம்பியையும், கைலாசபதியையும் இழிவுபடுத்துவது முறையாகுமா? இருவரும் அவர்களின் பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

1970 வாக்குகளில் கணையாழியின் 'கனம்'

படிப்பகம்

www.padippakam.com

இப்போது உணர்கிறேன்.

- சிவசு,
பாளையங்கோட்டை.

உள்ளது என்பதே இதன் தனிப்பெரும் சிறப்பாகும்.

கொடுமுடி **ந. ராமக்ருஷ்ணன்,**
சென்னை

மே, 1996 இதழில் வெளியிடப்பட்ட ஸ்ரீபதி பத்மநாபா அவர்கள் எழுதிய "எல்லைக்கு அப்பால்" என்ற புராணக்கதைக்கு தற்கால வசனங்களுடன் (கணையாழியின் தரத்திற்கு ஒவ்வாத ஒரு சொல்லுடன்) கூடிய விளக்கக் கதையைப் படித்தேன். புராணக்கதைகள் ஒவ்வொன்றும் விண்வெளி இயற்பியல் சார்ந்த விந்தைகளைப் பற்றியதே. சைவ சமயத்திலோ, வைணவசமயத்திலோ இருக்கும் புராணக் கதைகள் ஸம்ஸ்க்ருத மொழியில் எழுதப்பட்டவை. புராணக் கதைகளை தமிழ் மொழியில் சொல்லும்போது ஸம்ஸ்க்ருத மொழிச்சொற்களைக் கையாள்வதில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும். கதையில் அபஸ்மார என்பதற்கு மாறாக அபஸ்பார என்றும், முஸலக என்பதற்கு மாறாக முயலகன் என்றும் காணப்படுகின்றன. அபஸ்மார, முஸலக என்ற சொற்களை தமிழ்ச் சொற்களஞ்சியங்களில் காண இயலாது.

இப்புராணக்கதை சூரியனுக்கும் சூரியனைச் சுற்றியுள்ள அயனிமண்டலங்களுக்கும், பூமியைச் சுற்றியுள்ள காந்தப்புலத்திற்கும், அதனுள் அடங்கிய காற்று மண்டலத்திற்கும் இடையே ஒவ்வொரு ஆண்டும் மற்றும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடைபெறும் செயல்பாடுகளைக் குறிப்பதாகும். (Yearly and Twelve Year Sunspot Activities). ராமாயண, பாரத இதிஹாஸக் கதைகள் இச்செயல்பாடுகளை அடித்தளமாக வைத்துப் புனையப்பட்டவையே. ராமாயணத்தில் 14 ஆண்டு வனவாசமும், பாரதத்தில் 13 ஆண்டு வனவாசமும், சூரியச் செயல்பாட்டின் கால அளவே.

பெரும்பாலான புராணக் கதைகள் ஆண் - பெண் பால் உறவு கலந்தே புனையப்பட்டன. என்? விண்வெளி இயற்பியல் பற்றி ஒன்றும் தெரியாதவர்களுக்கு இது மனக்கிளர்ச்சியூட்டும் கதையாக அமையும். தெரிந்தவர்களுக்கு இவை ஜனரஞ்சகமாகச் சொல்லப்பட்ட விண்வெளி இயற்பியல் உண்மைகளாகும்.

இப்புராணக் கதையில் வரும் சிவன் சூரியனைக் குறிப்பதாகும். விஷ்ணு எனப்படும் திருமால் பூமியைச் சுற்றியுள்ள காந்தப் புலமாகும். பார்வதி, காளி மற்றும் பல பெயர்களால் அழைக்கப்படுவது எதிர்மின்னேற்றம் கொண்ட மின்துகளாகும் (Electron). இம்மின்துகள் ஒரே நேரத்தில் மின் பொருளாகவும், மின் அலையாகவும்

'மே' கணையாழி இதழ் படித்தேன். கட்டுரைகளில் மருதமுத்து 'மணற்கேணி' 'இல்வாழ்வான்' குறளில் வரும் இயல்புடைய மூவர் பற்றி மிகத் தெளிவாக 6 பக்கங்களுக்கு விளக்கமளிக்கிறது. பொதுவாக இது போன்ற கட்டுரைகளைச் சுருக்கமாக கடைசிப் பாராவில் வரும் விஷயத்தை வைத்துக் கொண்டு 3 பக்கங்களில் முடிப்பது நல்லது.

பிரெஞ்சு சினிமாவைப் பற்றி எஸ்.குருவின் கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. கம்பீரக் கலைஞர்கள் பற்றிய படத்தைக்காண ஆசையைத் தூண்டுகிறது. தரமான சினிமா பற்றிய ஒரு கட்டுரை மாதந்தோறும் தயவுசெய்து வெளியிடுங்கள்.

9 சிறுகதைகள் தாராளமாக வெளியிட்டிருப்பதற்கு பாராட்டுக்கள்.

யூமா. வாஸுகியின் சாவித்திரி, ஜெகாதாவின் கந்தூரி, நா. கண்ணனின் 'நீச்சல்', கோப்பினாத் ஆத்ரேயனின் வெள்ளிக்கிழமை நியாயம் ஆகிய கதைகள் என்னைக் கவர்ந்தன.

நா. கண்ணனின் நீச்சல், கதையம்சத்தோடு நிறைய விவரங்களையும் தருகிறது. சாவித்திரியில் நடை நன்றாக வந்திருக்கிறது.

ஜெகாதாவின் கந்தூரியிலும், கோப்பிநாத் ஆத்ரேயனின் வெள்ளிக்கிழமை நியாயத்திலும் கதையின் முடிவு குறிப்பிடத்தக்கபடி அமைந்துள்ளது. வெள்ளிக்கிழமை நியாயம் கதையில் கூலிப் பெண்களை சம்பளம் தரும் முதலாளிமார்கள் பார்க்கும் பார்வையையும், பேச்சுக்களையும் பற்றி 'செம்மலரில்' சில கதைகள் இது போன்று ஏற்கெனவே வந்துள்ளன. கணையாழியில் இவ்வளவு தீவிரமாய் தாக்குதலுடன் வந்துள்ளதை பாராட்டுகிறேன்.

ஜானகிராமனின் மரணச் சங்கிலியின் நடை எனக்குப் பிடித்திருந்தாலும், கதை ஏற்கென்வே படித்த சிறுகதையை ஞாபகப்படுத்துகிறது. 'இமேஜ்' கதையிலும் நடை என்னைக் கவர்ந்தது. கதை ஏற்கெனவே படித்த கதையின் சாயலே!

சாரு நிவேதிதா அன்பழகன் ஆகியோரின்

படிப்பகம்

www.padippakam.com

கதைகள் பரவாயில்லை. ஸ்ரீபதி பத்மநாபாவினின் 'எல்லைக்கு அப்பால்' வித்தியாசமான கோணத்தில் எழுதப்பட்ட புராணக் கதை. அருமையான நடை. ஆனால் சில இடங்களில் 'அடல்ஸ் ஒன்லி' வாசனையோடு விரசத்தை நினைவூட்டுகின்றன. அன்பழகன் கதையில் 'திப்பு சுல்தான்' பற்றி ஒரேடியாகப் புலம்புகிறார்.

எம்.எஸ். இராகுலதாசனின் 'ஈழத்துச் சிறுகதைகளும்', பயனுள்ள பல விவரங்களைத் தருகிற அருமையான கட்டுரை.

இரா. கதைப்பித்தன்
மதுரை.

"இந்த இதழில்" பகுதியில் 'பாவண்ணன்' பெயர் கவிதைகள் பகுதியில் விடுபட்டுள்ளது. பாவண்ணன் கவிதை சற்றுநேரம் மரத்திற்கு மௌன அஞ்சலி செலுத்த வைக்கிறது. மாத்தளை சோமு பெயரும் முதலில் காணோம். அதுவும் குருவிகளைப் பற்றி ஒப்பீடு காட்டும் நல்ல கவிதை. கல்யாண்ஜி கவிதைகளில் வயோதிகப் பெண்ணின் பவளம் கூடக் கருவாவது பாராட்டுக்குரியது.

இந்த இதழில் சிறுகதைகள் நிறைய இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியாய் உள்ளது. "சாவித்திரி" கதையின் மையம் ஞாயிறு தொலைக்காட்சியின் திரைப்படம் "அப்பா டாட்டா" வை லேசாகத் தொடுகிறது.

நா. கண்ணனின் நீச்சல் நல்ல கதை. மன அவஸ்தைகள் துல்லியமாகத் தெரிகின்றன. எல்லைக்கு அப்பால் புதுமையான கதை. எங்கோ கிளம்பி சர்ரென்று தரையில் இறங்கும் விமானம் போல் உள்ளது.

வெள்ளிக்கிழமை நியாயம் முடிவு வழக்கம் போலவே உள்ளது, கதையின் பலவீனம்.

இமேஜ் கதை அழமுடியாத நிலை, அழவேண்டிய சூழ்நிலை, நடிகனின் மனவேதனை - டைரக்டரின் பரிதாபம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டி கடைசியில் நம்மை அழவைக்கிறது. ஒருவழி தவறிய பெண்ணின் எய்ட்ஸ் பற்றி பேசும் மரணச்சங்கிலி, ஒரு வழி தவறிய மூதாட்டியின் நேர்ச்சையைக் காட்டும் கந்தூரி - மொத்தத்தில் கதைத்தேர்வு அருமை!

சின்னை வெங்கட்ராமன் சிந்தனைகள் வரவேற்று மேலும் எண்ணத் தூண்டுகின்றன. மணற்கேணி - நல்ல ஆய்வுக் கட்டுரை. இதுபோன்ற கட்டுரைகள் நிறையத் தேவை!

வளவ-துரையன்,
வரக்கால்பட்டு.

'மே' மாத இதழில் வெளியான கந்தூரி ஜெகாதாவின் சிறுகதை படித்தேன்.

பொது நலனுக்காக பிச்சை எடுத்து கந்தூரிக் கஞ்சி ஊற்ற விரும்பும் சக்கினா பீவியை கை கூப்பி தொழ வேண்டும் என்பது போல இருந்தது.

போரினால் தான்பட்ட பாதிப்பே மற்றவர்களை அதிலிருந்து விடுவிக்கும் எண்ணம் தோற்றுவித்தது. மற்றவர் தான் பட்ட துன்பம் படக்கூடாது என்ற எண்ணம் வரும்போதே அங்கே மனிதம் தழைக்கத் துவங்குகிறது.

வ. பரந்தாமன்
புதுச்சேரி - 8.

கணையாழி 'மே' இதழில் குறுநாவல் இலக்கியம் பற்றிய பொறுப்பாசிரியர் குறிப்புத் தொடர்பாகவே இந்த அஞ்சல். "சிறுகதையை விட நீண்டதாகவும், நாவலை விடக் குறுகியதாகவும் உள்ள உரைநடைப் படைப்புகளே "குறுநாவல்" எனவும் "Novella" என்றழைக்கப்பட்ட குறுநாவல்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையில் நெடுஞ்சிறுகதை (Novella) வேறு குறுநாவல் (Novellette) வேறு.

நீர்நிலையில் வீசி எறியப்பட்ட கல்வீச்சின் விளைவாக, விழுந்த சுழியைச் சுற்றி எழுந்த அலைவட்டங்கள் எத்தனை ஆனபோதிலும் அவையெல்லாமும் அந்த ஒரே நடுப்புள்ளியிலிருந்துதானே சுழலலாகின்றன. இங்கே வீச்சின் விசைக்கேற்ப அலைவட்ட அளவு உருவாகும் அவ்வளவே. இவ்வாறே நெடுஞ்சிறுகதையும் சற்றே நீண்டு நடந்தாலும் கூட அதன் நட்ட நடுக்கரு ஒன்றே ஒன்றுதான்.

ஆக 'ஒருசிறு' எனும் வரையறை பெற்று, அதாவது சிறுகதை இயல்பில் அமைந்து சற்றே அளவில் நீண்டது நெடுஞ்சிறுகதை (நாவெல்லா) நாவலுக்குரிய இயல்பில் அமைந்து அளவில் குறுகியது குறுநாவல் (நாவலெட்)

தமிழில் 'நாவெல்லா' விற்கு ஓர் உதாரணம் புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி'.

வே.மு.பொதியவெற்பன்
கும்பகோணம்.

படிப்பகம்

www.padippakam.com

மார்ச் 96 கணையாழியில் வெளிவந்துள்ள சுந்தர ராமசாமியின் கேள்வி - பதில் பகுதியில் கடைசிக் கேள்வியின் பதிலில் ஒரு பகுதி அச்சேறவில்லை. இங்கு அக்கேள்வியையும் பதிலையும் முழுமையாகத் தந்திருக்கிறோம்.

- ஆசிரியர்

ஜி. சாமிநாதன்
சென்னை - 600 017.

கேள்வி : இன்றைய சமூகத்தைவிட நேற்றைய சமூகம் ரசனை விஷயத்திலோ, சமூகப் பொருளாதார நிலைகளிலோ மேம்பட்டதாக இருந்திருக்க முடியுமா?

பதில் : இருந்திருக்க முடியாது என்றே நினைக்கிறேன். நேற்றையச் சமூகத்தில் எண்ணிக்கையில் மிகக் குறைந்த ஒரு வட்டம் ஆழ்ந்த ரசனை கொண்டதாக இருந்திருக்கக் கூடும். அவர்கள் படைப்புகளிலிருந்து பெற்ற அனுபவம்தான் நேற்றைய இலக்கியத்தின் முக்கியமான பகுதிகளையேனும் நமக்குக் கொண்டு வந்து தந்திருக்கிறது. அந்தச் சிறுபான்மை இன்று விரிந்திருக்கிறது. இலக்கிய ஈடுபாடு கொள்பவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. என்றாலும் தாய்மொழி சார்ந்து இலக்கிய அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பு பிற இந்திய மொழி வாசகனைவிடவும் தமிழனுக்கு மிக மிக அதிகம். ஆனால் பல இந்திய மொழி வாசகர்களுடன் ஒப்பிடும்போது தமிழன் பெற்றிருக்கும் இலக்கிய அனுபவம் பலவீனமாகவே இருக்கிறது. இதுதான் 'நம் பிரச்சினை.

நேற்றைய வாழ்வை பொற்காலமாகவும் இன்றைய வாழ்வைத் தாழ்வாகவும் பார்ப்பது அபத்தமான பார்வை. நிகழ்காலத்தை நாம் எப்படித் திரைப்படங்கள் வழியாகப் பார்க்கிறோமோ அதேபோல் வரலாறு சார்ந்த கற்பனையினூடாகச் சென்ற காலத்தைப் பார்க்க விருப்பம் கொள்கிறோம். மனிதர்கள் சமத்துவமாக வாழ்ந்த காலம் நமக்கு நேற்றும் இல்லை; இன்றும் இல்லை. ஏற்றத் தாழ்வுகள், வேற்றுமைகள் தரும் இடைவெளியை நொறுக்குவதற்கான பிரக்ஞை பூர்வமான முயற்சி இன்றுதான் மிக அதிகம், சறுக்கல்களும் தடைகளும் இருந்து கொண்டிருக்கின்றன என்றாலும். அப்படிப் பார்க்கும்போது இந்த நூற்றாண்டுதான் தமிழனின் பொற்காலம். பல கொடுமைகளையும் எதிர்கொள்ள நேரும் பொற்காலம்.

பேச்சு

நிறையப் பேசுகிறேன்
போலிருக்கிறது எனக்குள்
களைப்பு தோன்ற

பேச்சு குறித்து
குறிப்பிடும்படியாக ஏதுமில்லை
ஆனால்
எதற்கும்
தீர்வு சொல்லாதது என் பேச்சு

எந்த யூகங்களுக்கும்
இடம் கொடுக்காது என் பேச்சு

எந்த வண்ணப்பூச்சு மெருகேற்றினாலும்
ஜொலிக்க விரும்பாது என் பேச்சு

எந்த வட்டத்திற்குள்ளும்
சுற்றிக் கொண்டிருக்காது என் பேச்சு

நிறையப் பேசுவேன்
போலிருக்கிறது எனக்குள்
களைப்பு தோன்ற

கேட்கவேண்டிய கட்டத்திற்கு
நீங்கள் வரத்தான் போகிறீர்கள்
ஆவல் உந்த...

அ. கார்த்திகேயன்



படிப்பகம்

www.padippakam.com

கும்பகர்ணனின் நோய்

டாக்டர் ஔவை. மெய்கண்டான்

ஒரு இலக்கியம் என்பது படைப்பாளன் வாழும் சமூகத்திலிருந்து உருவாகின்றது. சமூக வாழ்க்கையை நடப்பியல் நெறியில் அது காட்டுகிறது. இலக்கியத்தில் வரும் கதாபாத்திரங்கள் நம்மிடையே உலவும் மனிதர்களைப் பிரதிபலிப்பவர்களாக இருந்தால் தான், உலகியல் வழக்கில் நிலைத்து நிற்க முடியும். கற்பனைக்கு எட்டாத மாந்தர்கள் உள்ள கட்டுக் கதைகளில் கூட, யதார்த்த நிகழ்ச்சிகளும் உண்மையும் கலந்திருத்தல் அந்த இலக்கியம் நிலைபெற்று, வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. என்றும் இன்றும் உள்ள இலக்கியச் செல்வமாய் விளங்கும் கவிச் சக்கரவர்த்தி கம்பரின் இராமகாதை இந்த இலக்கிய இலக்கணத்திற்குச் சான்று; கம்பனில் தோய்ந்த அறிஞர் பலர், அவர்தம் காவியப் புலமையை படைப்பின் சிறப்பை ஆய்வுகள் மூலம் இலக்கிய உலகிற்கு உணர்த்தியுள்ளனர். மருத்துவ உலகிற்கு இக்கதை மூலம் கிடைக்கப் பெ[illegible] ஒரு மிகச்சிறந்த மருத்துவச் சான்றுதான் கும்பகர்ணன் என்ற கதாபாத்திரத்தின் நோய்.

கூற்றையும் ஆடல் கொண்ட கும்பகர்ணன் சதா காலம் உறங்குவதும் விழித்ததும் வியப்புறு வண்ணம் உண்பதும் மிகச் சிறந்த உருவகமாக உரைக்கப்பட்டிருப்பதை வைத்துத்தான் அவனின் நோயின் பின்னணியை நம்மால் ஆராய முடிகிறது. எல்லை ஒன்று இன்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயல்வதால் தமிழ்ச்சாதி, அமரத்தன்மை வாய்ந்தது என பாரதி குறிக்கிறார் என்றால், குறியீடுகள்தான் அடிப்படை மூலக் கூறாக மொழிக்கு மட்டுமல்ல, அறிவியல் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவன. கம்பன் "தேவ பாடையில் இக்கதை செய்தவர் மூவர் ஆனவர் தம்முளும் முந்திய நாவினான் உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் இது உணர்த்திய பண்பரோ' - எனக்கூறி, வால்மீகி, வசிட்டர், போதாயனர் என்ற மூவரின் கதையையும் தழுவித் தமிழில்



படிப்பகம்

www.padippakam.com

உரைத்ததாகக் கூறினாலும், கம்பன் வால்மீகி இராமாயணத் தைப் பெரிதும் தழுவி எழுதி யதாகத்தான் கருதப் பெறுகிறது. தழுவிய கதை என்றாலும், தமிழ்ப் பண்பாட்டுடன் கவிநயத்தைக் கலந்து காப்பியமாக ஆக்கப்பட்ட கம்பராமாயணத்தில் ஒவ்வொரு அம்சத்திலும் மிகுந்த அக்கறையுடனும், நுணுக்கங்களையும் குறைக்காமல் ஒரு மிகச் சிறந்த சிற்பியைப்போல் வடித்துத் தந்துள்ளதால், கும்பகர்ணன் என்ற பெயர் கேட்டவுடனேயே நம் கண்முன் தோன்றும் உருவக அமைப்பை உணராதார் இருக்க முடியாது. கும்பகர்ணன் நோயினைப் பற்றி அறிவதற்கு முன்னால் சில மருத்துவ அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்வோம்.

உறக்கம் என்பது உடல் உறுப்புகளின் ஓய்வு நேரம். சாதாரண சராசரி மனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கினை உறக்கத்தில் கழிக்கிறான். மனிதனுக்கு உறக்கம், விழிப்பு நிலை என்ற சுழற்சி மிகவும் ஒழுங்காக நடப்பது அவனது உயிரியல் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது. வீட்டில் வளரும் நாய், பூனை முதலியன நன்கு உண்டு உறங்குவதும், பெருங்கடலில் வாழும் பறவை இனத்தைச் சேர்ந்த 'அல்பட்ராஸ்' முதலியன பல நாட்கள் உறங்கா மலேயே உயிர் வாழ்வதையும் காணும்போது, உறக்கம் மிருகங் களிடையே எப்படி மாறுபட்ட குணம் கொண்டது என்பதை உணரலாம். பெரும்பாலும் அனைத்து மிருகங்களுக்கும் இந்த உறக்கம் விழிப்பு நிலை மாறிமாறிவரும் சுழற்சி லயம் (Circadian Rhythm) கொண்டது. வெளிநாட்டுக்குப் பயணம் செய்பவர்களுக்கும் இந்த லயம் மாறுவது மிகுந்த சிரமத்தைத் தருவது உண்டு. பொதுவாகக் குழந்தைகள், பெரியவர்களைவிட அதிகம் தூங்குவதைக் காணலாம். உறக்கம், ஒருவனின் உருவ அமைப்பு, உழைப்பின் முறை, வாழ்க்கை நெறி இவைகளைப் பொறுத்து அமைகிறது. முன்பு தூக்கத்தினை வெறும் விழிப்பற்ற, செயலற்ற ஒரே சீரான அமைதி நிலையாக அறிஞர் கருதினர். ஆனால் உறக்கத்தைப் பற்றி ஆராய்ந்து, தூக்கம் பல்வேறு நிலைகளில் படிப்படியாகச் சென்றுவரும் சுழற்சியைக் கொண்டது என்றும், மின்கதிர் வரைபடம் மூலம் மூளை நரம்பணுக்கள் உறக்கத்தில் எவ்வாறு வேலை செய்கின்றன என விவரித்த பின்தான், உறக்கத்திலும் மூளை விழித்திருக்கிறது என்பதை அறிவியல் பூர்வமாக அறிய முடிந்தது. உறக்கத்திலும் கண் அசைவு ஏற்படுவது மட்டுமன்றி, வேகமாகக் கண் ஓடும் நிலையும் ஏற்படுகிறது. இந்தக் கண்ணோட்ட நிலையில்தான் (Rapid Eye Movement Stage) கனவு தோன்றுவதாகவும் தெரிகிறது. பொதுவாக உறக்கத்தினைக் கண்ணோட்ட நிலை, கண்ணோட்டமற்ற நிலை என இரண்டாகப் பிரிப்பார்கள். தூக்கம் என்பது கண்ணோட்டமற்ற நிலையில் தொடங்கி படிப்படியாக 4 அங்கங்களைத் தாண்டி, உறக்கத்தின் ஆழம் அதிகமாகி, சுமார் ஒன்றரை மணி நேரத்தில் கண்ணோட்ட நிலையை அடைகின்றனர். இத்தூக்க நிலையில் கண்கள் வேகமாகவும், பக்க அசைவு மட்டுமின்றி மேலும் கீழும்கூட ஓடுவதைப் பதிவு செய்துள்ளனர். கண்ணோட்ட நிலையில் இருந்து எழுப்பப்படும் பொழுதுதான், கனவு கண்டதாகப் பொதுவாக மக்கள், உணர்வதும், அதை மிகவும் தெளிவாக நினைவில் வைத்திருப்பதாகவும் உணர்வர். இந்த நான்கு அங்கங்கள் கொண்ட கண்ணோட்டமற்ற நிலையும், கண்ணோட்ட நிலையும் ஒரு சுழற்சியாக மாறிமாறி, மனிதன் ஒருமுறை தூங்கும்போது, வந்து கொண்டேயிருக்கும். பெரும்பாலும் கண்ணோட்ட நிலை விடியலில் நடப்பதாகவும் கண்டுள்ளனர். இந்த சுழற்சி 4-5 முறை வந்து போய்க் கொண்டேயிருக்கும்.

இரண்டு முக்கிய வேதிப் பொருட்கள் தூக்கத்திற்கு அவசியம். 'சிராடோனின்' (5HT) என்பது முகுளத்தின் இராஃபே பகுதியில் இருந்து சுரப்பது; அதேபோல் 'நார் அட்ரினலின்' என்பது மூளையில் உள்ள 'லோகஸ் செருயஸில் (Locus Coeruceus) இருந்து ஊறுவது. இந்த இரண்டு 'அமைனோ அமில வகுப்பில் உள்ள வேதிப் பொருட்கள் ஒருபுறம் - அதாவது இவைகளைச் சுரக்கும் நரம்பணுக்கள், விழித்திருக்கையில் அதிகம் வேலை

படிப்பகம்

www.padippakam.com

செய்கின்றன. இதன் அளவு குறையக் குறைய கண்ணோட்ட மற்ற உறக்கநிலை, தொடங்க ஆரம்பிக்கிறது. மறுபுறம், 'அசிட்டைல் கொலீன்' (Acetyl choline) நடுமூளை (Midbrain) இணை மூளை (Pons), முகுளம் இவற்றிலுள்ள நரம்பணுக்களில் இருந்து உற்பத்தியாவது; விழித்திருக்கையில் குறைவான அளவில் இருந்து, கணணோட்டம் இல்லா உறக்க நிலையில் அதிகரிக்க ஆரம்பித்து, கண்ணோட்ட உறக்க நிலையில் உச்ச அளவினை எட்டுகிறது.

இந்த இரண்டு வேதிப் பொருட்களின் உயர்வு தாழ்வு அளவுகளைப் பொறுத்துத்தான் தூக்கம் விழிப்பு நிலை என்ற சுழற்சி நமது உடலில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நமது உடலின் தட்ப வெட்ப அளவு, நாளமில்லாச் சுரப்பிகளின் இயக்குநிலை மற்றும் உடலின், ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடு (Metabolish) அனைத்தும் உள்ளுறை கடிகாரத் தின் சுழற்சிக்குப் பணிகின்றன' என்பதை அறிவியல் வல்லுநர்கள் நிரூபித்துள்ளனர். ஒருவன் 'உறங்கிக் கொண்டிருக்கையில், கணணோட்டமற்ற உறக்கநிலையின் 3-வது அங்கத்திலோ (Nrem) அல்லது 4வது அங்கத்திலோ இருந்தால் அவனை எழுப்புவது மிகவும் கடினம். இந்த நிலையில் உள்ள கும்பகர்ணனைத்தான் எப்படி எல்லாம் எழுப்புகிறார்கள், என்பதைக் கம்பர் ஒரு திரைப்படக் காட்சியாகவே பாடிக்காட்டி யுள்ளார்.

"சிங்கரர் நால்வர் சென்று,
அக்கிரியனான் கிடந்த
மங்குல் தோய் வாயில்
சார்ந்து, மன்னநீ உணர்தி
என்னத்
தம்கையின் எழுவினாலே
தலைசெவி தாக்கப் பின்னும்
வெங்கணான் துயில்கின்
றானை வெருளியால் இனைய
சொன்னார் என்றும்"

"அங்கைகள் தீண்ட அங்கி
ஆதிசெவி அதனினுடுசங்
கொடு தாரை, சின்னம்,
சமைவுறச் சாற்றலுற்றார்.
கோடிகல் தண்டு, சுடம்,
குந்தம், வல்லோர்கள் கூடித்
தாடைகள், சந்து, மார்பு,
தலையெனும் இவற்றில் தாக்கி
வாடிய கையராகி"....

ஈர் ஐந்நூற்று இராக்கதர்கள்
வன்தொழிலால்
துயில்கின்ற மன்னவன்தன்
மாடணுகி, நின்றிரண்டு
கதுப்புமுற, நெடுமுசலம்
கொண்டடிப்பப் பொன்
றினவன்
எழுந்தாற்போல, புடை
பெயர்ந்தங்கு எழுந்திருந்தான்"

ஞாபகத் துண்டு

எங்கள் வீட்டில்
பெட்டி ஒன்று இருந்தது
சிற்பங்கள் செதுக்கிய
சின்னமரப்பெட்டி அது
பாட்டியின் உயிராய் இருந்தது.
உள்ளே என்ன இருக்கிறது
என்பது அப்பாவுக்கும்
தெரியாதாம்.
ஆராய நெருங்குகையில்
பாட்டி புயலர்வாள்
பக்கவாதத்தில்
படுத்திருந்தபோது கூட
அதைத் தன்
படுக்கையிலேயே வைத்திருந்தாள்.
ஒரு மழைக்கால இரவில்
அவள் மரணித்தபின்
கைக்கு வந்த பெட்டியில்
கிராப்பு வைத்த ஒருவருடன்
பாட்டி சிரித்திருந்தாள்.
பழைய புகைப்படத்தில்.
அப்பா சொன்னார்
அது எங்கள்
தாத்தா இல்லையென்று?

- செ. காமராசன்

படிப்பகம்

www.padippakam.com

என்கிறார் கம்பர்.

விழித்தெழுந்த கும்பகர்ணன் உண்ணுகின்ற உணவினைப்பற்றிக் கற்பனையாக மிகைப்படுத்திக் குறிப்பிட்டிருந்தாலும் இந் நோயில் பசி அதிகமாக இருப்பதுமட்டும் தெரிகிறது. முதலில் பசி உருவாகும் விதத்தினைப் பற்றி சிறிது ஆராயலாம்.

பசி என்பது இயற்கையாக உடலின் உட்கூறு ஆகும். இந்த உணர்வு மிகவும் உந்து சக்தி கொண்டது. பசியால் வாடிய மனிதர்கள் இதனை நிச்சயம் உணர்ந்திருக்கக் கூடும். உடலுக்குத் தேவையான உணவு தன் அன்றாட இயக்கத்திற்கு இன்றியமையாதது. ஊன்ம ஆக்கச்சிதைவு மாறுபாடு (Metabolish) மனித வாழ்வின் சுழற்சியில் உணவின் சக்தியை நம்பி இயங்குகிறது. உடலின் உணவின் சேமிப்பு மற்றும் தின அளவு குறையும் பொழுது, மூளைக்குச் சமிக்ஞைகள் செல்கின்றன. உணவினைப் பெறுவதற்குத் தேவையான உணர்வினை மூளை உருவாக்கு கிறது. வயிற்றுப் பகுதியில் ஏற்படும் வலிபோன்ற உணர்வினை நாம் பசியாகப் புரிந்து கொள்கிறோம். பசி உள்ளிருந்து உருவாகும் உணர்வு மட்டுமல்ல, வெளித்தூண்டுதல்களும், பழக்கங்களும் கூட பசியுணர்வைத் தூண்டக்கூடியவை. உணவின் மணமும், காட்சியும் தேவை இல்லாத நேரத்தில் கூட, பசியுணர் வினை உருவாக்கிவிடுகின்றன.

ஊன்ம மாறுபாட்டில் இயற்கை, பசி-திகட்டிய நிலை (மனநிறைவு) இரண்டையும் மூளையின் உள்பகுதியான ஹைபோதாலாமஸ் (Hypothalamus) என்ற இரட்டை மூளையின் (Diencephalon) ஒரு பகுதிதான், முக்கியமாகக் கட்டுப்படுத்துகிறது. பெருமூளை யின் அடிப்பாகத்தில் உள்ள இப்பகுதி பாதிக்கப் பட்டவர்கள் அதிகமாக உண்ணுவதும், அளவுக்கதிகமாக எடைகூடுவதும் உண்டு. ஹைபோதாலமஸின் வெளிப் பகுதி, பசி உணர்வைத் தூண்டும் சக்தி கொண்டது. உட்பகுதி, மனநிறைவு (திகட்டு நிலை) உணர்வினைத் தூண்டும் கட்டுப்பாட்டு நரம்பணுக்களைக் கொண்டது. பொதுவாக இந்த நரம்பு அணுக்கள், இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவினை அறியும் சக்தி கொண்டவையாக உள்ளன.

மூன்று முக்கிய தூண்டுதல்கள் இந்தப் பசியுணர்வைக் கட்டுப்படுத்துகின்றன.

1. குருதிச் சர்க்கரை அளவு
2. வயிறு நிறைந்த நிலை
3. உடலின் வெப்பநிலை.

மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, உண்ணும் பழக்கம் உடலின் எடையைப் பொறுத்து மாறுவதில்லை.

உளவியல் மாற்றத்திலும், உணவின் அளவு மாறுவதும் உடலின் எடை கூடுவதும் குறைவதும் உண்டு. காலநேரக் கணக்கீட்டில், மனித உடலுக்கு உணவின் தேவையை உணர்த்துவது ஊன்ம மாற்றத்தில் முக்கிய அங்கமாக உள்ளது. அதேபோல் உணவின் சுவை, மணம், தோற்றம் நமக்குள் உண்ணும் ஆசையைத் தூண்டிவிடுவதை அனைவரும் அறிவோம். இவ்வாறு பசி என்பது, புற அகத் தூண்டுதல்களினால் உடலின் உள் உணர்வினை உருவாக்கி உணவு உண்ணும் தேவையைச் சுட்டிக் காட்டும்; பசி, ஹைப்போத லாமஸின் வேதியியல் வெளிப்பாடு என்பதை உணரலாம். இப் பகுதியில் ஏற்படும் பாதிப்பு, உணவு உண்ணுவதின் அளவினை ஆச்சரியப்படத்தக்க வகையில் அதிகரிக்க வைப்பதை அறிஞர்கள் நிருபித்துள்ளனர்.

விழித்தெழுந்த கும்பகர்ணன் உண்பதைக் கம்பர் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்.

ஆறுநூறு சகடத் தடிசிலும், நூறுநூறு குடங்களும் நுங்கினான்,

"ஏறுகின்ற பசியை எழுப்பினான், சீறுகின்ற முகத்து இருசெங்கணான்.

எருமை ஏற்றை ஓர் ஈர் அறுநூற்றையும் அருமையின்றியே தின்றிரை ஆறினான்.

பெருமை ஏற்றது கோரும் என்றே பிறங்கு உருமை ஏற்றைப்பிசைந்து எரிஊறுதுவான்".

எனக் கும்பகர்ணன் பசி ஆறினான், எனக்கூறுவதில் இருந்து அவன் சுவைக்காக உண்ணாமல், பசி என்ற உள் உணர்வின் தூண்டுதலின் பேரில்தான் உணவு அருந்தினான் எனத் தெரிகிறது. இவ்வாறு கும்ப கர்ணன் அளவுக்கதிகமான உறக்கமும், உண்ணும் பழக்கமும் கொண்டிருந்தது எதனால் என்பதை இனிக் காண்போம்.

கும்பகர்ணனின், இந்த அளவுக்கதிகமான உறக்கம் கொண்டு கழிபேரிறை கொள்ளும் நோயினை 'க்ளீன் லெவின் நோய்க்கூறு' (Kleine Levine Syndrome) என அழைக்கின்றனர்.

1925 ல் க்ளீன் (Kleine) என்ற ம்ருத்துவரும். *1936* ல்

படிப்பகம்

www.padippakam.com

லெவின் என்ற அறிஞரும், சேர்ந்து இந்த விந்தையான நோய்க் கூற்றினைப் பற்றி முதன்முதலில் மருத்துவ உலகிற்கு அறிவித்தனர். இந்நோய் பெரும்பாலும் இளவயது ஆண்களையே அதிகம் பாதிக் கின்றது. இது நன்றாக இருக்கும் இளைஞர் களுக்கும் திடீரென்று தோன்றிச் சிலகாலம் இருந்து மறையும் தன்மை கொண்டது. ஒரு நாளைக்கு 18 மணி நேரத்திற்கு மேலாகத் தூங் குவர். உண்ணு வதற்கும், இயற்கை அழைப்பிற்கு மட்டும் எழுவர். பெரும்பாலும் அவர்கள் குழப்ப நிலையிலும் துயரார்ந்த நிலையிலும் இருப்பர். கிரிட்ச்லி (Critchley) என்பவர், எட்டு இத்தகைய நோய் கண்டவர்களைச் சேகரித்து, ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட் டுள்ளார். (Brain - 1992) அதன்படி இந்நோய், இளவயது முதல் 45 வயது வரை உள்ளவர்களைப் பாதிப்பதாக் கண்டறிந்துள் ளார். ஒருமுறை இந்தப் பாதிப்பு வந்தால் சுமார் 2 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை தொடர்ந்து இருப்ப தாகவும், மாறி மாறி 2 முதல் 12 ஆண்டுகள்வரை வருவதா கவும் குறித்துள்ளார். இந்த ஆழ்ந்த உறக்கத்தில் கூட, உறக்கப் படிநிலைகள், அதாவது, கண்ணோட்ட மில்லாத 4 நிலைகளும், கண் ணோட்ட நிலையும் மாறிமாறி ஒழுங்காக வருவது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் இந்த உறக்கம், ஆழ்ந்த நிலையும், அதிக மணியளவும் கொண் டிருந்தாலும் இயற்கைத் தன்மை மாறாமல் இருப்பது குறிப் பிடத்தக்கது. உறக்க நிலையில் இருந்து எழுந்தவுடன் உண்ணும் உணவின் அளவு, மூன்றுமடங்கு அதிகமாக இருப்பதையும் அறிவியல் பூர்வமாக நிரூபித்துள்ளனர். இந்நோய், நோயாளி வளர வளர முதுமை யடையும் பருவத்தில் தானாக மறைந்து விடும் அதிசயிக்கத்தக்க ஒன்று. இந்நோயின் காரணத்தைக் கண்டறிய, அறிஞர்கள் பல் வகை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். பெரும்பாலும் ஹைப்போ தாலமஸ் பாதிப் பினால்தான் இந்நோய் வரும் என்பதாக எண்ணப்பட்டாலும், உடற்கூறு மூலம் இது இன்னும் நிச்சயமாக நிரூபிக்கப்பட வில்லை. உறங்கி எழுந்த நிலையிலும் உள்ளத்தில் இருந்து உருவாகும் எண்ணங் கள் சீராகவும் சிறப்பாகவும் இருப்பதனால்தான் கும்ப கர்ணன், தன் அண்ணனைப் பார்த்து, "திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை வீட்டிலையோ, இது விதியின் வண்ணமே," எனவும், "தையலைவிட்டு, அவன் சரணம் தாழ்ந்து, தம்பியோடு அளவளாவுதல் உய்திறம்" என்றெல்லாம் அறிவுரை கூறுவதில் இருந்து, நெடுங் காலம் தூங்கினாலும் அவையில் அண்ணனிடம், அண்ணல் மனை வியைக் கவர்ந்தது தவறு என "வளமை கூறப் பேசுவது மானம்'. இடை பேணுவது காமம், கூசுவது மானுடரை! நன்று நனி கொற்றம்" என்று 'கூறுவதில் இருந்து உணரலாம். அவன், அறவழி தவற நினைக்க வில்லை. செஞ் சோற்றுக்கடன் பிடரியைப் பிடித்துத்தள்ள, "பொன்றுவென்"; என வாதிடுகிறான். மேலும் க்ளீன் லெவின் நோய் உள்ளவர்கள் தாழ்வுமனப் பான்மை கொண்டவர்களாகவும் திகழ் வார்கள் என்பதனால்தானோ என்னவோ, கும்பகர்ணன் போர்க்களத்தில் மடியுங் காலையில் கூட "மூக்கிலா முகம் என்று முனிவர்களும் அமரர்களும் நோக்குவார்; நோக்கமை நுண்கணையால் என் கழுத்தை நீக்குவாய்!. நீக்கியபின் நெடும் தலையைக் கருங்கடலுள் போக்குவாய்" என்று வேண்டுகிறான். இதில் அவன் படிப்படியாக அடுக்கு கின்ற வார்த்தைகள் கம்பனின் அறிவியல் நோக்கிற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இறந்தபின்கூட மூக்கிலாமுகம் என நோக்குவார் என வருந்து வதும், அம்முகத்தை சாதா ரணக் கடலில் எறிந்தாலும், தெளிந்த நீர்க்கடலில், உள்புறம் எங்கே தெரிந்து விடுமோ என அஞ்சிக் கருங்கடலில் போக்கச் சொல்வது கும்பகர்ணனின் எண்ணத்தின் ஆழத்தையும், இந் நோய் உள்ளவர்களின் அடி மனத் தோற்றத்தையும் தெளிவாகக் காட்டுகின்றது. இலக்கியத்தின் மூலம் அறிவியற்கூறுகளை ஆராய முற்படுகையில் கும்ப கர்ணனின் அறிகுறிகள் க்ளீன் -லெவின் நோயின் முதற் சான்றாகத் தெரிகிறது; லண்டன் மனநோய் மருத்து வமனை மருத்துவர் ஜே.டி. பார்க்ஸ் என்பவர் முதன் முதலில் மருத்துவ அறிக்கை ஒன்றில் (1986) கும்பகர்ணனின் நோயைக் குறிப்பிட்டார். அங்ஙனம் அவர் குறிப்பிட்ட தற்குக் காரணம், அவர் பிரிட்டிஷ் நூலகத்தில் உள்ள கும்பகர்ணனின் படம் ஒன்றைப் பார்த்ததினால் என்றால், கம்பனின் வரிகள் அதனைச் சித்திரமாக நமக்கு உணர்த்துவதைத் தமிழ் மக்கள் அறிந்து பெருமைப்பட வேண்டும். இலக்கியம் பரி மாறப்பட்ட இலை யில் அறிவு பசியாறும் நிலையினை இத்தகைய ஆய்வுகளில் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்

தேவகாந்தனின் 'நெருப்பு'

விலை ரூ.30

கிடைக்குமிடம் : பாரி நிலையம், சென்னை

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களில் 'இலக்கு' தேவகாந்தன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். இவரது எழுத்தில் வாசகர்கள் தங்களைத் தமிழ்நாட்டு நிகழ்வுகளோடு அடையாளம் காணுகிற அண்மை இருக்கும். தமிழ்நாட்டு வாசகர்களிடமிருந்து அந்நியப்படுகிற இலங்கைத் தமிழ்நடையை அதிகம் கையாளாமல், தமிழ்நாட்டு எழுத்தாளரே எழுதுவதுபோல, வாசிப்புக்கு இதமாக அவரது நடை இயல்பான தன்மையில் இருக்கும்.

'தாமஸ் ஹார்டி' யின் 'வெஸக்ஸ்' நாவல்களில் விதி மனித வாழ்வில் கோரமாக விளையாடுவது போல, 'விதி' என்கிற நாவலில், தமிழகத்துக்குப் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர் வாழ்வை விதி எப்படி சோகப்படுத்துகிறது என்று உருக்கமாக எழுதி ஒரு சிறந்த நாவலாசிரியராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள தேவகாந்தன், சமீபத்திய அவரது 'நெருப்பு' என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலம் ஒரு சிறந்த சிறுகதையாசிரியராகவும் நிரூபித்திருக்கிறார்.

'நெருப்பு' என்ற நூலின் தலைப்பு, உள்ளே உள்ள சிறுகதைகளில் ஒன்றின் தலைப்பாக இருந்தாலும், அக்கதைகள் அனைத்திலுமே, நெருப்பு ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருப்பதாய் பொருந்தியிருக்கிறது. அதுபற்றி 'என்னுரை'யில் தேவகாந்தன் அவர்கள் குறிப்பிடுகிறார் :

'சிருஷ்டிகர்த்தாவின் கருத்தியலோடு கூடிய கூர்மதியில்படும் அனுபவம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நெருப்புதான். அது உள் மனத்தே ஆழ்ந்து கிடந்து, கனன்று கொண்டே இருக்கும். அந்த நெருப்பின் வெம்மை உணர்வு சூல்கொண்டு படைப்பாகும் போது, தன்னை இனம் காட்டாமலே கூடப்பிறந்துவிடுகிறது. அதுவே இலக்கியமாகும் உரிமை கோரமுடியும். ஆக சிருஷ்டிகர்த்தாவின் கருத்தியல் வழி அவன் இனங்கண்ட அனுபவத்தையே நான் இங்கு 'நெருப்பு' எனக் குறிப்பிடுகிறேன்!

அனுபவ நெருப்பு நீண்டகாலமாக மனத்துள் ஆழ்ந்துகிடந்து தன் தன்மை இழக்காமல் கனன்று கொண்டிருந்தது. படைப்புக்கதி மிகுந்த ஒருகணத்தில் வெளிப்பாடடைந்த கதை 'எங்கும் இரண்டாய்...! இந்திய மண்ணிலும் இலங்கை மண்ணிலும், உடமை வர்க்கங்களால் உடைந்து ஓடாகிப் போன 'அருணகிரி' என்கிற மலையகத் தமிழன் 'வாழ்க்கைங்கிறது' ஒண்ணோட ஒண்ணு - எங்குமே ரெண்டா இருக்கிற மனுஷ சாதிக்குள் நடக்கிற போராட்டம்தான். போராட்டம்னாலே, அங்கே ரெண்டு சாதி - இனம் - வர்க்கம் இருக்கும்னுதான் அர்த்தம். இங்கே ரெண்டு சாதி இருக்கு; இந்தியாவிலே ரெண்டு சாதி இருக்கு; எங்குமே ரெண்டு சாதிதான் இருக்கும்" - என்று ஏங்குவதை இக்கதை சொல்கிறது.

தேவகாந்தன் எழுத்தில் இருக்கும் இன்னொரு சீரிய அம்சம், அவரது எழுத்து நேர்மை. இலங்கைத் தமிழருக்கு இங்கே ஆதரவு குறைந்து போனதற்கு அவர்களே காரணம் என்று தமது குறைகளையும் 'விதி' என்ற தனது நாவலில் குறிப்பிட்ட அவர், 'ஞானத்தீ' என்ற சிறுகதையில் இன்னொரு நேர்ய விமர்சனமும் செய்கிறார். சிங்களவர் அனைவருமே இனவெறி பிடித்த தமிழரை அழிக்கும் அவாவினர் - என்று சித்தரிக்கப்பட்டுள்ள நிலைமைக்கு மாறாக, சிங்களர்களிலும் தமிழ் இனத்துக்காக மனம் கசிபவர்களும், மனிதாபிமானம் உள்ளவர்களும் இருக்கவே செய்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

கொழும்பில், பிரேமதாசா கொலையுண்ட போது, தமிழருக்கெதிராய் குரோதத் தீ கொழுந்து விட்டெரிகிற நேரத்தில் அவர்களை உக்கிரப்படுத்த உதவும் தன் பலகோடி ரூபாய் வருவாய் உள்ள சாராயக் கிடங்கை தானே தீ வைத்து எரித்து, இலங்கை எரித்த எத்தனையோ 'தீ' களில் இது 'ஞானத் தீ' என்று மனநிறைவு கொள்கிற 'சிறிசேன' என்கிற மனிதநேயப் பண்பாளரைச் சித்தரிக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

'புராணத்தின் எந்தப் பகுதியையும் எடுத்துக் கொண்டு தன் விருப்பம் பட்ட கோணத்தில் பார்க்க எழுத்தாளனுக்கு உரிமை உண்டு' என்று பிரகடனப்படுத்திக் கொண்டு அகலிகையின் வாழ்வை வித்யாசமான கோணத்தில் தனது 'சாப விமோசனத்தில்' காட்டிய புதுமைப்பித்தன் போல, ஏசுபிரானின் வாழ்வில், 'பாவம் செய்யாதவர் முதல் கல்லை எறியட்டும்' என்று ஒரு விபச்சாரிக்கு நியாயம் வழங்கிய கதையை 'தேவகாந்தன்' வேறு கோணத்தில் சாட்சிப்படுத்தியுள்ளார், 'தீர்ப்பு' என்கிற கதையில். 'இது எந்த காப்பியத்தின் வசனமுமல்ல; இது ஒரு வசன காவியம்' என்று கி. வா. ஜ. ஒருமுறை ஒரு கதைக்குக் குறிப்பு எழுதியது போல, 'தீர்ப்பு' கதையின் வசன நடை, ஒரு வசன காவியம் எனலாம். ஜெயகாந்தன் அவர்களின் மொழி நடை போன்று, காம்பீர்யமும், கனமும் மிக்கதாக நடை இக்கதையில் அமைந்துள்ளது.

'மனிதனுக்குக் கடவுள் அவசியம், இல்லா விட்டால் அவன் மகிழ்ச்சிப்பட முடியாது, மனிதனோ மகிழ்ச்சியோடிருக்கப் பிறந்தவன். அதனால் அவன் மகிழ்ச்சிப்படுவதற்காவது, செய்முறைப் பகுத்தறிவுக் கடவுள் இருக்கட்டுமென்ற ஜெர்மன் தத்துவ ஞானியான 'சான்டின்' கருத்தை ஆதார சுருதியாகக் கொண்ட கதை' 'சொன்னால் சொன்னதுதான்.

சுதுமலை பத்திரகாளி அம்மன்கோவில் தெய்வம் குழந்தையை இரண்டாகக் கிழித்துப் போடுவதாக உலவிவரும் ஐதீகத்தை மேலும் நீட்டி, அப்படிக் கிழித்தெறியப்பட்ட குழந்தை மீண்டும் உயிர்த்தெழுவதாக கற்பனை செய்து எழுதிய இக்கதை, 'என் மக்களுக்கு ஒரு கடவுள் வேண்டும் எனில் அவர் கருணை உள்ளவராகவும் இருக்கட்டும்' என்கிற ஆசிரியரின் சிருஷ்டித்தன அதிகாரத்தைக் காட்டும் ஒரு ஆவேசக்கனல்.

இலங்கை இனப் போராட்டத்தால், பெற்ற தாய், பிள்ளைகளைவிட்டு புலம் பெயர்ந்தவர்கள் பெறும் சோகங்களை 'வீட்டுத் தாய்' என்கிற கதையிலும், புலம் பெயராமல் அங்கேயே தங்கி, தீமூட்ட உதவும் நெருப்புப் பெட்டியும் வாங்க சக்தியின்றி பொசுங்கும் ஈழத்தமிழரின் நெஞ்சக் குமுறலை 'நெருப்பு' கதையிலும் காணகிறோம்.

சாம்பலான பின்னும் உயிர்த்தெழும் 'பீனிக்ஸ்' பறவை போல நகரத்து சாலை ஓரக்குடிசைகள் பிய்த்தெறியப்பட்டாலும், மீண்டும் உயிர்த்தெழுகிற நிர்ப்பந்தமே, வாழ்க்கை நெறியாகிப் போகிற சென்னைக் குடிசைவாழ் மக்களின் துயரத்தைச் சொல்வது 'போராட்டம்'.

சத்திய வேட்கை காந்தியோடு அணைந்து போய்விடவில்லை என்கிறது, 'சத்திய வேட்கை' என்கிற கதை. கொலை செய்துவிட்டவன் மைத்துனனாக இருந்தும், மனைவியின் இறைஞ்சலையும் மீறி உண்மையே பேசுகிற 'ராமு' அரிச்சந்திரனைப்போல அதனால் தன் தாம்பத்யமே குலைந்து போகிற நிலையிலும் 'சத்தியமாக வாழ்ந்துவிடுவதில் இருக்கிற இன்பம் வேறு எந்த சம்பவத்துக்கும் இல்லை 'என்று தீர்மானித்து மனைவியின் திரஙகாரத்தையும் மன நிறைவோடு ஏற்றுக் கொள்ளுகிறான். இப்படி எல்லாக் கதைகளுமே, வாழ்வில் காணும் அநீதிக்கெதிராய்க் கனல்வதாகவும், நியாய உணர்வை உயர்த்திப் பிடிப்பதாகவும் உள்ள ஆரோக்கிய சிந்தனைகளை உள்ளடக்கியதாக உள்ளன. அதிகப்படியான கதைகளின் களம் தமிழ்நாடாகவே இருப்பது, வாசகர்க்கு அந்நியம் தோன்றாமல் செய்கிறது.

எல்லாக் கதைகளுமே பத்திரிகைகளில்' வெளியானவைதான். அவ்வப்போது பத்திரிகையில் படித்த போது ஏற்பட்ட மனநிறைவைவிட, இப்போது தொகுப்பாகி வந்திருக்கிற நிலையில், அமைதியான வாசிப்பில் அற்புதமான சுக உணர்வை தருகின்றன.

–வே. சபாநாயகம்

"உன்னை நான் போகவிடமாட்டேன்"

- "I won't let you go"
- **இரவீந்திரநாத் தாகூர்**
- **விலை : ரூ. 110/- 1995.**
- **மொழியாக்கம் : கேட்டகி குஷாரி டைசன்**

வெளியீடு : யுபிஎஸ் பப்ளிஸர்ஸ் - டிஸ்டிரிபியூட்டர்ஸ் லிமிடெட், டெல்லி, பம்பாய், பெங்களூர், கல்கத்தா - இலண்டன்.

நோபல் பரிசுக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் வாழ்க்கையையும், அமரத்துவமான கவிதைகளையும், அபூர்வமான சில புகைப் படங்களுடன், விவரிக்கிற புத்தகம் இது. வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com

வரலாறு என்று வருகிறபோது, அந்தரங்கமான சில நிகழ்வுகளையும், அவற்றின் பாதிப்புகளால் விளைந்த கவிதைகளையும், வாழ்க்கைப் பின்புலத்தில் இது நமக்குச் சொல்கிறது. இவைகளே இந்த அழகான புத்தகத்தின் பலமும் கூட.

சிறுவன் தாகூர் பிறந்தது முதலே தனிமைப் பட்டவரே. பதினைந்துப் பிரசவங்களில் தளர்ந்துபோன தாயின் பதினான்காவது மகன்; கடைசிப் பிறப்பும் இறந்துபட, தாகூரே குடும்பக் கடைக்குட்டியாகிறார். குடும்பச் சிப்பந்திகளின் கவனிப்பில், அவரது நீண்ட நெடிய தனிமை பல மணி நேரங்களாக விரிய, சிறு வயதிலேயே பகற்கனவுகளாகத் தொடங்குகின்றன, கவிதை முளைகளும் விதைகளும்! இந்த ஆரம்ப காலத் தனிமைகளே தாகூரிடம் தனித்த முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை.

தாயைத் தனது பதினான்காவது வயதில் இழந்த தாகூருக்கு மூத்த சகோதரர் ஜோதிர்ந்திரநாத்தின் இளம் மனைவி காதம்பரி தேவியிடம்தான் தாய்ப் பாசம் கிடைத்தது. தாகூர்களின் தக்கூர் (Thakur) என்ற குடும்பப் பெயரின் ஆங்கில வடிவமே. பின்னர் தாகூர் (Tagore) ஆனது - குடும்பத்தில் இரண்டாவது மருமகளாக வெறும் ஒன்பது வயதில் மணமாகிப் புகுந்தவர் காதம்பரி - அப்பொழுது தாகூருக்கு ஏழு வயதுதான். இருவரும் உடன்பிறப்புகளாகவே வளர்ந்தார்கள். அக்கால வங்க இலக்கியத்தில் காதம்பரிக்கு மிகுந்த ஈடுபாடு இருந்ததால், முளைவிடுகிற அவளது ஆரம்பகாலத் தூண்டுதல்களாகக் கவிஞர் இருந்ததில் ஆச்சரியமில்லை! (பக். 55)

இளமைத் தாகூரின் இளம் மனத்தைக் கிளர்ச்சி செய்த இன்னொரு இளம்பெண் அன்னபூர்ணா துர்க்கூட் என்ற மராட்டா பெண். உயிர்த் துடிப்புள்ளவர் - பல மொழி வல்லுநர். அன்னா, அன்னா பாய் என்றெல்லாம் செல்லமாக அழைக்கப்படும் இவர் ஆத்மாராம் பாண்டுரங் துர்க்கட் என்ற டாக்டரின் மகள். பிரித்தானியாவில் படித்தவர். இளைஞர் தாகூர் முதல் தடவையாக இலண்டன் போகுமுன் இவர் தாகூர் குடும்பத்தில் தங்கி தாகூருக்கு ஆங்கிலம் பேசக் கற்பித்த ஆசிரியை! இளைஞர் தாகூர் ரொம்பவும் கூச்சப்பட்டாலும் இருவருமே உணர்ச்சிபூர்வமாக ஒருவரை ஒருவர் கவர்ந்ததற்கு ஆதாரங்கள் உண்டு என ஆசிரியை குஷாரி கூறுகிறார் (பக். 55) இவளுக்கு 'நளினி' என்று செல்லப் பெயரிடும் இளைஞர் தாகூர் - அதையே புனை பெயராகக் கொண்டு எழுதிய அன்னா பாய்! உணர்வுகளைப் பார்வையில் பிழியும் விழிகளும், கூர்த்த மூக்குமுள்ள இவரது படமே நம்மிடம் பேசிச் சிரிக்கிறது (!) என்றால், உயிரும் உணர்ச்சிகளுமாக இளைஞர் தாகூரைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை! தாகூரும் அப்படியே! அந்த வயதில் அவருக்குத்தான் எப்படிப்பட்டக் குத்தித் துளைக்கிற பார்வை! நேர்வகிடு எடுத்து இருபுறமும் பிடறி வரை அலங்கரிக்கிற சுருள் முடிகளும்!... இவைகளும் எந்த இளம் பெண்ணையும் கவரக் கூடியவைகளே! ஆனால் துரதிருஷ்டம். ஹெரால்டு லிட்டில்டேன் என்கிற பிரித்தானியரை மணந்த அன்னா, எடின்பரோவில் (1891-ல்) இளம் வயதிலே இறக்கிறார். தாகூர் இவரைக் கடைசி வரையில் மறக்கவே இல்லை; வயதான பின்னரும் தம் கவிதைகளில் நினைவு கூருகிறார்!

இளைஞர் தாகூரின் மனத்தைக் கவர்ந்த வர்களில், அவர் இலண்டனில் தங்கிய சகோதரிகளில் இரண்டாவதும் மூன்றாவதுமான சகோதரிகள் - இவர்கள் தாகூருக்கு ஆங்கிலமும், ஐரிஷும் போதித்தார்கள் - தாகூர் பதிலுக்கு வங்காள மொழியை போதித்தார். இவர்களுக்கு இறுதி வணக்கம் சொன்ன தாகூரின் கவிதைகளே 'இரண்டு நாட்கள்' ('துய் தீன்'). இந்தக் கவிதைகளையும் ஆங்கிலமாக்குவதற்குத் தூண்டச் செய்யாததற்கு மொழியாசிரியர் வருந்துகிறார் - நாமும் கூட! (பக். 56)

1880 -ல் இலண்டனிலிருந்து திரும்பிய இளைஞர் இரவீந்திரரின் படைப்பாற்றலை, அண்ணி காதம்பரியின் நட்பும் துணையுமே வளர்க்கின்றன. இளம் இரவீந்தரருக்குத் திருமணம் நிச்சயமான சமயம். மணமகள் பாபட்டரினிக்கும் இரவீந்தருக்கும் 1883 - ல் திருமணமானபோது, அவளுக்கு வயது பதினான்கு! இவள் பெயரை மிருளாயினி என தாகூர் பின்பு புதுமையாக மாற்றுகிறார். இதற்கு அப்புறம் 1884-ல், காதம்பரிக்கு இருபத்தைந்து வயது நிறைவதற்கு இரண்டரை மாதங்கள் இருக்கும்போதே, காதம்பரி தற்கொலை செய்து கொள்கிறார் - அபினி சாப்பிட்டு! இரண்டு நாட்களாக மருத்துவர்கள் உயிர் மீட்புக்குப் போராடியும் பயனில்லை. ஏப்ரல் 20-ல் (அல்லது 21-ல்), தாகூரின் இருபத்து நான்காவது பிறந்த நாளுக்கு முன்பே காதம்பரி மரணிக்கிறார்! இந்தத் தற்கொலை பத்திரிகைகளில் வெளிவராதவாறு தாகூர் குடும்பத்தினர் பெரும் தொகை செலவிட்டு மறைக்கிறார்கள்! இவரது தற்கொலையின் உண்மைக் காரணம் இன்றைக்கும்

படிப்பகம்

www.padippakam.com

தெரியாதவாறு தாகூரார்கள் சான்றுகளை அழித்தும், மௌனம் சாதித்தும் வெற்றியும் பெற்றார்கள்.

ஆனாலும் இளம் இரவீந்திரரின் திருமணத்திற்கு பின் காதம்பரி - முன்பும் ஒரு தற்கொலை முயற்சி தோற்றதும் உண்மை - தற்கொலை செய்ததற்கு ஆழமானப் பின்னணிக் காரணங்கள் இருக்கக் கூடுமோ? என்ற மொழியாசிரியரின் சந்தேகங்களுக்கும் அவரே இப்படிப் பதிலளிக்கிறார். "மேற்கத்தியக் காதல் இலக்கியங்களின் தாக்கத்தாலும், இருபாலரும் இணைந்துக் கற்கும் கல்வியின் தூண்டுதலாலும் இளைஞர்கள் பாலியலின் உச்சியில் இருந்த போது, பருவமடையாத சிறுமிகளை மணக்க நேர்ந்த சமூகக் கட்டுப்பாட்டால், பாலியல் விடிவுகளுக்குக் கண்ட வழிகள் : தங்கள் இளம் மனைவிகள் பருவமடையும் வரையில், தங்கள் வயதுகளுக்கு ஒத்த அண்ணிகளின் உறவில் திளைத்தார்கள்!"(பக். 57)

இவர்களுடைய காதல், உள்மனங்களைக் கிளர்ச்சி அடையச் செய்கிறது. காதம்பரியும், பெயருக்கேற்றவாறு ஒரு கலைஞரே. 'வால்மீகி - பிரதிபா' என்ற இசை நாடகத்தில் இளம் இரவீந்திரருக்கு இணையாக நடித்தவர். நுட்பமான உள்ளுணர்வுகளுள்ள இளம் பெண். குழந்தைகள் இல்லை. தனது ஒன்பதாவது வயதில் ஜோதீர்ந்திரநாத்துக்கு மனைவியானவர். அவரோ அவளைவிட பத்து வயது மூத்தவர். தன் மூத்த சகோதரர் சத்தியேந்திரநாத்தின் இளமையும் அழகுமான மனைவி ஞானாண்ட நந்தினியிடம் ஈடுபாடு உள்ளவர். இன்னொரு வதந்தி : காதம்பரி தன் கணவனின் சட்டைப் பையிலிருந்து ஒரு நடிகையின் காதல் கடிதத்தைக் கண்டு பிடித்தார் என்பது! 1883-ல், இளம் இரவீந்திரருக்கு மணப்பெண் தேடிய சமயத்திலிருந்தே அடிமன அச்சத்தாலும் அழுத்தங்களாலும் காதம்பரி நோயாளியானவர்.

இதன் விளைவாக, இந்த முக்கோணக் காதலை மையப்படுத்தி இரவீந்திரர் எழுதிய கவிதையே "சிதைந்த காடு" ('நாஷ்டனித்'): ஜோதிந்திர நாத் - காதம்பரி - இரவீந்திரர் ஆகியோரின் முக்கோணக் காதலே இதன் கரு. ஆனால் இதில் தற்கொலை இல்லை. இதுவே பின்னர் சத்யஜித்ரேயின் 'சாருலதா' திரைப்படமாக மலர்ந்தது. காதம்பரியின் தற்கொலை எழுப்பிய அடிமன ஆதங்கங்களே இந்துக் குடும்பங்களில் இளம் மனைவிகளின் பரிதாபங்களை பிற்காலத்தில் தாகூர் சித்தரிக்கச் செய்தன என்கிறார் மொழி ஆசிரியர் (பக்.58)

இவற்றை மட்டுமா? சிறு வயதிலேயே அனாதையானது, (தாயின் இறப்பால்), இளமைப் பருவத்தில் இயற்கையின் ஈடுபாட்டாலும் மனக் காயங்களை மருந்திட்டு மாற்றும் ஆற்றலாலும் வளர்ந்தது, பத்து வயது மனைவியால் எவ்வித வாழ்க்கை ஆதாரமும் இல்லாமல் போனது ஆகியவற்றையும் அவரது கதைகளும் கவிதைகளும் பிரதிபலிக்கின்றன. அவரது மனைவி மிருளாயினி இறந்த இரவு, 'தன்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று கூறிவிட்டு, இரவு முழுவதும் மொட்டை மாடியில் உலவியே கழித்ததும், அவள் நினைவாக அவர் எழுதிய கவிதையும் அவரை ஓர் அற்புதமான கணவனாகவும் அபூர்வக் கவிஞனாகவும் காட்டுகின்றன : (அடிக்குறிப்பு : பக் :249)

"காதல் நாணயங்களால் என் கைகளைநீ
நிறைத்துக் குவிக்கிறபோது - எனக்குள்
இருக்கிற ஏமாற்றின் ஆழத்தை அது
உனக்கு வெளிப்படுத்தவில்லையா?
என் கடன்களைக் கட்டிவிட்டு
வெற்றுப் படகில் நான் வெளியேறுவது
நல்லதல்லவா?
காதற் பசியில் நான் வாடுவதும்
நல்லதல்லவா?
உன் மனதில் தேன்நிறைய நிறைய
நீ வெளியேறியதும் வெகுதூரம்
போனதும்கூட நல்லதல்லவா?"

- என்பது கவிஞரின் கேள்வி (பக்.147) "ஒரு விண்மீனின் தற்கொலை" என்ற கவிதையின் அடியில் வரும் ஒரு சில வரிகள் காதம்பரி முதல் தற்கொலைக்கு முயன்றபோது கவிஞரின் மனவெழுச்சிகளின் பிரதிபலிப்பு :

"மறைந்தது - ஒரு விண்மீன் மறைந்தது!
இருட் கடலில்
ஆழ நடுநிசியில்
அகல விண்வெளியில்!
இங்கே - ஒரு மனம்
என் மனமே!
இருட் கடலில்
ஆழ நடுநிசியில்
அகல விண்வெளியில்
இறந்த விண்மீனுடன் நீ
உறங்க விரும்புகிறாயா?" (பக். 71)

படிப்பகம்

www.padippakam.com

காதம்பரி தேவியின் பழைய புகைப்படத்தைப் பார்த்து இரவீந்திரநாத் தாகூரின் நெஞ்ச அலைகள், இப்படி கவிதைக் குவியலாகச் சேருகின்றன :

வெற்றுத் தாளின் வெறுமைச் சித்திரமா நீ?
வானக் கோள்கள் மாதிரியும்
விண்மீன்கள் மாதிரியும்
உண்மையானவள் அல்லவா நீயும்?
என் வாழ்விலும் என் உலகிலும்
எவ்வளவு உண்மையாய் இருந்தவள் நீ?
வாழ்க்கைக் காட்டாறு
ஆயிரம் ஓடைகளாய்
மரணமணிகளை அடித்தபடி ஓடியபோது,
கண்களுக்குத் தெரியாதவரின் அழைப்பால்
நான் மென்மேலும் நடந்தபோது
ஆசைகளைச் சாலையாக்கி
இழுத்தபடி நான் நடக்கிறேன்!
ஆனால்?
சாலைகள் பிரிந்தபோது, நீ மட்டுமே
நின்ற இடத்தில் நிலைத்து விட்டாய்!
இந்தப் புல்வெளி - இந்தப் புழுதி
அந்த விண்மீன்கள் - சந்திரச் சூரியம்
இவற்றால் மறைக்கப்பட்ட நீ
ஒரு படமா? வெற்றுச் சித்திரமா?
இல்லை! இல்லவே இல்லை!
அசையாத கோடுகளாலும்
கேட்காத குரல்களாலும்
ஆனவள் நீ என்று யார் சொல்லுவார்கள்?
என் கண்கள் முன்பாக நீ இல்லாதவள்தான்!
என் கண்களுக்குள் நிலைபெற்றிருக்கிறாயே!
அதனால்தான் -
என் பசுமைகளின் பசுமை நீ!
என் நீலங்களின் நீலிமை நீ!
என் முழு உலகமும் அதன் உள்ளார்ந்த
அர்த்தங்களை உன்னில்தான் கண்டது!
யாருக்குமே இது தெரியவில்லை - எனக்கும்தான்!
உன் கீதங்களே என்
பாடல்களாகப் பதிவாகின்றன!
கவிஞனின் இதயத்திலுள்ள
கவிஞன் நீயே!
நீயா வெறும் படம்? வெற்றுச் சித்திரம்?
நீ வெறும் படமே அல்ல!
ஒரு நாள் காலை உன்னைக் கண்டேன்
இரவில் இழந்தேன்!
இருளில் உன் திரும்புதல் எனக்குத் தெரியாதது!
நீ படமே அல்ல! வெறும் படமும் அல்ல!

உலகப் புகழ்பெற்ற கவிஞனின் உள்ளப் பிரவாகங்களை எல்லாக் கவிதைகளுமே காட்டுகின்றன; மொழி பெயர்ப்பிலேயே உள்ளத்தை அவை கிள்ளினால், அசலில் எப்படி இருக்கும் என்ற ஆதங்கத்துடன் புத்தகத்தை மூடினாலும் - தாக்கங்கள் தொடருகின்றன...!

- டேவிட் சித்தையா

தழும்புகளின் விசாரணை

(80 பக்கங்கள் கொண்டது இந்தக் கவிதை நூல்)

விலை ரூ.10/-

ஆசிரியர் : தங்க முருகேசன்
14டி, பயனீர்மில் பள்ளிசாலை,
கோவை - 641 047.

"கண்ணே!
புளியமரத்தின்
இலையில்கூட
இருவர் படுத்துறங்கலாம்....." என்று,

கவிஞர் வைரமுத்துவின் அணிந்துரையுடன்;

"தழும்புகள் நீதிமன்றங்களாகி சமூகத்தை விசாரிக்கத் தொடங்கும்போதுதான் காயப்படுத்து கிறவர்கள் கவனமாயிருப்பார்கள்" என்று, கவிஞர் மு. மேத்தாவின் வாழ்த்துரையுடன்;

"சொற்களை நம்பி மட்டும் கவிதை எழுத முன் வந்தவர்கள் பலரும் முதல் தொகுப்புடன் மடிந்து போனார்கள்..." என்று, கவிஞர் அக்கினி புத்திரனின் அதிர்வேட்டுடன்,

அமைந்த இந்தக் கவிதைநூல் ஒரு நல்ல நீதி புகட்டும் நூலாகவும் அதே நேரத்தில் தீமைகளைச் சுட்டெரிக்கும் நெருப்பாகவும் தகிக்கிறது.

- பகலவன் சேது

(பார்க்க பக். 63...)

படிப்பகம்

www.padippakam.com

அவர்க்கென்று ஓர் சூழல்

நாகர்கோவில் கப்பல் திருவிழாவில் தீர்க்கப்படுவது போன்று பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல்லுகளும், ரொக்கட்டுகளும் தீர்த்த வண்ணமிருந்தார்கள். அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர் வேலி சரமாரியாக ஷெல்கள் விழுந்து வெடிக்கத் தொடங்கின...

"ஆமி பலாலி முகாமைவிட்டு வெளிக்கிடப் போகுது போல கிடக்கு..."

மக்கள் எல்லோரும் பரவலாகப் பேசிக் கொண்டார்கள்.

மக்களும் எத்தனை தடவைகள் என்றுதான் பங்கருள்ளே இறங்கி ஏறுவார்கள்?

வயதானவர்களுக்கு இது ஒரு கொடுமையான தண்டனை. பாட்டி ஸ்ரீமாவோ இப்படியொரு தண்டனையை ஒரு நாளுக்கு அனுபவிக்க நேர்ந்திருந்தால் அன்றே பரலோக யாத்திரையை ஆரம்பித்திருப்பா. இது தன் குட்டியைத் தானே தின்னும் இன முதலைகள் ஆளும் நாடு. ஒரு விடியல் ஏற்படும்வரை அப்பாவிகள் அனுபவிக்கத்தான் நேரும்!

பொ. கருணாஹரமூர்த்தி (பெர்லின்)

படிப்பகம்

www.padippakam.com

சதா பங்கருள் எப்போதும் முடங்கியிருப்பதும் எத்தனை நாளைக்குத்தான் சாத்தியம்? வெளியில் வந்து இருந்தாலும் விழுந்து வெடிக்கும் ஷெல்லின் பகுதிகள் ஆளைச் சீவிக்கொண்டு போகலாம். வீட்டிற்குள் இருந்தாலுந்தான் 'ஜிவ்' வென்று கூவிக் கொண்டு வரும் ஷெல்கள் கூரையில் விழுந்து வெடித்துச் சிதறலாம். மக்கள் தூக்கமின்றித் தவித்தார்கள்.

மார்கழிப் பனியின் குளிர்மை இன்னும் காற்றில் கலந்திருந்த மென்காலை நேரம். சிற்பாசாரி ஆனந்த ரங்கர் சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு தன் கலைக்கூடத்துள் நுழைந்தார். அதன் நடுவிதானத்தில் மொரீஷியஸ் நாட்டுக்கு அனுப்புவதற்காகத் தன் நாலைந்து மாத உழைப்பில் உருவாகி முடிவுறுந்தறுவாயில் கொலுவாய் நின்ற தேவியின் சிலையை கைகளைக் கட்டிய வண்ணம் பார்த்துக் கொண்டு நின்றார்.

சரிவிகிதத்தில் அம்சமாகச் சமைந்துவிட்ட அங்கங்கள், நீண்டவிழிகளில் சுடர்ந்த தீட்சண்யம், நடுவில் இன்னொரு தீபமாய் வளர்ந்த நாசி, வீணையெனத் 'திடுப்'பென ஒடுங்கிப் போகும் இடை... இவைகளையெல்லாம் ஒருங்கு சேரப் பார்க்கப்பார்க்க அவருக்குத் தன் சிருஷ்டியாற்றல்மீது கர்வம் வளர்ந்தது!

அவர் மனைவி சாந்தம்மாள் பனை வெல்லத்துடன் தேனீர் கொண்டு வந்து கொடுத்தார். அதைக் குடித்துவிட்டு தன் ஆயுதப் பெட்டியைத் திறந்து பல தினுசில் அரத்தாள்களை எடுத்துக் வைத்துக் கொண்டு தேவியை 'பொலிஷ்' செய்ய ஆரம்பித்தார். அவர் உதடுகள் அவரைமறியாமல் 'கனகதாரா' ஸ்லோகங்களை உச்சரிக்கத் தொடங்கின.

மீண்டும் மழை பொழிவதைப் போல் ஷெல்கள் விழத் தொடங்கின. யாரோ தெருவில் "ஆமி அச்சுவேலி, தோப்பு பக்கமாய் வந்திட்டுதாம்" என்று பேசிக் கொண்டு போனார்கள். 'இருக்காது சும்மா வதந்தியாயிருக்கும்' என்று நினைத்தபடி மீண்டும் அவர் தன் கருமமே கண்ணாயினார்.

'படா'ரென்று "ஷெல்" ஒன்று விழுந்ததும், அதைத்தொடர்ந்து மரங்கள் முறிந்ததும் கேட்டன. அவர் மனைவி பங்கருக்குள் அவரையும் "ஓடியாங்கோ ... ஓடியாங்கோ" என்று அழைத்தபடி ஓடிப் போய் நுழைந்தார். வேகமாக வந்து பங்கருக்குள் புகுந்து கொண்ட ஆசாரியாருக்கு மூச்சிரைத்தது. பத்து நிமிடங்கள் இடைவெளி விட்டது மாதிரி ஓய்வாயிருந்தது. 'வெளியே போகலாமா' என்று அவர்கள் எண்ணவும் 'ஷெல்' ஒன்று காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் ஓசை. அதைத் தொடர்ந்து ஒரு ராட்சதவிமானம் தரையில் விழுந்துவிட்டதைப் போலப் பயங்கர சத்தத்துடன் 'ஷெல்' ஒன்று விழுந்து வெடித்து நிலமே அதிர்ந்தது. ஒரு பனை உயரத்திற்கு மண்மலைபோல எழும்பி என்ன நடந்ததென்றே பார்க்கமுடியவில்லை. செவிப்பறையும் நெஞ்சும் அதிர்ந்து வலிக்க "ஈஸ்வரா...!" என்று அரற்றினர் இருவரும். புழுதி அடங்கியதும், ஆசாரியார் வெளியில் வந்து பார்த்தார். வீட்டில் பாதியும், கலைக்கூடத்தில் பாதியும் உடைந்து சிதறிப் போயிருக்க தரையெல்லாம் கூரை ஓட்டின் சிவந்த சில்லும் சிதறல்களும். இடிபாடுகளைக் கடந்து கலைக்கூடத்தினுள் எட்டிப் பார்த்தவருக்கு மேலும் ஒரு பேரதிர்ச்சி! ஒயிலாக ஒரு நடன பாவத்தில் விரல்களில் 'டோலாஹஸ்த்த' முத்திரையை எழிலாகப் பிடித்தபடி செல்லமாகக் கீழ் நோக்கிவளைந்திருந்த தேவியின் இடது கை ஒடிந்து தரையில் கிடக்கிறது... ஆசாரியாருக்கு உதடுகள் மாத்திரம் துடிக்கின்றன... பேச்சேதும் வரவில்லை. 'இவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ' எனப் பார்க்க வந்த சில அயல்சனங்களும் நடந்த விபரீதம் கண்டு பேச்சடைத்து நிற்கின்றனர்.

எல்லோர் வீட்டுப் படலைகளிலும் விடுதலைப் போராளிகள் தட்டிச் சொல்லிக் கொண்டு போகிறார்கள்... "ஆமி வடக்கை 'மூவ்' பண்ணுறான்... ரொக்கெட்டால அடிக்கப்போறம் எல்லோரும் உடனே வெளியேறி மட்டுவில் பக்கமாய்ப் போங்கோ..." வீதியில் லொஞ்சர்களும், ஏ.கே.47களும் படபடத்தன. ஜனங்கள் சிதறித் தறிகெட்டு ஓடினார்கள். இவர்களுக்கும் ஓட வேண்டுமென்பதைத் தவிர அக்கணம் வேறொன்றும் தோன்றவில்லை. இருவரும் வளவின் பின்வேலிக்கதிகால்களை நீக்கிக் கொண்டு தபாற்கந்தோர் ஒழுங்கைக்குள் ஓடினர். மூச்சிரைத்தது. நாலா திசையிலும் மேலும் ஷெல்கள் விழுந்து வெடிக்கவும் இன்னும் வேகம் பிடித்தனர். ஒழுங்கையில் மிதத்திக்கொண்டிருந்த கல்லொன்று ஆனந்த ரங்கரின் காலை மோதிப் பெருவிரல் நகத்தை இரண்டாகக் கிழித்தது! வேதனை தாளமாட்டாமல் விரலைப் பொத்தியபடி அமர்ந்துவிட்டார். ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்ததைப் பார்த்த சாந்தம்மாள் பதைத்து தன் சேலைத்தலைப்பைக் கிழித்து விரலைச் சுற்றிக் கட்டுப் போட்டுவிட்டார். காலைக் கெந்தியபடி நடந்து பிரதான வீதிக்குவந்தால்... இருபத்தைந்து திருவிழாக் கூட்டம் ஒன்றாக அணிவகுத்தது போல-யாருமே தம் வாழ்வில் காணாதபடி ஜனக்கூட்டம் சாரிசாரியாக சென்று கொண்டிருந்தது. புத்தூர் சந்தியால் ஜனத் திரளுடன் திரும்பிச் சாவ கச்சேரி வீதியில் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

அரை மைல் நடந்திருப்பார்கள். ரோட்டில் ஒரு இடத்தில் ஆடுகள் பலியிட்ட இடம் போல இரத்தம் ஓடி உறைந்திருந்தது. வேலியோரமாக தொடையளவில் அறுபட்ட மனிதனின் காலொன்று தனியாகக் கிடந்தது. மேலும் மாமிசத்துண்டங்கள் வீதியில் சிதறிக்கிடக்க ஓரிடத்தில் சிறு குவியலாகவும் கொஞ்சம் மாமிசம் கிடந்தது. எல்லாம் ஷெல்லின் பகுதிகள் பட்டுக் கறுப்பாய் வேகியிருந்தன! அவர்களைத் தாக்கிய 'ஷெல்' லின் கூறுகள் எவ்வளவு உஷ்ணமானவையாய் இருந்திருக்க வேண்டும்? இதைப் பார்த்து மயக்கமடைந்து விழப்போன சாந்தம்மாளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் ஆனந்த ரங்காச்சாரியார். அவளுக்குத் தெளிக்கக்கூட ஒரு கோப்பை தண்ணீர் எவரிடமும் இல்லாதிருந்தது. முன்னே போய்க் கொண்டிருந்த மக்கள் திரள் மீது ஷெல் விழுந்து வெடித்ததாகச் சொன்னார்கள். சிதறிப் போனவர் எவரென்றோ எத்தனை பேரென்றோ யாருக்கும் தெரியவில்லை! இந்த அனர்த்தத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் மேலும் ஷெல்கள் விழலாம்... ஜனக்கூட்டம் வேகமாக நடக்க ஆரம்பித்தது!

மக்கள் கூட்டம் தலையில் கடகங்களுடனும், சூட்கேஸ்களுடனும், சுருட்டிய பாய்கள், அலுமினியப் பாத்திரங்களுடனும், நடக்கமுடியாத முதியோரையும் நோயாளரையும் வண்டிகளில் ஏற்றித் தள்ளிக் கொண்டு அந்திராணை வெளியை அண்மிக்கவும் பத்துப்பதினைந்து ஹெலிகாப்டர்கள் இராட்சதக் கழுகுகளெனப் படபடத்துப் பதிந்து வந்து வானத்தில் வட்டமிட்டன. ஜனங்கள் 'ஐயோ... அழிவாங்கள்.... சுடப் போறாங்கள்... !" என்று அலறியபடி வயல்வெளியூடாகவும், தரவை வெளியூடாகவும் தறிகெட்டு ஓடினர். தாம் பிறந்த மண்ணிலேயே எதிரிகளாகி நொந்து வெளியேறும் அப்பாவி மக்களிடத்தில் மரணபயத்தையுண்டாக்கி மகிழவந்த கிராதஹர்கள் மேலும் சில வட்டங்கள் அடித்துவிட்டுப் திரும்பிப் போயினர்.

சூரியன் கன்னப்பொட்டை எரிக்கத் தொடங்கினான். எல்லோருக்கும் தாகம் எடுத்தது. சின்னக்குழந்தைகளும், சிறுவர்களும் தண்ணீர் கேட்டு அழுதனர். விரவாணி அம்மன் கோவில் கிணத்தில் பாத்திரம் ஒன்றைக் கட்டித் தண்ணீரை அள்ளிக் குடித்துப் பார்த்தால் ஓங்களிக்கக்கூடிய அளவு உப்புக் கரித்தது.! குழந்தைகளைச் சமாதானம் பண்ணிக்கொண்டே மேலும் நாலுமைல்கள் நடந்து வந்த மக்கள் மட்டுவில் கண்ணகை அம்மன் கோவிலை அடைந்ததும் கேணிப்படிகளில் தடதடவென இறங்கிப் பாசிகளை விலக்கிவிட்டுத் தண்ணீரை மொண்டு மொண்டு குடித்தனர்.

நடமாடமுடியாத முதியவர்களையு நோயாளிகளையும், கோயில் பிராகாரத்திலு மேற்கு மடத்தின் திண்ணைகளிலும் கிடத்தின இவ்வளவு தூரத்தையும் நடந்தே வந்ததா ஆனந்தரங்க ஆசாரியாரின் விரலில் இரு ஏராளம் இரத்தம் வெளியேறியிருந்தது. அவருக்கு தலையைச் சுற்றியது. மடத் திண்ணைய சாய்ந்ததுதான்... அயர்ந்து தூங்கிவிட்டார்.

சாந்தம்மாள் 'அறிமுக அட்டையையு வீட்டினுள் இருந்த இருநூற்றுச் சொச்ச ரூபா பணத்தையுமாவது எடுத்து வந்திருக்கலாமே' என் அரற்றிக் கொண்டிருந்தார். மட்டுவி சாவகச்சேரியில் அவர்களுக்கு அவ்வள பரிச்சயம் வாய்ந்தவர்களோ உறவினர்களே இல்லை. கண்ணகை அம்மன் கோவி முகமையாளரைத் தவிர கோயிலைச் சுற்றி பிராகாரத்திலும் ஆயிரக்கணக்கான மக்க கூட்டமிருக்க இதில் எத்தனைபேர் அவருக்கு வேண்டியவர்களாகவும் நண்பர்களாகவு உறவினர்களாகவுமிருப்பார்கள். அவர்தா யாருக்கு உதவுவார்... யாருக்கு மறுப்பா 'யாரிடமும் போய் தொந்தரவு கொடுக்கப்பட என்றே நினைத்திருந்தார்கள்.

மாலை மூன்று மணியானதும் மெல் ஆசாரியாருக்கு விழிப்பு வந்தது. விழிப்பு வந்த மீண்டும் வலியும், பசியும், சூழலின் அவலமும், அ காரமும் சூழ்ந்து கொண்டன. இவைகள உணராத நிலைத் தூக்கம். மரணத்தைப் போல தூக்கம், மரணித்துவிட்டால் நல்லது போலிருந்த தன்னை நம்பியிருக்கும் சாந்தம்மாள் எங் போவாள்? ஒரு பிள்ளையிருந்தாலாவது அ கவனிக்கும் என்று கண்ணை மூடிவிடலா மனிதனால் எதனைத்தான் சாதிக்க முடிகிறது வாழ்ந்தது போதும் இனி இறப்போம் என நினை போதுதான் இறக்கமுடிகிறதா? பட்டுக் கம்பள விரித்ததைப் போல, சில சமயங்களில் சரிவ இறங்குவதைப் போல், பின் ஏறுவதைப் போல சிரமமாக, கல்லும், பெரிய கொத்துக்கட்டிகளு கொண்டு கிடப்பதான் கொழுவி இழுக்கு முட்களும் புதர்களும் கொண்டு வேதனை தருவதாக, அபூர்வமாக தென்றலும் பரிமளமு வீசுவதாக... யாரோ ஒருவர் தன் இஷ்டப்ப போட்டுத் தரும் பாட்டையில்தான் நடக்கிறோ என்றுபட்டது அவருக்கு. சதுரம் தானாக ஓ வரையில் வாழ்வதைத்தவிர அவருக்கு வே எதுவும் செய்யமுடியும் போல் தெரியவில்லை!

எதிரிகளுக்கு உதவும் குழுக்கள் சமைத் உணவுகளைப் பொட்டலங்களில் கொண்டு வந் பரிமாறினர். இருவருக்குமே உணவின் மண

படிப்பகம்

www.padippakam.com

நாசியைத் தொட்டதும் குடலைப்பிடுங்குவதைப் போல் அகோரமாகப் பசித்தது. ஆசாரியாரோ வெளியிடங்களில் சாப்பிட்டுப் பழக்கமில்லாதவர். கௌரி தீட்சை பெற்றவர். ரொம்பவும் ஆசார அனுட்டானங்களைக் கவனிப்பவர். ஆசாரத்தைக் கடைப்பிடிக்காத உறவினர் வீடுகளிலேயே கையலம்ப மறுப்பவர்... மனைவியின் முகத்தைப் பார்த்தார். ஃபஷன் பழத்தின் தோலைப் போல வாடிச் சுருங்கியிருந்தது. அவரும் புருஷனைப் பார்த்து உள்ளூரப் பயத்துடன் 'சாப்பிடுவோமா' என்று ஜாடையால் கேட்டார்.

"சந்தியா வந்தனம் செய்யாமலா...?

அவரும் மெல்ல இறங்கி வந்திருப்பதை உய்த்தவர்.

"காலுடைந்து கிடக்கு, என்ன மசிராண்டிச் சந்தியாவந்தனம்...?" என்று எரிந்து விழுந்தார். வாழ்வே ஒரு தாம்புக் கயிற்றில் தொங்கும்போது ஆசாரமும் அனுட்டானமும் எதுவரையில் சாத்தியம்? உணவுப் பொட்டலங்களை வாங்கிச் சாப்பிட்டனர். அடுத்தவேளைச் சாப்பாட்டிற்கு உத்தரவாதமில்லை. மேற்கொண்டு எந்தத் திசையில் நடப்பதென்று தெரியவில்லை. கையுடைந்த தேவியே கண்முன் வந்து வந்து மறைந்தாள். மீண்டுமொருமுறை மெல்லக் கண்ணயர்ந்து உறக்கமோ, இல்லை விழிப்போ என்று கூறமுடியாத நிலையில் அவருக்குத் தான் விளைந்து குலுங்கும் ஒரு வயல் நடுவே நிற்பதைப் போல் இருந்தது. மெதுவாகக் காற்று வீசவும் அலை அலையாகக் கதிர்கள் தாழ்ந்தும் உயர்ந்தும் விளையாடின. பின் நிஜத்திற்கு மீண்டதும் சிறிது நேர மௌனத்தின் பின் மனைவியைக் கேட்டார்:

"வவுனிக்குளத்திற்குப் போவமேப்பா...?"

வவுனிக் குளம் என்றதும் சாந்தம்மாளுக்கும் பெருமூச் செறிந்தது. ஒரு காலம் அங்கே அவர்களுக்கு அரசினர் குடியேற்றத் திட்டத்தில் வழங்கிய 5 ஏக்கர் காணி நீர்ப்பாசன வசதியுடன் இருந்தது. சிறப்பாக மழை பெய்து குளம் நிரம்பியிருக்கவேணும். இரண்டு போகமும் விதைக்கலாம். போகத்திற்கு 200 புசல் நெல்விளையும். எழுபதுகளின் ஆரம்பத்தில் இரண்டு மூன்று வருடங்கள் பருவமழை தவறி போகங்கள் பொய்த்துவிட ஏற்பட்ட விரக்தியில் அவ்வூர்வாசியான நாகமணி என்பவனுக்கு வாய்த்த விலைக்கு விற்றுவிட்டு ஊரைப்பார்த்து வந்துவிட்டார்.

"எமக்கொரு விடிவுவரும் வரையில் ஒரு குடில் போட்டுக் கொண்டு பிழைச்சிருக்க அப்பிடியொரு அரை ஏக்கர் காணி தரமாட்டானா...?" அவர் திரும்பக் கேட்கவும் சாந்தம்மாளுக்கும் அதைவிட வேறு மார்க்கம் தோன்றவில்லை. சம்மதித்தாள். எழுந்து மெல்லக் கெந்தியபடியே ஆசாரியார் நடக்கத் தொடங்கவும் சீதையெனச் சாந்தம்மாளும் பின் தொடர்ந்தார். மாலைக் கருக்கலில் சாவகச்சேரியை அடைந்தால் அந்நகர் திருவிழாக்கூட்டமொன்றில் 'பவர்கட்' ஏற்பட்டது போல் மக்களும் சந்தடியுமாய் ஆனால் இருளில் மூழ்கிப் போயிருந்தது. டிறிபேர்க் கல்லூரி வளவு, பஸ்நிலையம், சந்தைக் கட்டிடங்கள், நீதிமன்றவளவு, எதிரில் இருந்த தேவாலயம், புகைவண்டி நிலையம் எங்குமே மக்கள் மக்கள் மக்கள்! பெரிய தேனீக்கூட்டில் தேனீக்கள் இயங்குவது போல, மக்கள் எல்லாத்திசையிலும் சாரியாகவும், தனியனாகவும் இயங்கிக் கொண்டிருந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவரை அடையாளங்கண்டு விரல் காயத்தைக் காட்டி முறையிட்டபோது அவர் இன்னுமொருவரை முதலுதவிப் பெட்டியுடன் கூட்டி வந்து காயத்தைக் கழுவி மருந்திட்டுக் கட்டிவிட்டார். நீதிமன்ற வளவின் காரை பெயர்ந்த திண்ணையில் ஒரு சிறிய இடம் கிடைத்தது. போட்டுப் படுக்க ஒரு சணல் சாக்குக் கூடக் கிடையாதபடிக்கு ஒரே நாளில் வாழ்வு பறித்தெடுக்கப்பட்டுப் பஞ்சைப் பராரிகளாக்கப்பட்ட அவலத்தை நினைக்க அவருக்குச் சிரிக்கவுமுடியாமல் அழவும் முடியாமல் விச்ராந்தியாக விருந்தது மனது. அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்னமே எழுந்து கிளாலியை நோக்கி நடக்கத் தொடங்கிய சனக்கூட்டத்துடன் இவர்களும் சேர்ந்து கொண்டு மெல்ல மெல்ல நடந்தார்கள். கிளாலி வந்தடைய மாலையானது. அங்கும் ஏதிலிகளுக்கு உதவுவோர் கஞ்சி வார்த்தனர். பசியில் புறப்பட இருந்த உயிர்கள் இழுத்து மீண்டும் கட்டப்பட்டன. இரண்டு நாட்கள் அங்கும் காத்துக் கிடந்து உயிர் தரித்து கடலைக்கடந்து ஆலடிக்கு வந்தனர். கால் தூக்கிவைத்து நடக்க முடியாதபடி உபாதை தந்தது.

இரண்டு சைக்கிள் இளைஞர்கள் அவர்களைக் கறியரில் இருத்தி கிளிநொச்சியில் கொண்டு வந்துவிடுவதாகவும் அறுநூறு ரூபாய்கள் தரும்படியும் பேரம் பேசினர். கடைசியாக ஐநூறு ரூபாய்க்கு அரைமனதுடன் சம்மதித்தனர். கிளிநொச்சி வந்ததும் (சைக்கிள் இளைஞர்களிடம் தெரிவித்திருந்தபடியே) சாந்தம்மாளின் காதுத் தோடுகளை விற்பதற்காக ஒவ்வொரு இடமாக அலைந்தனர். யாரிடமும் அதை வாங்குவதற்கான பணமில்லை. சிலர் அறாவிலை கேட்டனர். களைத்துப் போன இளைஞர்களில் ஒருவன் கேட்டான் :

படிப்பகம்

www.padippakam.com

''பெரியவரே... இந்தத் தோடு என்ன நிறையிருக்குமென்றீர்?''

''முக்கால்ப் பவுனுக்கு மேலிருக்கப்பா..... திருடன் கையில் கொடுத்தாலும் இரண்டாயிரம் ரூபா தருவானே...''

''சரி, இப்ப என்னதான் விலை வேணுமென்றீர்...?''

''ஐநூறு கழிச்சுத்தான் கொடுத்தாலும் இப்போதைக்குப் பரவாயில்லை...''.

''இன்னும் நமக்கு உங்களோட அலையேலாது. எங்கள் பிழைப்பும் கெட்டுப் போகும்.... அதனாலை ஒரு தோட்டைத் தாங்கோ... போய்க் கொண்டேயிருக்கிறம்....!''

இளைஞர்கள் சென்று மறைந்துவிட்டார்கள்!

சைக்கிளில் இருந்து வந்தது கால் 'விண்' 'விண்' ணென்று வலித்தது. முதலில் ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். அங்கும் ஆயிரக்கணக்கில் நோயாளிகள் நம்பர் எடுத்துக் கொண்டு மரநிழலிலும், தாவாரங்கள் வழியேயும் காத்துக் கிடந்தார்கள். இரண்டோ மூன்றோ டாக்டர்கள்தான் அவ்வளவு பேரையும் கவனித்தார்கள். மதியம் திரும்பி மூன்று மணியாகியும் இவர்கள் முறை வரவில்லை. கால்வலி தாங்கமுடியாதிருக்கவே வேலியில் இருந்து பிடுங்கப்பட்டது போலத் தெரிந்த ஒரு பாதிக்கம்பிக் கட்டையை நிலத்தில் போட்டு அதில் தனது வலது காலைச் சற்றே உயரமாக வைத்துக் கொண்டு இருந்தார். வலி சற்றுக் குறைவதைப் போலிருந்தது. சிவந்த அந்த மனிதன் நாலைந்து நாள் வெயிலில் வாடி வதங்கி மழிக்காத கன்னங்களுடன் பரிதாபகரமாய் கால் வலியால் அவதியுறுவது கண்டு தானே சரியான சாப்பாடு இல்லாது.... இவ்வளவு தூரம் கால் நடந்த களைப்பால் வெட்டிப் போட்ட ஒரு பூசணிச் செடியைப் போல துவண்டு போயிருந்த சாந்தம்மாள் வழிந்த தன் கண்ணீரை ஆனந்த ரங்க ஆசாரியார் காணாதபடிக்கு இரகசியமாகத் துடைத்துக் கொணடார்.

ஆசாரியார் ஏன் அம்மரக் கட்டையைக் காலுக்கு உயரமாக வைத்திருக்கிறார் என்பதை உணராத, சட்டையொன்றுமே போட்டிராத ஒரு ஏழெட்டு மாதச் சிசுவை மார்போடு இடுக்கிக் கொண்டிருந்த ஒரு ஏழ்மைப் பெண் ''ஐயா... ஐயா... அந்தக் கட்டையைத் தாறீங்களா... ஒரு வேளை பொங்கிப்பேன்'' என்று யாசித்தாள்.

அவரின் காலைப் பரிசோதித்த டாக்டர் கிழிந்து போயிருந்த நகங்களை ''பெரியவர் விறைப்பூசியில்லை கொஞ்சம் தாங்கிக்

கணையாழி

சந்தா விவரம்:

	இந்தியா	வெளிநாடு
1 ஆண்டு	ரூ.110.00	15 அமெரிக்க (யு.எஸ்.) டாலர்
2 ஆண்டு	ரூ.200.00	30 " "
ஆயுள்	ரூ.1000.00	150 " "

'கணையாழி' பெயரில் **M.O.** *அல்லது* **D.D.** *அனுப்ப வேண்டிய முகவரி:*

கணையாழி,
தசரா அறக்கட்டளை,
9, முதல் தெரு,
விஜயராகவா சாலை,
தி.நகர்.
சென்னை - 600 017.

படிப்பகம்

www.padippakam.com

கொள்ளுங்கள்'' என்றபடி பிடுங்கிவிட்டார். மயங்கியே போய்விட்டார் ஆசாரியார். சற்றே தெளிவு வந்தபோது ''ஆஸ்பத்திரியிலே இடமேயில்லை... நீங்கள் வெளியிலதான் அட்ஜஸ்ட் பண்ணித் தங்கிக் கொள்ள வேணும்....'' என்று டாக்டர் சொல்வது ஒரு பாதாளக் கிணற்றிலிருந்து யாரோ சொல்வது போல அவருக்குக் கேட்டது. ஆஸ்பத்திரியைவிட்டு வெளியில் வரவும், யாரோ ஒரு பெண் மீதமிருந்த தனித் தோட்டை எண்ணூறு ரூபாய்க்குக் கேட்பதாகச் சாந்தம்மாள் சொன்னார்.

''சர்... கொடுத்திடு'' என்று சைகையால் காட்டினார். அப்பணத்தில் ஒரு சட்டியும், பானையும், கொஞ்சம் அரிசியும் வாங்கினர். இப்போது விறகு தேட வேண்டியதாயிற்று. விறகு வாங்கப்போன சாந்தம்மாள் கூடவே கொஞ்சம் வெங்காயமும், வெண்டைக்காயும், பிஞ்சுமிளகாயும், உப்பும் வாங்கி வந்தார். வீதியோரமாகவே கல்லு வைத்து அடுப்புமூட்டிச் சாதம் பொங்கிவிட்டு வெங்காயத்துடன் வெண்டைக்காயை மிளகாய், உப்பு சேர்விட்டு அவித்துச் சாப்பிட்டார்கள்.

ஒரு மாட்டுவண்டிக்காரரிடம் அவர் வைக்கோல் அடைய வைத்திருந்த இரண்டு சாக்குகளையும் விலை கொடுத்து வாங்கினார்கள். அவர்கள் சமைத்த இடத்திற்குப் பக்கமாக இருந்த வீரை மரத்தடியில் இரவு படுக்கலாமென எண்ணியிருந்தனர். சாப்பாடு முடித்துக்கொண்டு சாக்கையும் கொண்டு அம்மரத்தடிக்குப் போன போது அங்கே வேறொரு குடும்பம் இரண்டொரு பிள்ளைகளுடன் அவ்விடத்தைக் கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்தது. அதுதான் அவர்களது வாடிக்கையான பள்ளி கொள்ளுமிடம் போலும்! அவர்கள் அங்கே தயங்கி நிற்கவும் அவன் அழைத்தான். "ஐயா வாங்க... இங்கை இதில தங்கிக்கலாம்... நமக்குத்தான் இதெல்லாம் பழகிப் போன வாழ்க்கை.. இடம்... புதிசா வர்ற இருந்தாளிங்களை உபசரிக்க வேணாமோ...?"

ஆசாரியாருக்கு வெட்கமாகவுமிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். இன்னும் பலர் கையில் படுகைகளையும், உரப்பைகளையும் விரித்துக் கொண்டு வாகனப் போக்குவரத்து அற்ற வீதியிலேயே இரவைக் கழிக்க ஆயத்தமாவதைக் கண்டார். ஒரு காலம் யாழ்ப்பாண மேட்டுக் குடியினர் தம்மால் தாழ்த்திவைக்கப்பட்ட ஏழைக் குடியானவர்களுக்கு அளித்த ஆசனங்கள்தான் இன்றும் சாக்கும்!

மலையகத்திற்குப் பிழைக்க வந்த கூலியென இழித்துப் பழிக்கப்பட்ட ஒரு அன்பன் வெறுங்கட்டாந்தரையைப் பங்கு போடவே - என்ன வெள்ளை மாளிகை விருந்துக்கு உபசரிப்பதைப் போலல்லவா உபசரிக்கிறான்!

தயங்கித் தயங்கி அவர்கள் மரத்தடிக்குச் செல்லவும், அவன் பெண்டாட்டி சொன்னாள்: "தோ... இந்த ஐயாதான் அப்போதே இந்த வெறகு கட்டையை தந்தார்..." அவள் கண்களில் இன்னும் நன்றி மின்னிட்டது.

மரத்தடிச் சந்தோசம் சில மணிகள்தான் நீடித்தது.... யாரோ மழை வேண்டித் தவமிருந்தது போல் சாமமாகவும் மழை கொட்ட ஆரம்பித்தது. மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர். ஆசாரியாரும் சாந்தம்மாளும் ஆஸ்பத்திரி வளவினுள் நுழைந்தனர். கட்டுப்படுத்த முடியாதபடி ஆஸ்ப்பத்திரியின் எல்லா அறையினுள்ளும் ஜனங்கள்! 'தூங்க இடம் வேண்டாம். கால் காயம் நனைந்துவிடாதபடி வைத்துக் கொள்ள கூரையின் கீழே ஒரு இடமிருந்தால் போதும்' என்றிருந்தது. "இலங்கையிலும், இந்தியாவிலும், ஆசியாவிலும், ஏன் முழு உலகத்திலுமே மழைக்கு வெய்யிலுக்கு ஒதுங்க இடமில்லாத எத்தனை பாவிகள் இருப்பார்கள்'' என ஆனந்த ரங்காசாரியார் எண்ணிப் பார்த்தார்.' கொஞ்ச நாட்களாகவே தனக்கு ஏற்படும் அனுபவங்களும், அதைத் தொடர்ந்து வரும் புதிய சிந்தனைகளும்...' அவருக்குச் சிரிப்பு வந்தது!

இத்தகு ரம்யமான பொழுதுகளுடன் நுளம்புக்கடியோடு ஜோராகப் பொழுதைக் கழித்துக் கொண்டு மூன்றாம் நாளும் ஆஸ்பத்திரிக்குப் போய் காலிலிருந்த காயத்திற்கு மருந்து கட்டிக் கொண்டு வருகையில் யாரோ பஸ் ஸ்டாண்டிலிருந்து ஒரு டிராக்டர் வவுனிக்குளம் - துணுக்காய் புறப்படவிருப்பதாகவும் ஆளுக்கு 250 ரூபாய் வசூலிப்பதாகவும் பேசிக் கொண்டதை அறிந்து இருவரும் போய் அதில் இடம்பிடித்துக் கொண்டனர். 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பராமரிப்போ, தார் போடுதலோ இல்லாமல் குன்றுங்குழியுமாக இருந்த பாதை தூக்கித் தூக்கிப் போட்டது. டிராக்டர் வளைந்தும், மடங்கியும், சேறை வாரிப் பெரிய டயரினால் தெளித்துக் கொண்டும் ஓடிக் கொண்டிருந்தது.

குடியேற்றத்திட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை ஒரு குடும்பத்தின் அங்கத்தினருள்ளும், இரத்த உறவுடைய சகோதரங்களுக்கும் கையளிக்க முடியுமேயன்றி - வெளியார் எவரிடமிருந்து வாங்கவோ விற்கவோ முடியாதென்று இலங்கை காணிச்சட்ட விதிகளில் ஒரு ஷரத்து உண்டு. காணி வாங்க முதலே இது நாகமணிக்கும் தெரியும். பதிவு விஷயமாகக் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு நடந்தபோது

படிப்பகம்

www.padippakam.com

சொன்னார். "உனது நிலமை எனக்குத் து.... நீ போய் ஆனந்த ரங்காசாரியாரின் மாவட்ட உபபிரிவான புத்தூருக்குப் போய் களின் கிராம சேவகரிடம் நீ ஆனந்த ாரியின் இரத்த உறவினன்தானென்று ஒரு க்கடதாசி பெற்று வந்தால்தான் என்னால செய்துதரமுடியும்"

ாகமணி விழுந்தடித்துக் கொண்டு புத்தூர் சேவையாளர் துரைசிங்கத்திடம் ஓடினான். ணியின் விண்ணப்பத்தை முழுவதும் கேட்ட சேவையாளர் அமைதியாகவே சொன்னார்.

நீர் ஆனந்த ரங்க ஆசாரியாரின் ரல்ல என்பது நான் மனசார அறிந்த ம்.... என் மனச்சாட்சிக்கு விரோதமாக ஒரு க்கடதாசியை என்னால் முடித்துத் யாது! யாராவது காசு வேண்டிக் கொண்டு ச் செய்துதரக் கூடிய கிராம சேவையாளர் மாற்றலாகி புத்தூருக்கு இனிமேல் னந்தானே......? அப்பநீர் உமது காணியை க் கொள்ளலாம்... ஆசாரியார் ஆனந்த ர எனக்குப் பல காலமாய்த் தெரியும்... நேர்மையான மனிதன்... அவர் க்குமே உம்மிடம் வந்து எனது காணியைத் த் தா.... என்று நிற்கப் போவதில்லை!"

இருவருக்கும் டிராக்டர் குலுக்கியடித்ததில் த்துப் பொருத்தாகத் தேகம் நோ எடுத்தது. யாகவும் டிராக்டர் மல்லாவிச்சந்தியில் வந்து து. அவர்களுக்கு இன்னும் இரண்டு கள் உள்ளே யோகபுரத்திற்குப் போக டும். பழைய நண்பர்கள், தெரிந்தவர்கள் யாருமே கண்ணில்படவில்லை. இளைய முறையினருக்கோ அவர்களை யாரென்று பவில்லை. இங்கும் அகதிகள்தான் நவிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்தார்கள். டி இருபது வருஷத்திற்கு முன்பிருந்தது வே இன்னும் ஓலையாய் வேய்ந்த ஏழெட்டுக் ள்தான் மல்லாவியில் இருந்தன. நாகமணிக் தகள் ஏதும் இருக்குமோ இல்லையோ ஒரு கோத்துப் பெட்டி வாங்கிக் கொண்டு கூடப் இயலாதபடி பணமெல்லாந் விட்டிருந்தது. மெல்ல நடக்கத் தொடங்கினர். அகதிகள் மரநிழல்களில் அங்கத்தைய ளிலும் வயல்வெளிகளிலும் கிடைக்கக்கூடிய வை, முகட்டை, சுண்டைக்காய், முளைக்கீரை, கீரை, புதினா, அகத்தியிலை என்பவற்றில் மத்துக் கொண்டிருந்தனர். ஆசாரியாருக்கு ரநிழல்களில் இளைப்பாறிநின்ற போது மற்ற ளிடம் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்று லாக இரண்டு வார்த்தைகள் பேசவேண்டும் இருந்தது. 'தானே பரதேசி... இவர்களை விசாரித்துத்தான் என்னவாகப் போகிறது' என்று மேலே நடந்தார்.

ஆனந்த ரங்காசாரியாருக்கு எப்போதும் தன் கலைத்துவத்தின் மீதும் சிருஷ்டியாற்றல் மீதும் அளவிடமுடியாத வித்துவச் செருக்கு இருந்தது.

கலைத்துவம் செறியாத எந்தப் படைப்பையும் அவர் ஆராதித்தது கிடையாது!

எவனொருவனிடம் கலை ரசனையில் லையோ... அவனால் வாழ்வையே அனுபவிக்க முடியாதென்பது அவர் நம்பிய தத்துவம்! அவர் கலைக்கூடத்தில் சாதாரண மேசை, கதிரை போன்ற பொருட்களைச் செய்விக்க வந்தோரிடம் -

"தம்பி... இது பட்டுக்குஞ்சம் விளக்குமாறு வேலை பார்க்காதென்றோ அம்மி கொத்திறதுக்குச் சிற்பி எதற்கையனே?'' என்றோ சொல்லி அனுப்பிவிடுவார்!

இன்று - 'சூரியர், சந்திரர், பந்துக்கள், சபையோர், அக்கினி சாட்சியாக இறுதிவரையிலும் ஏழுமுழம் புடவையும், உணவும் தந்து வெய்யிலிலும், பனியிலும், மழையிலும் காப்பேன்' என்று உறுதியளித்துக் கைப்பிடித்தவளின் பசியைப் போக்க முடியாமல் ..... கிருஹஸ்த தர்மத்தையே கடைப்பிடிக்க முடியாத நிலை வந்து விடுமோ என எண்ணுகையில் முதன் முதலாக வாழ்க்கை பற்றியும், அது காட்டும் கோரப்பற்களைக் கண்டும் பயந்தார்!

நாகமணி அரை எக்கர் நிலம் எமக்குக் குத்தகைக்காவது தருவான். அதில் ஒரு குடில் அமைத்துக் கொண்டு ஒரு ஏர் செய்ய வேண்டும். ஓரிணைமாட்டைக் கூலிக்கேனும் பிடித்து இந்த ஈரம் மாறமுதலே உழுதுவிட வேண்டும். கொஞ்சம் உழுந்து, கொஞ்சம் எள்ளு, கொஞ்சம் மிளகாய், கொஞ்சம் மரவள்ளி, கொஞ்சம் நிலக்கடலை அங்கே போடவேண்டும். சாந்தம் வேணு மென்றால் வாய்க்கால் கரையோரமாகப் பயத்தம் விதைகளையும், பூசணிவிதைகளையும் ஊன்றட்டுமே!

மெல்ல நடந்து வந்து நாகமணியின் காணிமுனைக்கு வந்த போது கண்ணனின் மாளிகையைக் கண்ட குசேலரின் பரவசம் பிறந்தது. பொழுது நன்கு மறைந்துவிட்டிருந்தது. அந்தியின் கருக்கல் வானம சிவப்பாகவும், மன்னார் கடற்காற்று துரத்திவந்த சில மழை மேகங்களையும் கொண்டிருந்தது. பதிவாகச் சில கூழைக்கடாக்களும், நாரைகளும் வவுனிக்குளம் நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

படலையில் போய் நின்று 'பவ்'யமாக அழைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

"தம்பி... நாகமணி!"

"யாரது?" என்றபடி வந்த நாகமணிக்கு இவர்களைப் பார்த்ததும் முகம் இறுகிப் போனது. ஒரு சம்பிரதாயத்திற்காவது "வாங்கோ" என்று சொல்லாமல் மலைத்துப் போய் நின்றான்.

"கெட்டுப் போனவன் கிழக்கே போ என்பார்கள்.... நான் கொஞ்சம் தெற்காக வந்துவிட்டேன்" என்றார் ஆசாரியார்.

எப்படியும் உள்ளே அழைப்பான் என்ற நம்பிக்கையில் உள்ளே பார்த்தனர். அவரே வைத்த விலாட்டு, அம்பலவி, செம்பாட்டான் எல்லாம் பெருவிருட்சங்களாக வளர்ந்தும் கனிந்தும் நின்றன. வேலியோரம் நாட்டிய முருங்கை மரங்கள் ஆயிரக்கணக்கில் காய்த்தும் பறிக்கப்படாத காய்கள் முற்றிவெடித்துச் சிதறியுமிருந்தன.

நடுவளவில் இன்னுமொரு கிணறு வெட்டிக்கட்டியுமிருந்தான்.

நாகமணி தொண்டையைச் செருமிப்போட்டு வேறொரு திசையில் பார்த்துக் கொண்டு வேகமாகப் பேசினான்.

"ஆசாரியார் வயதில பெரியவர் நீங்கள். என்னைக் குறை விளங்கப்படாது... இந்தக்காணிப் போமிற்று இன்னும் என் பெயருக்கு மாற்றுப்படவில்லையென்ற விஷயம் உங்களுக்குத் தெரியாமலில்லை, நீங்களிப்ப உங்கடையூரை ஆமி பிடிச்சுப் போட்டானென்று வந்திருக்கிறியள்... வந்த ஆமி திரும்பிப் போறதென்றது நாளைக்கோ, அடுத்த வருஷமோ இல்லை. ஒருநாளுமில்லையோ என்று ஆருமே அறுதியிட்டுக் கூறேலாது... நானும் உங்கடை நிலமையைப் பார்த்து ஒரு பக்கமாயிருங்கோ என்று சொல்லிவிட... நாளடைவில யாருக்கும் மனது மாறிறது சகஜந்தானே... போய் இயக்கத்தில இது எங்கடை காணி... நான் இந்த ஆண்டிப்பயலைக் காணியைக் கவனிக்கச் சொல்லித்தானிருத்தினனான்.... இப்ப எழும்பிறானில்லை என்றொரு வழக்கை கொடுக்கும் நிலை வந்து... நான் வெளியேறிற சந்தர்ப்பம் வரக்கூடாது பாருங்கோ....!"

"சீ..... அப்படியொரு அயோக்கியனென்றா இந்த ஆனந்தரங்கனை நினைத்துக் கொண்டிருக்கிறாய்.... அற்ப மானிடா!" என்று கேட்கவேணும் போல் இருந்தது. வலிந்து மெளனம் காத்தார்.

"இரண்டு லட்சம் பெறக்கூடிய காணியை பதினையாயிரத்தை எறிஞ்சு அமுக்கின கொள்ளைக்காரனல்லே நீ.....?"

ஆவேசப்பட்ட சாந்தம்மாளை அடக்கினார்.

"ஏய்... சாந்தம்! அப்படியெல்லாம் நாம பேசக்கூடாது, விலை தலை எல்லாம் முடிஞ்சு போன கதை. தன் காணியை நாம மீண்டும் பிடித்துவிடுவோமோ என்ற பயம் அந்த மனுஷனுக்கு இருக்கும் போது மேலும் நாம் தர்க்கித்து. அந்த மனக்கிலேசத்தை வளர்க்கப்படாது.... அது நமக்கு... நன்மை தராது...!"

மெல்ல நடந்து தனது பக்கத்துக் காணிக்காரரும் பழைய தோஸ்த்துமான நடராசாவின் படலையில் போய் நின்று கூப்பிட்டார்கள்.

"நடராசா... தம்பி... நடராசா!"

பதினெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் வெளிப்பட்டான்.

"ஐயாதானே போன மாதம் போய்விட்டார்!"

"எங்கை ராசா?"

மேலே வானத்தைக் காட்டினான்.

இருவருக்கும் மின்னல் தாக்கியது போல் அதிர்ச்சி!

"ஏனப்பு... என்ன நடந்தது......? ஒரு காய்ச்சல் தடிமல் என்று படுக்காத மனுஷனாச்சே!"

"கொஞ்சக்காலமாய் அவருக்கு மெல்லிய டயபடீஸ் பிரச்சனையிருந்து... ஒவ்வொரு நாளும் ஊசிபோடுவிக்க வேணும்... இப்பத்தான் ஆஸ்பத்தரியளில மருந்து மாயங்களில்லை யெண்டது தெரியுமே... ஒருநாள் தலையைச் சுத்துதென்று படுத்தார், அடுத்தநாள் போயிட்டார்... நீங்கள் யாரென்று....?"

"ஐயாவுக்கு என்னைத் தெரியும்".

ஏக காலத்தில் இருவரிடமும் நீண்ட பெருமூச்சுக்கள் எழுந்தன. இப்போது தம்மை அகதியாய் மட்டுமல்ல அனாதைகளாயு முணர்ந்தனர். கால் போன திசையில் நடக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கென்றொரு குடில் கிடைக்காமலா போகும்?

படிப்பகம்

www.padippakam.com

ப.மு. ஷெரீப்

நெய்வேலி ஒரு அழகிய நகரம் என்றாலும், எங்கள் வீடு கூரை வீடுதான். குடிசைப் பகுதிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் எங்கள் வீடு உள்ளது. இதில் நிறுவனத் தொழிலாளர்களும், தொழிலாளியல்லாதவர்களும் வியாபாரிகளும், காண்ட்ராக்டர்களும், தங்கள் வசதிக்கேற்ப வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர். எங்கள் வீட்டிற்கு சற்றுத் தொலைவில் ஒரு முந்திரிதோப்பும் அதனை அடுத்து ஒரு விவசாயப் பண்ணையும் உள்ளது. எங்கள் தெருவில் இருக்கும் பெண்கள், பத்துப் பேருக்கு குறையாமல் கூடி, அந்த தோப்பிற்குச் சென்று பச்சை முந்திரி மரத்தை கைகளாலே உடைத்துக் கொண்டு வருவார்கள், விறகிற்காக. சில சமயம் கத்தியும் எடுத்துக் கொண்டு போவார்கள். ஆண்களுக்கு அது நல்ல சோலை மாதிரி, காலைக் கடன்களை முடிக்க மற்றும் ஓய்வும் எடுக்க, காதலர்களுக்கு மறைவும் கொடுக்க என்று பல வகைகளில் அது உபயோகப்பட்டது. விறகிற்காக மரம் உடைக்க செல்லும் பெண்கள் கூட்டத்தில் நானும் கூட சென்றிருக்கிறேன். அப்பொழுது அவர்கள் பல விஷயத்தை கேலியாகவும், கிண்டலாகவும் பேசிக் கொள்வார்கள். அதெல்லாம் எனக்குச் சரியாக புரியாது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் நன்றாக புரிந்தது. விறகிற்காக மரம் உடைக்கச் செல்லும் எல்லாப் பெண்களும், ஒட்டு மொத்தமாக இறைவனை வேண்டிக் கொள்ளும் ஒரு விஷயம் மாணிக்கம் வாட்ச்மேன் வந்துவிடக் கூடாது என்பதுதான். அவர்கள் மாணிக்கத்தைப் பற்றி பேசுவதை அதிகமாகக் கேட்டிருக்கிறேன். அவர்கள் மாணிக்கத்திற்கு அதிகமாகப் பயந்தார்கள். அவனை வெறும் மாணிக்கம் என்று சொல்லமாட்டார்கள். "மாணிக்கம் டோலா" என்றுதான் சொல்லிக் கொள்வார்கள். "கட்டையில போறவன்" வராம இருந்தாப்போதும் என்றும் சொல்லிக் கொள்வார்கள்.

மாணிக்கம் டோலாவிடம் மாட்டிக் கொண்டால், அவ்வளவுதான். எடுத்து வந்த எல்லா விறகுகளையும் பிடுங்கிக் கொள்வான். அதுமட்டுமல்ல கையில் உள்ள பொருள்களையெல்லாம் பிடுங்கிக் கொள்வான். பச்சை பச்சையாகத் திட்டுவான். இவர்கள் விறகு உடைக்க எப்பொழுதும் மதியம்தான் செல்வார்கள். இருட்டுவதற்குள் திரும்பி வந்துவிட வேண்டும் என்ற துடிப்போடு மிக விரைவாகக் கையில் கிடைத்த மரங்களையெல்லாம், உடைத்துக் கொண்டு வந்துவிடுவார்கள். அந்த நேரத்தில் அவர்களின் பலம் அசாத்தியமானது. அந்த நேரங்களில் மாணிக்கம் டோலாவிடம் மாட்டிக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டால், அவன் வேண்டுமென்றே அவர்களை இருட்டும் வரை நிற்கவைத்து, மிரட்டி, அதட்டி, அவர்களை ஒரு வழியாக்கிவிட்டுத்தான் விடுவான். ஒரு தடவை மாணிக்கம் டோலாவிடம் மாட்டிக் கொண்டால் பத்து நாட்கள் அந்த தோப்பின் பக்கமே போகமாட்டார்கள். நான் சென்றிருக்கும் எந்த சமயத்திலும் மாணிக்கத்திடம் மாட்டியது கிடையாது. ஆனால் அவனைப்பற்றி பேசுவதைக் கேட்டு, அவனைப்பற்றி ஒரு உருவம் என் மனதில் பதிந்துவிட்டிருந்தது. அது அவனை பயங்கர மானவனாக சித்தரித்திருந்தது. எனவே நான் அந்த மாணிக்கம் டோலாவிற்கு மிகவும் பயந்திருந்தேன். அது மட்டுமல்ல மாணிக்கம் என்ற பெயர் வைத்திருந்த அனைவருக்கும் பயந்தேன்.

விடுமுறை நாட்களில் நாங்கள் எல்லோரும் அந்த தோப்பில்தான் விளையாடுவோம். காலையிலே சென்று, மாரகவுண்டி, கிட்டி என்று எதாவது விளையாடிவிட்டு, அந்த தோப்பில் இருக்கும் மாமரங்களில் மாங்காய் பறித்துக் கொண்டு, பக்கத்தில் இருக்கும் ஆலமரத்தடியில் அதை சாப்பிட்டுவிட்டு, அதற்குப் பக்கத்தில் இருக்கும் குளத்தில் குளித்துவிட்டு செல்வோம். குளத்தில் குளித்துவிட்டுச் சென்றால் கண்டிப்பாக அடி கிடைக்கும். ஏனெனில் அந்த குளம் மாடு கழுவுவது முதல் மலம் கழுவுவது வரைப பயனபட்டதால். என் தந்தை வேலையை விட்டு வருவதற்குள் வீட்டுக்கு செல்வதற்கு முயற்சி செய்தாலும் முடியாது. நண்பர்களை விட்டு பிரியவும் மனம் வராது. ஆகவே அடி நிச்சயம் உண்டு.

ஒரு கிறிஸ்துமஸ் கிழமையில் நாங்கள் மரகவுண்டி விளையாட அந்த தோப்பிற்குச் சென்றோம். தோப்பிற்குச் செல்லும் பொழுதெல்லாம் எனக்கு மாணிக்கம் டோலாவின் பயம்தான். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்வதில்லை. ஏனெனில், என்னுடன் பலர் இருக்கின்றனர். இவர்களை விட்டுவிட்டு என்னை மட்டுமா பிடிக்கப் போகிறான். நான் பயந்தாற்போல் மற்றவர்கள் பயப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் நாங்கள் விளையாட செல்கின்ற நாட்களில் என்றுமே மாணிக்கம் வந்தது கிடையாது. எனக்கு அவனைத் தெரியாத காரணத்தால், நான் பார்த்தும் அவன்தான் மாணிக்கம் என்று தெரியாமல்கூட இருந்திருக்கலாம்.

தோப்பின் சற்று உள்ளே ஒரு அடர்ந்த பெரிய முந்திரிமரம் உள்ளது. அதுதான் மரகவுண்டி விளையாட வசதியாக இருக்கும். மரகவுண்டி

படிப்பகம்

www.padippakam.com

என்பது, ஒருவனை தேர்வு செய்து, ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு மரத்திற்கு கீழே ஒரு கட்டம் போட்டுவிட்டு அந்த குச்சியை தூர வீசியெறிய வேண்டும். கீழே இருப்பதற்கு தேர்வு செய்யப்பட்டவன் எடுத்து வந்து கட்டத்தில் அந்த குச்சியை வைத்துவிட வேண்டும். அவன் குச்சியை எடுத்து வருவதற்குள் மற்றவர்கள் மரத்தில் ஏறிக்கொள்ள வேண்டும். அவன் குச்சியை கட்டத்தில் வைத்துவிட்டு, மற்றவர்களைப் பிடிக்க வேண்டும். யார் மரத்தில் இல்லாமல் தரையில் இருக்கிறார்களோ அவர்களை அவன் பிடிக்க முடியும். மேலும் மரத்தில் இருப்பவர்களை எம்பியோ, அல்லது எப்படியோ தொட்டுவிட்டாலும் அவர்கள் அவுட். அவனுக்கு தண்ணி காண்பிப்பதற்காக மரத்தின் ஒரு புறத்தில் இறங்கி மரத்தை சுற்றி ஓடுவார்கள். அதே சமயம் அவன் அந்த கட்டத்தில் இருக்கும் குச்சியைக் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். குச்சியை வேறு யாராவது எடுத்துவிட்டால் அந்த ஆட்டம் முடிந்துவிடும். அடுத்த ஆட்டம் மீண்டும் அவனேதான் பிடிக்க வேண்டும்.

ஆளை தேர்வு செய்யும் முறைக்கு சாட் பூட் திரி என்று சொல்வோம். மூன்று பேர் சேர்ந்து, கைகளை கோர்த்துக் கொண்டு சாட் பூட் திரி என்று கைகளை உதற வேண்டும். திரி என்று சொல்லும்போது, இடதுகையின் மேல் வலதுகையை வைக்க வேண்டும். இரண்டு பேரின் வலதுகை ஒரே புறமாக இருந்து, மற்றொருவனின் கை மாறுபட்டு இருந்தால் அந்த மாறுபட்டவன் பிடிப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டான் என்று அர்த்தம். கடைசியில் இரண்டு பேர் மட்டும் எஞ்சும்போது வெற்றி பெற்ற யாராவது ஒருவன் உப்புக்கு சப்பான் என்று வந்து சேர்ந்து கொள்வான்.

கடைசியில் எஞ்சி இருக்கும் ஒருவனே பிடிக்க வேண்டும். அன்று, நான் மாட்டிக் கொண்டேன்.

ஒரே ஆட்டத்தில் மற்றவர்களைப் பிடிக்கும் சமார்த்தியம் என்னிடம் கிடையாது. குச்சியை யாரும் தொடாமல் பாதுகாத்துக் கொண்டே, மற்றவர்களை பிடிக்க வேண்டும். யாராவது ஒருவனை பிடிப்பதற்கு முயற்சி செய்தால், அதற்குள் வேறு ஒருவன் வந்து குச்சியை எடுத்துவிடுவான். எப்படியும் ஐந்தாறு ஆட்டமாவது நான் மாட்டிக் கொண்ட பிறகுதான் எவனாவது ஒருவன் அகப்படுவான்.

பிடிக்கிற வேலையில் இருந்து நான் விடுபட்டுவிட்டால், நான் மரத்தின் மேலே நல்ல பாதுகாப்பான இடத்திற்கு சென்று அமர்ந்துவிடுவேன். கீழே இறங்கி, தண்ணி காட்டுகிற வேலையெல்லாம் செய்யமாட்டேன்.

அன்று எனக்கு யாருமே அகப்படவில்லை. தொடர்ச்சியாக நானே பிடிக்க வேண்டியதாகி விட்டது. நான் மிகவும் சோர்வுற்றுவிட்டேன். ஆட்டத்தில் இருந்து விலகிக் கொள்ளலாமா என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டேன். இருந்தாலும் இப்படி விலகிக் கொண்டால் அவமானமாக இருக்கும். இதே காரணத்தை வைத்துக் கொண்டு ஆட்டத்தில் சேர்க்காமல் விட்டுவிடுவார்கள்.

அடுத்த ஆட்டம் தொடர்ந்தது. நான் ஓடிப் போய் குச்சியை எடுத்துக் கொண்டு வந்தேன். அப்பொழுது ஒருவன் சைக்கிளில் என்னை கடந்து சென்றான். ஆள் நன்றாக இருந்தான். சுருட்டைமுடி, வெள்ளைசட்டையை இன் பண்ணி இருந்தான். கண்களில் கருப்புநிற கண்ணாடி அணிந்திருந்தான். நான் குச்சியை எடுத்துக் கொண்டு வந்து கட்டத்தில் போட்டுவிட்டு, யாரைத் தொடலாம் என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். அப்பொழுது எங்கள் குழுவில் ஒருவன் 'மாணிக்கம்' 'மாணிக்கம்' என்று கூவிக் கொண்டே மரத்தில் இருந்து கீழே குதித்தான். எனக்கு மாணிக்கம் என்று பெயர் கேட்டவுடன் உணர்வுகள் அதிர்ந்து, வெடித்து விடும் நிலைமைக்கு வந்துவிட்டது. குப்பென்று அனல் காற்று மேலே மோதியது போல் வேர்த்துவிட்டது. அவன் பார்த்துக் கொண்டு கூவிய பக்கம் நானும் பார்த்தேன். நான் பார்த்தது ஒரு விநாடிக்கு குறைவான நேரம். அந்த நேரமே எனக்கு போதுமானதாக இருந்தது, அவனை அடையாளம் கண்டுகொள்ள. அவன் வேறுயாருமில்லை. நான் குச்சி எடுக்கச் சென்ற போது என்னைக் கடந்து சென்றவன்.

அவன் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். என் அறிவு மழுங்கி, நான் என்ன செய்கிறேன் என்று புரியாமல் ஓட ஆரம்பித்தேன். என் கால்கள் அந்த நேரத்தில் மிக வேகமாக இயங்கின. என்னுடைய உடல் முழுவதும், என்னைவிட்டு பிரிந்தாற்போல நான் ஞானசூன்யமான இடத்தில் மிதப்பது போல, காற்றுக்கு சவால்விடுவது போல, என்னவென்றே தெரியவில்லை. என்னவென்று சொல்வது என்றும் புரியவில்லை. ஓடினேன் என்று மட்டுமே சொல்ல முடியும். ஓடினேன் ஓடினேன். என்னைக் கடந்து ஒரு சைக்கிள் சென்றது. அதில் ஒருவன் உட்கார்ந்திருந்தான். நானும் அவனைப் பார்த்தேன். எங்களை நோக்கி வந்த அவன் நான் குச்சி எடுக்க போகும்போது என்னைக் கடந்து சென்றவன், மாணிக்கம் டோலா என்ற மாணிக்கம்.

நான் நின்றுவிட்டேன், என்னுடைய கால்கள்

படிப்பகம்

www.padippakam.com

மீது ஆணி அடித்தாற்போல் அசையாமல் நின்றுவிட்டேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னைக் கடந்து அவன் சென்று கொண்டே இருந்தான், என்னை ஒரு பொருட்டாகக்கூட மதிக்காமல். வியர்வையில் நான் குளித்தே இருந்தேன். என்னையும் அறியாமல் திரும்பிப் பார்த்தேன். என் நண்பர்கள் மரத்தின் கீழே நின்றிருந்தார்கள். அவர்களுக்கு மாணிக்கம் வந்தது ஒரு பொருட்டே அல்ல என்பது போல நின்று கொண்டிருந்தார்கள். என் உணர்வுகள் சுயநினைவுக்கு மெல்ல வந்து கொண்டிருந்தன. நான் எதற்கு ஓடினேன், மாணிக்கத்திற்கு பயந்து. ஆனால் நான் பயந்தது போல் அவன் என்னை ஒன்றுமே செய்யவில்லை. என்னையும் கடந்து சென்றுவிட்டான்.

❀ ❀ ❀ ❀ ❀

படிப்பகம்

www.padippakam.com

சின்னதாகிப் போன ஊர்

- சு. போசு

சண்டாக் கொடிகள் தெரிய ஆரம்பித்து விட்டனவாம். கதிரேசன் சொல்லிக் கொண்டே ஓடினான். அவனது புதுச்சட்டையும் கால் சராயும் அவன் ஓட்டத்தில் உராய்வது ஒருவித ஒலியை எழுப்புகிறது. அவன் என் பூப்போட்ட சட்டையைப் பார்க்காமல் போனது ஒருபக்கம் வருத்தம் என்றாலும், அவன் சொல்லிவிட்டுப் போன சேதி என்னுள் பரவசத்தை ஏற்படுத்தியது போல வீதியெங்கும் உள்ள வீடுகளையும் சுறுசுறுப்பாக்கியது. ஏற்கனவே கூட்டி சுத்தமாக இருக்கும் வீதியில் தண்ணீரைத் தெளித்தார்கள் சிலர். சிலர் கோலம் போட்டார்கள்.

"ஏண்டா கதிரேசா, சண்டாக்கொடி தெரிஞ்சிருச்சா. அப்போ, இந்நேரம் குதிரை வந்திருக்கணுமே."

வேலுத் தாத்தா விளக்கிக் கொண்டு இருந்தார். எப்போதும் கோமணம் மட்டுமே கட்டிக் கொண்டிருக்கும் தாத்தாவுக்கு ஊர்த் திருவிழாவுக்கு எப்படியும் புது வேட்டியும், துண்டும் கிடைத்துவிடும். அவர்தான் ஊரிலேயே வயதில் முதிர்ந்தவர். அவர் அநுபவத்தில் காணாதது ஏதும் இல்லை.

"குறுணி குத்தி மேகம் தெரியுது. இன்னும் கொஞ்ச நேரத்தில் சக்கை மழைதான்."

இவர் சொன்னார் என்றால் கட்டாயம் மழைவரும். அப்படி ஒரு அநுபவசாலி. பாம்புக்கடிக்கு விஷமுறிவு மருந்து இவரிடம்தான் கிடைக்கும்.

இவர் சொன்னது போல குதிரைகள் வர ஆரம்பித்தன. பக்கவாட்டில் நீள கழிகளைக் கட்டி பல்லக்குத் தூக்குவது போல குதிரைகளைத் தூக்கிக் கொண்டு வந்தனர். மண்குதிரைகள்தான் என்றாலும் நிசத்தைப் போலவே நீள, உயரமும் வெள்ளையும் சிவப்பு வண்ணமும் கொண்டவை.

இவற்றின் மேல் ஏறித்தான் இந்த ஊரின் காவல் தெய்வமான அய்யனார் இந்த ஊரைச் சுற்றித் தினமும் வலம் வருவதாக ஐதீகம். அதனால்தான் பூஞ்சோலையில் போய் அய்யனார் சிலை இறங்கியதும் அவருக்கு முன்பாக இந்த இரண்டு குதிரைகளும் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும். கூடவே வேட்டைநாயின் சிலையும் இருக்கும்.

சிலை தூக்கிவர 15 தினங்கள் இருக்கும் போதே பூஞ்சோலையில் கொடியேற்றிவிடுவார்கள். கொடியேற்றியதற்குப் பிறகு யாரும் ஊரைவிட்டுப் போகக் கூடாது. திருவிழா முடிந்தபிறகுதான் போக முடியும்.

மிகவும் சக்திவாய்ந்த தெய்வம் என்பதால் சுற்றி இருக்கும் ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் கூடுவார்கள். வளையல்காரர்களும் துணி விற்பனை செய்பவர்களும், கொடைராட்டினம் சுற்றுபவர்களும் ஊரில் முகாம் இட்டுவிடுவார்கள். மின்விளக்குகளும், ஒலிபெருக்கிகளும் ஊர் மக்களை உற்சாகப்படுத்திக் கொண்டு இருக்கும்.

வீட்டுக்கு ஒருவர் சிலை எடுக்க வரவேண்டும். விழாவுக்கும் வரிகொடுக்க வேண்டும். அய்யனார் சிலையை பெரியபட்டி பூசாரி குடும்பந்தான் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகிறது. அதற்கென்று முப்பதுநாள் உபவாசம் இருந்து, கவுச்சி, புளி சேர்க்காது பக்தியில் இருக்க வேண்டும் அந்த பூசாரி. நல்ல நினைவோடு அதிகாலை நேரத்தில் அய்யனார் மீது பக்தியோடு சிலை எடுக்க ஆரம்பித்தால் முடிக்க மதியம் 12 மணி ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

அதுவரை பல்லில் பச்சைத் தண்ணீர்கூடப் படாது. களிமண்ணை எடுத்து அவர் செய்து கொண்டு இருக்கும்போது யாரும் பார்க்கக் கூடாது.

சிலை காய்ந்து கோடாரிக் கொண்டைக்கும், மீசைக்கும் கறுப்பு வண்ணம் பூசி, விழிகள் திறந்த பிறகு பூசைகள் நடக்கும். அதன் பிறகே அய்யனாரைப் பார்க்கலாம்.

விழாவன்று பூசாரி தலையில் அய்யனார் சிலை இருக்கும். இவரைப் போலவே பக்தி கொண்ட ஊர் பெரிய ஆட்கள் தலையில் மற்ற சிலைகள் இருக்கும். இளைஞர்கள் - கொடி, குடை முதலியவற்றை எடுத்துக் கொள்ள கூட்டம் பெரிய பட்டியில் துவங்கி ஊர்வலமாக பூஞ்சோலை வரை வரும். வழியில் எங்கும் நிற்காது.

வணங்க வேண்டும் என்பவர்கள் சாமி வரும் வழியில் காத்து இருப்பர். பூசாரியின் கால்களில் மஞ்சள் தண்ணீரை ஊற்றி காலில் வீழ்ந்து வணங்கி எழுவர்.

கச்சை கட்டிக் கொண்டு பிரம்பு சுழற்றி சாமி ஆடிகள் சாமிக்கு முன்பாக ஆடிவர, வாண

படிப்பகம்

www.padippakam.com

வெடிகள் வானைப் பிளக்கும்.

எப்பவும் நான் என் தந்தையின் தோளில் ஏறிக் கொள்வேன். சாமி உயரத்துக்கு இல்லை என்றாலும் நடப்பதை, நன்கு பார்க்க முடியும். இந்த வருடம் அது முடியாது போல இருக்கிறது. கொடியேற்றிய பிறகு குடித்துவிட்டு வந்தார் என்பதற்காக என் அப்பாவை ஊரைவிட்டே தள்ளிவைத்துவிட்டார்கள். எனக்கு மட்டும் பக்கத்து ஊர் சந்தையில் இருந்து புதுச்சட்டை வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனவர் எப்போது வருவார் என்று தெரியவில்லை.

குடைராட்டினத்தில் குதிரைமேல் உட்கார்ந்து எப்பவும் சுற்றுவேன். இப்போது அது முடியுமா என்பது தெரியவில்லை. ஒருவேளை என் ஆத்தாவிடம் காசு இருந்தால் முடியும்.

அநேகமாக இந்த வருடமும் குடை ராட்டினம் சுற்றமுடியும் என்றுதான் எண்ணுகிறேன். ஏன் என்றால், என் தங்கைக்கு இரப்பர் வளையல் வாங்கியது எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. ஆத்தாவிடம் போகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போது கதிரேசன் என் பக்கமாக ஓடிவருவதைப் பார்த்துவிட்டேன்.

"டேய் கதிரேசா டேய்"

"போடா, நான் சாமி பாக்கப் போறேன்"

"டேய் நில்லுடா நானும் வரேன்"

"நான் ஊருணி மேட்டில் ஏறி நின்னு பாக்கப் போறேன். உன்னால அதுமேல ஏற முடியாது"

சொல்லி முடிக்காமலே சிட்டாகப் பறந்து கொண்டு இருந்தான் கதிரேசன். நானும் விடுவதாக இல்லை. அவன் பின்னாலேயே ஓடினேன்.

ஊருணியில் எப்பவும் தண்ணீர் இருக்கும். ஆடு மாடுகள் குடிக்கத்தான் இது. இதில் யாரும் குளிக்கக் கூடாது. பெண்கள் துணி துவைக்கக் கூட, குடத்தில் எடுத்துக் கொண்டுதான் போக வேண்டும்.

இந்த மேடு உயரமானது. படி ஏதும் இல்லாததால் எளிதில் ஏற முடியாது. ஆனால் கதிரேசன் எளிதில் ஏறிவிடுவான். இது சாமி வரும் வழியில் இருப்பதால், இங்கிருந்து ஊர்வலத்தை நன்கு பார்க்க முடியும்.

கதிரேசனைக் கடைசிவரை பிடிக்க முடியவில்லை. மேல் எல்லாம் எனக்கு வியர்த்துவிட்டது. மூச்சுவேறு இரைக்கிறது. மிகுந்த சிரமத்துக்குப் பிறகு மேடு வந்து சேர்ந்தேன். ஏற்கனவே மேட்டில் கதிரேசனோடு இன்னும் சிலரும் இருந்தார்கள்.

"டேய் கதிரேசா என்னையும் ஏற்றிவிடுடா"

"உன்னாலேயே முடியவில்லையே உனக்கு எதற்கு இந்த ஆசை எல்லாம்"

நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு, "பாவம் போனால் போகட்டும்" என்று ஏற்றிவிட்டான். அதுவும் நல்லதற்குதான். ஏனென்றால் அப்போதுதான் புலிவேசம் போட்டவர் வேகமாக ஆடிக் கொண்டு வந்தார். கதிரேசன் ஏற்றிவிடாமல் இருந்தால் எனக்கு அந்த வேடிக்கையைப் பார்க்க முடியாமல் போய் இருக்கும்.

இன்று நினைத்தாலும் அந்த வருடத் திருவிழா எனக்கு இனிக்கிறது. காலம் பறந்துவிட்டது. கதிரேசன் யாரோ ஒரு பெண்ணோடு தொடர்பு கொண்டான் என்பதற்காக வெட்டிக் கொன்றுவிட்டார்கள். என் தந்தை அந்த வருடம் போனவர்தான். மீண்டும் ஊருக்கு வரவே இல்லை. நான் சாராயக் கடை ஏலம் எடுத்து கள்ளச் சாராயம் பாதியும், நல்ல சாராயம் பாதியுமாக விற்று பெரிய காரை வீடு ஊருக்கு மேற்கே கட்டி இருக்கிறேன்.

திருவிழாச் செலவு ஏகமாய் ஏறிவிட்டதால் வரிப்பணம் மட்டும் இப்போதெல்லாம் போதுவது இல்லை. எனவே கள்ளச் சாராயம் விற்ற பணத்தில் இருந்து கணிசமாக ஒரு தொகையை வருடாவருடம் நான் கொடுத்து வருகிறேன். அதனால் சாமி ஊர்வலம் என் வீட்டுக்கு வந்து விட்டுத்தான் இப்போதெல்லாம் பூஞ்சோலைக்குப் போகிறது.

இன்னும் ஊருணியில் தண்ணீர் இருக்கிறது. இளம் பெண்கள் குளிப்பதற்கும் துவைப்பதற்கும் ஏகமாய் கூடுகிறார்கள். நானும் அங்கு போகிறேன். ஊருணி மேடும் இப்போது மிகவும் சின்னதாகிப் போய்விட்டது. ரெம்பநாள் உயிருடன் இருந்து இறந்துபோன வேலுத் தாத்தா கூட, "ஐயோ ஊர் இப்படிப் போச்சே; ஐயோ ஊர் இப்படி போச்சே" என்று முனகிக் கொண்டேதான் செத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

உருவம்

இன்று மாலை சந்திப்பதாக எழுதியிருந்தான்.

பிங்க் நிற எழுத்தில், கோணலான வரிசை. நெருக்கியபடியிருந்தன. எழுத்துக்கள் எம்மொழி என்று அனுமானிக்க முடியவில்லை. கடிதம் மிக வித்யாசமாக இருக்கிறது.

"கண்ணாடியின் பிரதிபலிப்பில் படிக்கவும். அதற்குமுன், நீரில் நனைத்திட வேண்டும். காய வைத்து அல்லது உலர்த்தியபின், கண்ணாடி முன் தலைகீழாக வைத்து படிக்கவேண்டும்."

இப்படியான குறிப்பு, கடிதத்தின் கடைசியில் கட்டத்தின் உள்ளே எழுதப்பட்டு இருந்தது.

கடிதத்தை அக் குறிப்பின்படியே செய்ய, கண்ணாடியின் முன் வைத்துப் படித்தேன். தலைகீழாகத் தொங்கும் வௌவாலைப் பார்ப்பதாக இருந்தது. அக்கடிதத்தைப் பற்றியும் சொல்லியாக வேண்டும்.

அவன் மிகக் கோணலான தோற்றத்தைக் கொண்டு இருக்கலாம். ஏனெனில், புரிதலற்றதும் சிக்கலானதுமான கையெழுத்து. புள்ளி, கமா, செமி-கோலன் ஆகியவற்றைப் பயன்படுத்தாததால், முழுமை என்பது அவனிடம் கிடையாது என்றோ, கட்டுப்பாடுகளை மீறத் துடிப்பவன் என்றோ அவதானித்தாலும், கோணலான வரிசையில் இருப்பதால் கோணலாவே அவன் இருக்கலாம்.. தன்னை வித்யாசப்படுத்திக் கொள்ளவோ அல்லது எல்லோரையும் ஒதுக்கவோ அவன் விரும்பலாம். ஏனெனில், கடிதம் எழுதப்பட்ட முறை புதியதாக இருந்தது.

தான் வருவதாக எழுதிய ஒரு வரி மட்டுமே நிலையாக எழுதியிருந்தான். இதுவரை அவனை நேரில் பார்த்தது கிடையாது. என்னையும் அவன் பார்த்ததும் இல்லை.

என்னை ஒரு பத்திரிகையில் படித்ததாகவும் அதன் கட்டுரையில் கொடுக்கப்பட்ட முகவரியின்படி, என்னை சந்திக்க வருவதாகவும் எழுதியிருந்தான். அவன் எழுதிய செய்திகளைக் கொண்டு பார்த்தால், என்னையும் மிஞ்சுவான் போலிருந்தது.

கடிதத்தை வைத்துவிட்டு, கண்ணாடியைப் பார்த்தேன்.

அவன் தெரிகிறான்.

கண்ணாடியில் நீரலைபோல் ஆடியபடி சிரித்துக் கொண்டிருக்கிறான். வசீகரிக்கிற முகமும், நல்ல உடற்கட்டும் கொண்டிருந்த அவன், என்னை உடலளவில் மிஞ்சிவிடுவான் போலிருந்தது.

அவனை உருமாற்றத் தொடங்கினேன். அவன் துணிக்கடை ஷோ-கேஸ் பொம்மைப்போல் ஆகியும்விட்டான். இப்போதைக்கு அவனை முண்டமாக்க விரும்பினேன். தலையில்லாமல் கிடந்தது அவன் உடல். நரி, முயல், கரடி, நாய் என சகலவிதமான பிராணிகளின் தலைகளைப் பொருத்திப் பார்த்தேன். சிருஷ்டியின் சந்தோஷத்தில், அபூர்வ அற்புதத்தையும் நினைத்தேன். அவனை ஒரு மரத்தின் கீழ் அசைபோடும் எருமையின் உருவமாக, வான்மேகங்களைக் கிழித்தபடி பறக்கும், கூரிய அலகுடைய கழுகுக் கால்களில் சிக்கிய பாம்பாக, கடலில் கடற்கன்னி முத்தமிடாமல் ஒதுக்கிய அற்ப மனிதனாக உருவகித்துப் பார்த்தேன். எதையும் தாங்கிக் கொண்டு நிற்கிற அவன் உடலை, கூர்மையான கத்தியால் கிழிக்கிறேன்.

- ராணி திலக்

படிப்பகம்

www.padippakam.com



நிலைக் கண்ணாடி உடைகிறது.

அவன் என்னை மிஞ்சக்கூடாது என்பதில் குறியாக இருந்தேன்.

கதவு தட்டப்படுகிற ஓசை. திறந்தேன். கதவின் முக்கால்வாசியை அடைத்தபடி உருவம். தானே கடிதம் எழுதியதாக தன்னை அறிமுகம் செய்தான். அந்நிலையில், அவனைப் பார்க்கும்போது, என் கண்ணாடியில் இருந்த அவன் உருவம் என்னைப் பார்த்துச் சிரித்தது.

கீழே கண்ணாடிகள் உடைந்து சிதறியதைப் பார்த்துக் கொண்டிருந்த அவனை, நாற்காலியில் உட்கார வைத்தேன். நானும் உட்கார்ந்து பேசத் தொடங்கலாம் என்றபோது, அவன் பேச எத்தனித்தான். அவனை அமைதியாக இருக்கும்படி சைகை செய்து, கண்ணாடியில் சிவப்புத் துணி போர்த்தினேன்.

அவனை மிஞ்ச வேண்டும் என்பதில் குறியாய் இருக்கிற நானே, முதலில் பேசத் தொடங்கினேன். அவன் பதிலளிக்காமல், முன்னர் கேட்க நினைத்ததைக் கேட்டான்.

"நண்பா இத்தனை நேரம் நிலைக்கண்ணாடி முன்தான் அமர்ந்திருந்தாயா?"

"ஆம்"

சிரித்தான்.

"நிலைக்கண்ணாடியில் என்ன பார்த்துக் கொண்டு இருந்தாய், நண்பா?"

"ஒரு மரத்தை, கழுகை, முத்தமிடாது ஒதுக்கிய கடற்கன்னியை, கத்தியால் கிழிப்பவனை"

"அவை யாவும் நீயாக இருக்க விரும்புகிறாயா?"

"ஆம்"..

"நீ என்னவாக இருப்பாய்?" என அவனிடம் கேட்டேன்.

மேசையின் மீது கிடந்த கடிதத்தைப் பார்த்தபடி பேசத் தொடங்கினான் :

"மரத்தைத் தாங்குகிற பூமியாக, கழுகை ஏந்துகிற காற்றாக, கடற்கன்னியை உள்வாங்கிய கடலாக... கிழிப்பவனைத். தாங்கும் கண்ணாடியாக..."

வஞ்சத்தோடு சிரித்தேன். சிரித்தபடியே அவனும் கைகுலுக்கிக் கொண்டு வெளியேறினான். அவனை அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்தேன்.

கண்ணாடியின்மீது இருந்த சிவப்புத் துணி சரிந்து இருந்தது. நிலைக்கண்ணாடி மரச் சட்டமாகி இருந்தது. தரையில் சிதறியிருந்த பெரிய கண்ணாடித் துண்டுகளை மட்டும சட்டத்தில் பொருத்திப் பார்த்தேன்.

அவன் உருவம் காணாமல் போயிருந்தது. ஏதோ ஒரு உருவம் மிகத் தொலைவில் இருந்து வந்துகொண்டிருந்தது. மிகத் தெள்ளத் தெளிவாய்ச் தெரியும்படி வந்து நின்றது. உற்றுப் பார்த்தேன்.

நான் இரத்தக் காயங்களுடன் இருந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கைச் செய்திமடல்

- கே. விஜயன்

இலங்கைச் சிங்கள மேடை நாடகங்கள் சிறப்பானவை. பல சிறந்த நாடகத் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் திஸ்ஸ ஹேரத் என்பவரும் ஒருவர். 42 வயது உடையவர், அநுபவ முதிர்ச்சிமிக்க சிந்தனையாளர்.

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சியின் போது இவரால் தயாரிக்கப்பட்ட பச்ச ஹா யட்ட (பொய் மரத்தின் கீழ்) எனும் நாடகம் ஒரேயொரு காட்சியுடன் தடை செய்யப்பட்டது.

பிறகு பிரேமதாசாவுக்கு எதிராக அவருடைய கட்சியாளர்களாலே அவதூறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபொழுது, பிரேமசந்திர என்பவரின் அறிவியல் பேச்சு அடங்கிய கசெட்டில், 'பொய் மரத்தின் கீழ், நாடகத்திலுள்ள சில பாடல்களைச் சேர்த்துக் கொண்டார்கள். ஹேரத் அக் கசெட்டை வெளியிட்டார். அதன் பிரதிபலன் பாரதூரமாக அமைந்துவிட்டது.

ஹேரத் நடுத்தெருவில், பட்டப்பகலில் குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு பொலிசாரால் சிறையில் அடைக்கப்பட்டு அங்கும் ஏவிவிடப்பட்ட கொலைக் கைதிகளால் தாக்கப்பட்டார். ஹேரத் ஒரு நோஞ்சான் நாடகத் தயாரிப்பாளர் அல்ல, ஆஜானுபாகுவான மனிதன். சண்டை அடி பிடிகளுக்கும் அஞ்சாதவர். 1971-ம் ஆண்டில் சிங்கள இளைஞர் களினால் நடத்தப்பட்ட ஏப்ரல் கிளர்ச்சியின் போது சிறையிலடைக்கப்பட்டு, அங்கிருந்து தப்பி யாழ்ப்பாணம் சென்று அங்கே கொஞ்ச காலம் வாழ்ந்தவர். இத்தகையதொரு நபர் சிறைச்சாலைக்குள் ஏவிவிடப்பட்ட கொலைகாரர்களை அடித்து நொறுக்கி விட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

எனினும் பல பாதிப்புகள் இன்று அவரை ஆடிப்போகச் செய்துவிட்டதாகப் பலரின் கணிப்பு. மனோரீதியான பாதிப்பு, பொருளாதார ரீதியான பாதிப்பு அவரை முடக்கி விட்டிருக்கின்றது. இப்போதும் அவர் ஓய்ந்துவிடவில்லை.

பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் தனக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக ரூ. ஒன்றரைக் கோடி நஷ்டம் கோரி வழக்குத் தொடுப்பதற்கான மனுவை கலாசார அமைச்சுக்கும் இலங்கை மேல் நீதிமன்றத்திற்கும் சமர்ப்பித்துள்ளார்.

"ஒரு கலைஞனின் இப்போராட்டம் இலங்கை வரலாற்றில் முதல் முதலாக இடம் பெறுகின்றது. இலங்கை வாழ் முழு கலைஞர் சமுதாயத்திற்கும் எனது முன்னுதாரணம் ஓர் அடித்தளமாகும்" என ஹேரத் குறிப்பிடுகிறார். பெட்ரோக்கா, ரெயில் பீவி, பிரதிரூப, ஆகாசக் கடே, பச்ச ஹா யட்ட ஆகியன ஹேரத் தயாரித்து அளித்த நாடகங்களாகும்.

மாக்சிம் கார்க்கியின் **The Three** என்ற சிறுகதையே பெட்ரோக்க நாடகமாகும். ரெயில் பீவி (தண்டவாளம்), பிரதிரூப் (Image) ஆகாசக் கடே (ஆகாயக்கோட்டை) ஆகிய நாடகங்கள் நாடெங்கும் 500க்கும் அதிகமான முறையில் மேடையேற்றப்பட்டு வெற்றிவாகை சூடியவை.

அரசியலைச் சாடும் இக்கதைகள் இன ஒற்றுமைக்கான அறைகூவலை விடுக்கின்றன.

'மனிதன் அருந்தும் நீரிலிருந்து அவனுடைய உள்ளாடை வரையில் அரசியல் உள்ளது. அதனாலே எனது கதைகள் அனைத்தும் அரசியலாகவிருக்கின்றது' என்பது ஹேரத்தின் குமுறலுடன் கூடிய வாதமாகும்.

கலை இலக்கியத் துறையில் 'தோ சாபியே, கய' எனும் பாடல் கசட், 'ஆசன' சஞ்சிகை, சில தனிப்பாடல்கள், கவிதைத் தொகுப்பொன்று, தற்போது அச்சில் இருக்கும் பேனையும் துப்பாக்கியும் எனும் தொகுப்பு நூல். யுத்தத்திற்கு சாபம் எனும் சர்வதேசத் திரைப்படம் என்பன ஹேரத்தின் அறுவடைகளாகும்.

'எனது நாடகங்கள் எளிமையானவை. ஆடம்பரமான காட்சி அமைப்புகள் அவற்றில் இல்லை. வாழ்வின் அன்றாட நிகழ்வுகளைக் கூறும் கதை, பாத்திரங்கள், பாத்திரங்களின் உரையாடல்கள் என்பன வற்றில் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறேன்.

'எனது நாடகங்களில் பாத்திரங்கள் உரையாடுகின்றபொழுதும், பார்வையாளர் கூட்டம் நிரம்பி வழிகின்ற பொழுதும் அங்கே மயான அமைதி நிலவும்....' என ஹேரத் குறிப்பிடுகின்ற பொழுது அவருடைய பிரகாசமான கலைத்துவமிக்க இருதயத்தை என்னால் தரிசிக்க முடிகிறது. •

படிப்பகம்

www.padippakam.com

பல்வேறு காட்சிகள்

- பாரதி ராமன்

மனதை அடக்குவது மிகவும் கடினமான காரியமாக இருக்கிறது. சும்மா இருக்கும் நேரங்களில் அது எதெதையாவது கற்பனை செய்து கொள்கிறது. பிறகு குரங்குபோல வேறெதற்கோ தாவி விடுகிறது. மூளைதான் பாவம், அந்தக் கற்பனைகளைக் களை எடுத்துப் பயிராக்க முனைகிறது. ஒரு சினிமா எடிட்டரைப் போல.

சினிமா படப்பிடிப்பைப் பாருங்கள், எப்படியெல்லாமோ எடுக்கிறார்கள். சினிமாவை அதன் கதை ஓட்டப்படிதான் படமாக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நடிக நடிகையரின் கால்ஷீட், ஸ்டுடியோ வசதிகள், வெளிப்புறக் காட்சிகளுக்கான இடங்கள் இவைகள் கிடைப்பதைப் பொறுத்து முதலில் க்ளைமாக்ஸ், பிறகு கொஞ்சம் சண்டைக் காட்சிகள், கோர்ட் சீன், சிரிப்பு, உரசல் காட்சிகள், முதலில் மழையில் பிறகு கணப்பருகில் அல்லது முறைமாற்றி, மீண்டும் சண்டைக் காட்சிகள், சிறிது கிளீசரைன் காட்சிகள். இப்படி எப்படிவேண்டுமானாலும் படம் எடுக்கலாம். டூப் கூட போடலாம். இசையில் முதலில் இசைக்கருவிகளின் இரைச்சலைப் பதிவு செய்துவிட்டு பிறகு பாடகரின் குரலைப் பதிவாக்கலாம். பாட்டுக்களை மட்டுமே முதலில் ரிலீஸ் செய்துவிட்டு வினியோகஸ்தர்களிடம் பேரம் பேசிவிட்டுப் படப்பிடிப்பைத் தொடரலாம். கடைசியாக எடிட்டிங்கில் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திச் சரிக்கட்டிவிடலாம். சினிமா எடுக்கத்தான் எவ்வளவு வசதிகள்!

இதையெல்லாம் சற்றும் தெரிந்திராத என் மனம் திடீரென்று ஒரு நாள் தறிகெட்டுப் பல காட்சிகளை என் முன் ஓடவிட்டது.

முதல் காட்சியாக சுமதி அமெரிக்காவில் இருப்பது.

இரண்டாவது காட்சியாக குசலாம்பாள் மாமி படும் கஷ்டங்கள்.

மூன்றாவது ராமசுந்தரம் தன் வீட்டுக்கு உதவிக்கான ஆள் தேடலான காரியம்.

நான்காவது நஷ்டஈட்டுப் பணத்தில் ஒருவன் பங்களா வாங்கியது.

வெளிநாட்டில் சந்தித்த நம் நாட்டவர் இருவரிடையே மலர்ந்த காதல், ஐந்தாவது காட்சி.

கிராமத்தில் கஷ்டப்படும் தாயை மகன் தன்னிடம் வரவழைத்து ஆதரிப்பது, ஆறாவது காட்சி.

ஏழாவது காட்சி, சுந்துவின் தாய் தன் ஆத்ம திருப்திக்காக ஒரு வீட்டில் சமையல்காரியாவது. எட்டாவது காட்சி, திடீரென தகப்பனை இழந்து தவிக்கும் பெண்ணுக்கு மாமியாராகி மனம் நெகிழ்வது.

ஒன்பதாவது காட்சியில் மாமியாரின் மூக்கை உடைக்க மருமகளின் முஸ்தீபு. இக்காட்சியின் கடையில் கொஞ்ச நேரம் இடைவெளி விடுகிறது மனம்.

பத்தாவது காட்சியில், கோபாலனின் மனைவி பட்ட துயரங்கள் தொடருமா என்ற கேள்வி.

இது என்ன, பித்துப் பிடிக்க வைப்பது போல் பத்துக் காட்சிகள்? என் மூளை தவிக்க ஆரம்பித்துவிட்டது. இந்தக் காட்சிகளைச் சம்பந்தப்படுத்தி ஒரு கதையாக்கித் தர எதாவது இன்ஸ்டிட்யூட்டின் இரவல் மூளை கிடைக்குமா? அப்படிப்பட்ட இன்ஸ்ட்டிட்யூட்கள் இருந்தால் இன்னும் சில வருஷங்களுக்கு எல்லாப் பத்திரிகைக் கதைகளிலும் இன்ஸ்டிட்யூட்காரர்களின் ஆதிக்கம் மேலோங்கிவிடும். இன்ஸ்டிட்யூட் எடிட்டர் களுக்குக் கிராக்கி ஏறிவிடும். கொஞ்ச நாட்கள் கழித்து கதைகளை மனம் கோர்வையாகவே சொல்லப் பழகிக் கொள்ளும். இப்படியாக ஒரு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சுழற்சி கதை உலகில் ஏற்பட்டு 'புனரபி எடிட்டிங், புனரபி ரைட்டிங்' என்றாகிவிடும். சரி, இப்போது என் மனதிலோடிய இந்தப் பத்து காட்சிகளைச் சுழலவிட்டுப் பார்க்க வேண்டும்.

காட்சி ஒன்று

நியுயார்க்கில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி. பிரசவப் பிரிவில் மட்டுமே ஒரு நாளைக்கு ஐம்பது பிரசவங்கள் பார்க்க வசதி உள்ளது. இன்று அங்கு நியுயார்க் மாநில கவர்னரின் மனைவி பிரசவத்திற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். அவளுக்கு நடுஇரவில் வலி கண்டுவிட்டது. "கூப்பிடுங்கள் சீஃபை" நர்சுகள் அலறுகிறார்கள். அமெரிக்க டாக்டர்களோ நேரம் பார்ப்பவர்கள். பணி செய்யுமிடத்தில் கொஞ்சநேரம் கூடுதலாகத் தங்க, அவசரக் கேஸ்களைக் கவனிக்க என்று அழைத்தால் "சாரி, முடியாது எனக்கு வேறு சொந்த வேலை இருக்கிறது, நீங்கள் வேறு டாக்டரைக் கூப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்பவர்கள். கவர்னரின் மனைவியைக் கவனிக்க இப்போது 'சீஃப் இல்லை' (அதற்காகத்தான் வெளிநாடுகளில் இந்தியர்களை வேலைக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள், குறிப்பாக டாக்டர்களை. இந்திய டாக்டர்கள் பொறுமைக் கடல்கள், தியாகச் சுடர்கள். எந்த நேரத்திலும் தம் சொந்த சோலிகளைத் தள்ளிவைத்துவிட்டு அவசரப் பணிகளுக்கு ஆஜராகிவிடுவார்கள். இந்தியர்களுக்கு ஓவர் டைம் பணத்தில் ஆசை என்று அமெரிக்கர்கள் கேலி கூடச் செய்வதுண்டு) "கூப்பிடுங்கள் டாக்டர் சுமதியை" என்று பலதிசைகளில் குரல்கள் பறக்கின்றன. கவர்னரின் மனைவி என்று மட்டுமில்லை இந்த நேரத்தில் ஒரு கறுப்பரின் மனைவி என்றாலும் கூட டாக்டர் சுமதி வந்துவிடுவாள். சுமதி வந்து உடனே கவனித்ததில் கவர்னரின் மனைவிக்கு மறுபிறப்பு. நல்லவிதமாக குழந்தையும் தாயும் தனித்தனியாயினர். பெண்குழந்தை. குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழாவிற்கு டாக்டர் சுமதிக்கு அழைப்பு வருகிறது, கவர்னரிடமிருந்து. அங்கே போன டாக்டர் சுமதிக்கு ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. அந்தக் குழந்தைக்கு டாக்டரின் நினைவாக 'சுமி' என்று பெயர் சூட்டியிருப்பதாக கவர்னர் தம்பதி அறிவிக்கிறார்கள். டாக்டர் சுமதிக்கு அந்தக் கணமே தன் மேல்படிப்பு வெற்றிகரமாக முடிந்துவிட்டதாகவும் அமெரிக்காவுக்கு வந்த தன்னுடைய லட்சியம் நிறைவேறிவிட்டதாகவும் ஒரு பெருமிதம் ஏற்படுகிறது. (4)

காட்சி இரண்டு

"குழந்தே நீ நன்னாப் படிக்கணும்"

படிப்பகம்

www.padippakam.com

படிக்கறதுக்கான சக்தி கெடைக்க நன்னா சாப்பிடணும். படிச்சு பெரிய வேலைல சேர்ந்து அம்மாவைக் காப்பாத்தணும்'' என்று கூறிக் கொண்டே தன் மகனுக்கு உணவளித்துக் கொண்டிருக்கும் குசலாம்பாளின் கண்களில் முட்டும் நீரினிடையே சுந்தரேசனின் எதிர்காலமே தொக்கி நின்றதுபோலிருந்தது. "அம்மா, எனக்காக நீ ஏம்மா பட்டினி கிடக்கறே? உடம்பு தேய நாலு வீட்டிலே வேலை செய்து ஏம்மா உன்னையே நீ வருத்திக்கிறே? நான் கஷ்டப்பட்டு நன்னா படிப்பேம்மா. பாரு, இப்பக் கூட கிளாசிலே நான்தான் ஃபர்ஸ்ட். மணிகூட எனக்கப்பறம்தான். நன்னா படிச்சு ஸ்காலர்ஷிப் வாங்கி காலேஜுலேயும் சேர்ந்து மேலே மேலே படிப்பேம்மா. அதுவரைக்கும் கஷ்டத்தை ரெண்டு பேருமா பங்கிட்டுக்குவோம். நீ மாத்திரம் தனியா கஷ்டப்படறதைப் பார்க்க என் மனசு சங்கடப்படறதம்மா. அந்த சங்கடத்திலே படிப்பு பாதிக்கக்கூடாதுபாரு. நீ இதுவரைக்கும் பட்ட கஷ்டம் வீண் போகக்கூடாதம்மா" - சுந்துவின் குரலில் இருந்த கெஞ்சலும் அதேசமயம் அவனிடமிருந்த தீர்மானமான நோக்கமும் குசலாம்பாளை கொஞ்சம் அமைதிப்படுத்தி அவளுக்கு மனதில் ஒரு தைரியத்தைக் கொடுத்தது. "என் கண்ணே, இந்தப் பிஞ்சு வயசிலதான் உனக்கு எவ்வளவு பொறுப்பான பேச்சுடா. நீ நன்னா இருக்கணும்டா ராஜா!'' என்று மகனை வாழ்த்தினாள் அந்தத்தாய். சில வருஷக் கஷ்டங்களுக்குப் பிறகு தன் மகன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ரசாயனத்துறையில் முதுகலைப் பட்டதாரியாக முதல் மாணவனாகத் தேர்ந்ததைப் பார்த்து அவள் பூரிப்படைந்தாள். அவள் பட்ட கஷ்டங்கள் வீண்போகவில்லை. பெற்ற வயிறு மணி வயிறுதான். இல்லை இல்லை சுந்து வயிறு. (1)

காட்சி மூன்று

ராமசுந்தரத்திற்கு தன் ஒரே பெண்ணின் மீது உயிர். தாயை இழந்தவள் என்பதால் ஒரு நிமிடமும் அவளைப் பிரிந்திருக்கச் சம்மதிக்கமாட்டார். அவள் 'தன் மேற்படிப்புக்காக இரண்டு வருடம் அமெரிக்கா போவேன் என்றபோது தடுத்துப் பார்த்தார். ஒருபக்கம் மகளைப் பிரிய வேண்டுமே என்ற கவலை. மறுபக்கம் அவளது முன்னேற்றம் தடைபட்டுவிடுமோ என்ற பயம். முன்னேற்றத் திற்காக அவள் அமெரிக்கா போய்த்தான்

ஏதுக்கோ...

இருக்கிறதா உன்னிடம்
எந்தவொரு குழுவின்
அடையாள அட்டையோ
யாதொரு கட்சியின்
உறுப்பினர் கார்டோ

யாருமே அறியாமல்
புறவாசல் வழியோடி
அனுசரித்துத் தழுவிட
ஆகுமா உன்னால்

எந்தக் கொம்பன் பட்டியலிலும்
இடம்பெறுமா உன் திருநாமம்

பிறப்புச் சான்றிதழைத்
துருப்புச் சீட்டாக்கும்
பிரம்மாஸ்திரப்
பிரயோகம் அறிவாயா

தன்னையே முன்னிலைப் படுத்தும்
தந்திரோபாயங்கள்

கைவருமா உனக்கு

அட உன் பேருக்கு
முன்பாரா பின்பாரா
போட்டுவிடும்
தொழிலடைச் சொல்லேனும்
கை வசமா சொல்

எல்லாமே போகட்டும்
யாரையும் 'கண்டுக்க'த்தான்
தெரியவில்லை உனக்கு
எதையுமே 'கண்டுக்காம' லேனும்
கம்முன்னு கெடக்கப்டாதா

அப்புறம்
என்ன 'மயித்துக்கோ'
எழுதத் துணிந்தாய் நீ



பொதிகைச் சித்தர்

படிப்பகம்

www.padippakam.com

ஆகவேண்டும் என்று தீர்மானித்தபோது தானும் உடன் செல்ல முடிவெடுத்து இருவருமே கிளம்பிவிட்டனர். மகளுக்கு நியுயார்க்கில் வேலைசார்ந்த படிப்பு. புறநகர் ஒன்றில் வீடு பிடித்தாயிற்று. வேலை செய்யும் இடத்திற்குத் தினமும் காரில் சொந்த டிரைவிங்கில் போய்விட்டுவருவதே மகளுக்கு பெரும்பாடாகத் தென்பட்டது. சில சமயங்களில் வேலைப் பொறுப்பில் அவள் திரும்பி வீடு வந்து சேர இரவு வெகு நேரம் கூட ஆகிவிடுவதுண்டு. தனக்கான வயதில் எல்லா வேலைகளையும் தானே செய்ய முடிவதில்லை. மகளாலும் முடியாத நிலைமை. சமையலுக்காவது ஒரு ஆள் இருந்தால் தேவலாம் போல இருந்தது, ராம சுந்தரத்திற்கு. பத்திரிகைகளில் (தமிழிலும் கூட) விளம்பரம் கொடுத்தார். ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லாத சமையல்காரிக்காகக் காத்திருந்தார். சீக்கிரம் கிடைத்தால் தனக்கும் மகளுக்கும் நிம்மதியாக இருக்கும் என்று எண்ணிக் காத்திருந்தார். அந்த நாளும் வந்தது. உள்ளூரிலிருந்தே, நியுயார்க் கிலிருந்தே ஒரு தமிழ் மாமி கிடைப்பாள் என்று அவர் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. பதில் கடிதம் வந்த உடனே அந்த மாமியைப் போய்ப் பார்த்துப் பேசி அமர்த்திவிட்டார். மாமியை தினமும் அவள் வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டுவந்து திரும்பக் கொண்டுபோய்விட்டு வரவேண்டுமென்பதைத் தவிர வேறு சிக்கல் இல்லை. இப்போது ராமசுந்தரத்திற்கு பெரிய நிம்மதி! (3)

காட்சி நான்கு

அமெரிக்க நீதிபதிகள் நியாயத்தை நிலை நிறுத்துவதில் கண்டிப்பானவர்கள். நியுயார்க் கிலுள்ள ஒரு பெரிய ரசாயனக் கம்பெனியில் ஒரு விபத்து ஏற்பட்டு அதன் பிரதான என்ஜினியர் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் உயிர் பிழைத்துவிட்டார். அவர் இந்தியர் என்பதால் அந்த அமெரிக்கக் கம்பெனி நஷ்டஈடு தருவதில் சற்று சுணக்கம் காட்டியது. விபத்தில் முகம் வெந்துபோன இந்தியர் பிளாஸ்டிக் சர்ஜரி, இதர ஆஸ்பத்திரிச் செலவுகளுக்கு மட்டுமே ஈடுசெய்யப்பட வேண்டியவர் என்று அது கோர்ட்டில் வதாடியது. அமெரிக்காவில் செய்யப்பட்ட அவசர சர்ஜரி அவரது முகக்கோரத்தை வெகுவாகக் குறைக்க முடியவில்லை. க.க.க. தெய்வத்தில் வரும் ஜெமினியின் முகத்தைவிடக் கொஞ்சம் பரவாயில்லை எனலாம். இந்திய என்ஜினீயர் மிகத் திறமைசாலி. இளைஞர். அவர் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியதும் அனுபவிக்க வேண்டியதும் இன்னும் ஏராளமாக இருக்கும். அவருடைய சின்ன ஆண் குழந்தையின் எதிர்காலமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மேலும் அவர் தானாக இந்த வேலைக்கு வரவில்லை. வர்த்தகப் போட்டியில் பேராதிக்கம் பெற்றுவிட வேண்டுமென்ற பேராசையில் அந்தக் கம்பெனியின் இந்தியக் கிளைதான் ஆராய்ச்சிக்காக இங்கு அவரை அனுப்பியிருக்கிறது. சிறிது காலம் முன்புதான் அவரது முக்கிய ஆராய்ச்சி முடிவுற்றது. இந்த இந்திய என்ஜினியரின் ஆராய்ச்சியின் பயனாய் அந்த அமெரிக்கக் கம்பெனி ஈட்டவிருக்கும் லாபம் பலநூறு மில்லியன் டாலர்களைத் தாண்டும். எனவே அந்தக் கம்பெனி இந்திய இளைஞருக்கு ஏற்பட்ட விபத்தின் விளைவுகளுக்கான பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் ஒரு மில்லியன் டாலர் நஷ்டஈடாக அளிக்க வேண்டும் என்று அமெரிக்க கோர்ட் தீர்ப்பளித்தது. நஷ்டஈட்டைப் பெற்றுக் கொண்ட இந்திய இளைஞரின் மனதில் ஒரு போராட்டம். இந்தப் பணத்தை அமெரிக் காவிலேயே வைத்து அனுபவிப்பதா? இந்தியாவுக்கு எடுத்துச் சென்றால் பல நல்ல காரியங்களைச் செய்யலாமே, எதற்கும் குடும்பத்தாரோடு கலந்து ஆலோசிக்கலாமே என்று நினைத்தார். எப்படி முடிவெடுத்தாலும் அமெரிக்காவில் கொஞ்சநாள் தங்கவேண்டியே இருக்கும். இந்தியாவுக்குத் திரும்புவதானாலும் அங்கு செய்ய வேண்டிய பல காரியங்களுக்கான ஏற்பாடுகளும் முதலீடுகளும் செய்ய இங்கு சிறிதுகாலம் தங்கத்தான் தேவைப்படும். எனவே சொந்தமாக ஒரு வீடு வாங்குவது உசிதமாகும் என எண்ணி நியுயார்க் அருகிலேயே ஒரு விசாலமான பங்களாவை வாங்கிக் குடும்பத்துடன் குடியேறினார் அந்த இந்திய இளைஞர். (8)

காட்சி ஐந்து

வெளிநாட்டுக்கு என்னதான் ஆசைப்பட்டு வந்துவிட்டாலும் இந்தியர்களுக்குத் தாய்நாட்டு நினைவுகள் அகலுவதேயில்லை. தத்தம் பிரதேச கலாசாரத்திற்காக ஏங்குகிறார்கள். தத்தம் மொழிக்காக மிகவும் ஒரு தமிழன் இன்னொரு தமிழனைப் பார்த்துவிட்டால் ஏதோ தன் ஊருக்கே வந்துவிட்டமாதிரியும் தன் உறவினர்களைக் கண்டமாதிரியும் மகிழ்கிறான். ஆணுக்கு ஆணே இப்படியிருக்க இந்தியாவிலிருந்து வந்த ஒரு தமிழ் இளைஞனும் இளைஞியும் சந்தித்து, பேசி, அவர்களிடையே பாசம் தோன்றி, காதலாகப் பரிணமித்தது என்றால் அதில் வியப்பென்ன?

படிப்பகம்

www.padippakam.com

அவர்களுடைய முதல் சந்திப்பு ஒரு கார் பிரேக்டவுன் போது நிகழ்ந்தது. நியூயார்க் செல்லும் பாதையில் ஒரு ஓரத்தில் அந்தக்கார் மக்கர் செய்து நின்றுவிட்டது. காரின் அருகில் நின்று கொண்டு ஒரு இந்தியப் பெண் விரைந்து செல்லும் வாகனங்களை நிறுத்தக் கையை ஆட்டி உதவிக்குக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். அமெரிக்கக் காரோட்டிகள் ஒருவரும் அவளைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அந்தப் பக்கமாகச் சற்று நேரத்தில் வந்த ஒரு இந்திய இளைஞன் தன் காரை நிறுத்தி தான் உதவக் கூடுமா என்று அந்தப் பெண்ணிடம் கேட்டு உதவவும் செய்தான். பரிச்சயம் தொடர்ந்தது. வீட்டுக்கு வெளியே சிடியில் கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்ந்த சந்திப்புகளில் அவள் தன்னை வெளிச்சப்படுத்திக் கொண்டாள். அவளுக்கு ஆஸ்பத்திரியில் வேலை. அவள் தன் வயதான தந்தையுடன் தனியே வசித்து வருகிறாள். சமையலுக்காக சமீபத்தில்தான் ஒரு வயதான மாமி அவளது வீட்டில் அமர்த்தப்பட்டிருக்கிறாள். "தான் அதிகாலையில் ஆபீஸ் புறப்பட்ட பின்னரே வந்து தான் வீடு திரும்புவதற்கு முன்பாகவே அந்த மாமி போய்விடுவாள். விடுமுறை தினங்களில் அவள் வருவதில்லை. தானே பார்த்துக் கொள்வாளாம். அதனால் அந்த மாமியை இவள் இதுவரை பார்த்தது கூட இல்லையாம். எல்லாப் பொறுப்பையும் அப்பாவே மேற்பார்த்துக் கொள்கிறார். அந்த மாமி எனக்கு என் மறைந்த தாய்மாதிரி படுகிறாள். விரைவில் அவளைச் சந்தித்து எங்களுடனேயே வந்து தங்கும்படி கேட்டுக் கொள்ளப் போகிறேன்'' என்றும் அவள் கூறினாள். தன் பங்குக்கு அந்த இளைஞனும் தன்னைக் கொஞ்சம் வெளிப்படுத்திக் கொண்டான். தான் ஒரு அமெரிக்க கம்பெனியில் வேலை செய்வதாகவும், தன் வயதான தாயுடன் வசித்து வருவதாகவும், வேலைப்பளுவின் காரணமாக பல நாட்கள் வீட்டிற்கே போக முடியாமல் ஆகிவிடுவதாகவும் கூறினான். இன்னொரு நாள் அவன் அவளிடம் தன் மனதைப் பறிகொடுத்திருப்பதைப் பற்றியும், வேறொரு நாள் தன் காதலைத் தன் தாயிடம் பிரஸ்தாபிக்கப் போவதாகவும் விரைவில் தன் தாயை அவளுக்கு அறிமுகப்படுத்தப் போவதாகவும் கூறி மகிழ்ந்தான். இருவரும் இணையக் காலமும் கனிந்து வந்துகொண்டிருந்தது. (6)

காட்சி ஆறு

''அம்மா, நீ கஷ்டப்பட்டதெல்லாம் முடிந்துவிட்டதம்மா! எனக்கு நல்ல வேலை கிடைத்துவிட்டது. இனிமேல் நீ கிராமத்தில் ஓட்டை வீட்டில் கிடந்து உழல வேண்டாம். உடனே புறப்பட்டு இங்கே வா. இங்கே ஒரு சின்ன போர்ஷன் பார்த்திருக்கிறேன். கொஞ்ச நாளைக்காக. உனக்கும் பாஸ்போர்ட் எடுக்கவேண்டும். இன்னும் மூன்று மாதங்களில் புதிய ஆராய்ச்சிக்காக என்னை அமெரிக்கா அனுப்பப் போகிறது என் கம்பெனி. வீடு கூட பார்த்துக் கொடுக்கிறார்கள். கார், வீடு, ஆபீஸ் எல்லாமே ஏ.சி. இன்னும் எல்லாவித வசதிகளும். நீ இல்லாமல் எனக்கு இவையெல்லாம் வேண்டுமா? ஆகவே நீயும் என் கூட வருகிறாய். உடனே கிளம்பு. தேவைக்குப் பணமும் அனுப்பியிருக்கிறேன்.'' தன் மகனிடமிருந்து வந்திருந்த அந்தக் கடிதத்தைப் படித்ததும் அந்தத் தாயின் கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருகி வழிந்தது. தான் பெற்ற மகனின் வெற்றித்தீயில் அவள் வடித்த தியாகக் கண்ணீர் தீய்ந்து ஆவியானது. ஆவி குளிர்ந்து வந்து மீண்டும் அவள் முகத்தில் இன்பமாய் வீசியது. அவள் உடனே கிளம்பத் தயாராகிவிட்டாள், பழைய துயரங்களை கிராமத்திலேயே விட்டுவிட்டு. (2)

காட்சி ஏழு

எத்தனை விஞ்ஞானிகளைத்தான் பார்த்து விட்டது அந்தக் கம்பெனி? எத்தனையோ நாட்டவர்கள், என்னென்னவோ பட்டதாரிகள்! அவர்களையெல்லாம் இந்த இந்திய இளைஞன் வென்றுவிடப் போகிறான். இந்தியாவிலிருந்து அவனை இங்கு அனுப்பும்போதே அந்தக் கம்பெனியின் கிளை பலமான சிபாரிசு செய்திருந்தது - அவனது திறமையைப் பற்றி, அவனது தனித்தே இயங்கும் தன்மை பற்றி, அவன் புதிதாக மேற்கொள்ளப் போகும் ஆராய்ச்சி பற்றி, அந்த ஆராய்ச்சியின் பயனாய் அந்தக் கம்பெனியும் உலகளாவிய அதன் கிளைகளும் ஈட்டப்போகின்ற அளவிடமுடியாத லாபத்தைப் பற்றி. எனவே முன்னதாகவே ஒரு பரிசோதனை நிலையம் அந்த இளைஞனின் திட்டப்படி கட்டி முடிக்கப் பட்டிருந்தது அமெரிக்காவில். தனி ஆராய்ச்சிக்கான எல்லா ஏற்பாடுகளும் தயார். கூடவே அவன் தன் தாயையும் அழைத்து வருவதால் புறநகர்ப் பகுதியில் ஒரு வீடும்கூட ஏற்பாடாகி இருந்தது. வந்து இறங்கியதுமே அவனுடைய ஆராய்ச்சி மும்முரமாகத் தொடங்கிவிட்டது. போகப் போக அவன் வீட்டிலிருக்கும் நேரம் குறைந்து கொண்டே வந்தது. அப்போதுதான் அவன் தாய் ஒருநாள் அவனிடம் கேட்டாள். "ஏண்டா, குழந்தே! நீயானா ஆபீசே கதின்னு கிடக்கே, எனக்கு போதே போகல.

படிப்பகம்

www.padippakam.com

எப்பவும் ஏதாவது செஞ்சிண்டே இருந்த ஒடம்பு. இப்படியே சோம்பலா உட்டா துருப்பிடிச்சுப் போய்டும். இதபாரு இந்த விளம்பரத்தை. இந்த ஊர்ல வயசான ஒரு தமிழருக்கு வீட்லே ஒத்தாசைக்கு ஒரு மாமி வேண்டுமாம். பகல்லே மட்டும்தான் வேலை, லீவு நாள்ல போகவேணாம். நான் நாளெல்லாம் சும்மாதானே இருக்கேன்? கடவுள் புண்ணியத்திலே நீ கைநிறைய சம்பாதிக்கிறே. நான் இதைப் பணத்துக்காகப் பண்ண வேணாம். நாலு பேருக்கு நாம்ப உபகாரமா இருக்கறதலேதான் திருப்தி. அதான் நீ சம்மதிப்பேன்னு நினைக்கிறேன். தினமும் அவரே வந்து கூப்பிட்டுண்டு போறாராம், கொண்டுவந்தும் விடறாராம்" அம்மாவின் பேச்சில் நியாயம் இருந்தது. மேலும் அவனுடைய வேலைத் தீவிரம் அவனை அதற்கு இணங்க வைத்தது. தன்னுடைய ஆராய்ச்சி முடிந்த பிறகு வேண்டுமானால் இந்த ஏற்பாட்டை நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைத்து அவன் தன் தாயிடம் சம்மதத்தைக் கூறினான்.

காட்சி எட்டு

அன்று ஞாயிற்றுக் கிழமை. பெரியவர் நாள்முழுதும் சந்தோஷமாகக் கழிக்கப் போவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வெளியேயிருந்து யாரும் வரப்போவதில்லை. மகளுடைய உதவியுடன் சீக்கிரமாகவே வேலைகளை முடித்துவிட்டால் அப்புறம் 'ஹாய்' தான். மகளுடன் சேர்ந்து அரட்டை, கும்மாளம், சிரிப்பு, சந்தோஷம் இப்படியாக. மகாராஜபுரத்தின் மண்ரிரங்கு அறை முழுவதையும் வியாபிக்க ஆரம்பிக்கும் சூழ்நிலையில் இன்று மகளின் கல்யாணத்தைப் பற்றி அவளிடம் பேச்சுத் தொடங்க வேண்டும். "மாமவ பட்டாபிராம.... கல்யாண...." திடீரென்று பெரியவர் தலை தொய்கிறது. "அப்பா, என்னப்பா ஆச்சு உங்களுக்கு? இந்தாருங்கள் தண்ணி. வாயைத்திறங்கள்!" நிசப்தமே மிஞ்சுகிறது. டாக்டர் பெண்ணின் மஸாஜ் முயற்சிகள் வீண். "அப்பா போய்விட்டார். அடக்கடவுளே தனிமையாக நான் என்ன செய்வேன். ஆம், கூப்பிடு என் நண்பனை, காதலனை" போன் செய்கிறாள். "சீக்கிரம் வாருங்கள். உங்கள் அம்மாவையும் அழைத்து வாருங்கள். எனக்கு ஒன்றும் ஓடவில்லை, கை, கால் உடம்பு பதறுகிறது பிளீஸ் உடனே வாருங்கள். என் அப்பா, ... என் அப்பா..." "தைரியமாக இரம்மா, இதோ கிளம்பிவிட்டேன்" போனின் மறுமுனையில் பதில். போனை வைத்தமகன் தன் தாயிடம் கூறுகிறான். "அம்மா, என் சினேகிதின்னு சொல்வேனே, அவளுடைய அப்பா திடீர்னு... நாம்பதாம்மா உதவி செய்யணும்" "இதோ கிளம்பிட்டேன்பா, நீ காரை எடு" என்கிறாள் தாய். கார் சினேகிதியின் வீடு வந்ததும் நிறுத்தப்படுகிறது. "ஐயோ, இவர் வீடா, இங்கதாண்டா நான் வேலைன்னு ஒத்தாசையாயிருக்கேன். நேற்று சனிக் கிழமைக்காக வெள்ளிக்கிழமையே உசிலி செஞ்சு ஃபிரிட்ஜ்லே வச்சிட்டு வந்தேனே? என்ன பாவம்டா இது? தன் பொண்ணு கல்யாணத்தைப் பத்திக் கூட எங்கிட்டப் பேசினாரே. இன்னிக்கு அவளிடமேகூட கேக்கப் போறதாகச் சொன்னாரே. அவரோட பெண்ணா உன் சினேகிதி, நீ பழகற பெண்? எங்கெங்கே எப்படியெல்லாம் முடிஞ்சி வைச்சிருக்கான் இந்த ஆண்டவன்!" பொருமிக் கொண்டே உள்ளே நுழைந்த அந்தத்தாய் அந்தப் பெண்ணைப் பார்த்து விம்மியபடி, "வாம்மா, மருமகளே, கவலைப்படாதே, தைரியமா இரு. தாய்க்குத்தாயாகவும் அப்பாவுக்கு அப்பாவாகவும் நான் பாத்துக்கறேன் உன்னை. கவலைப்படா தேம்மா" என்று ஆசுவாசப்படுத்தத் தொடங்கினாள். (7)

காட்சி ஒன்பது

"அவருக்கு ஏற்பட்ட விபத்திற்குப் பிறகு எனக்கு எல்லாமே வெறுத்துப் போச்சு. நஷ்ட ஈட்டில் வந்த பணத்திலே வாங்கிய பங்களாவை விற்றுவிட்டு இந்தியா திரும்பிவிடலாம் என்று அவர் சொன்னதும் எனக்காகவும் என் மகனுக்காகவும் உடனே ஒத்துக் கொண்டேன். இந்தியா வந்ததும் அவர் மீண்டும் பல ஆராய்ச்சிகளில் இறங்கிவிட்டார். பிள்ளையை மாமியார் பார்த்துக் கொள்வார் என்று எண்ணி என் படிப்பும் வீணாகப் போகாமலிருக்க ஒரு கிளினிக் ஆரம்பித்துவிட்டேன். நாளாக நாளாக கிளினிக்கில் நேரம் போதவில்லை. என் மாமியாரோ நான் கணவரையும் மகனையும் கவனிப்பதில்லையென்று ஆதங்கப்பட ஆரம்பித்து விட்டார். என் கணவருக்குத் தன் ஆராய்ச்சிகள்தான் லட்சியம். வாழ்க்கையே அதுதான். என்னைப் பற்றி அவர் தவறாக நினைப்பதில்லை. என் மாமியார்தான் தன் பிள்ளை மேலுள்ள பாசத்தால் ஏதேதோ தவறாகக் கற்பனை செய்து கொள்ளுகிறார். நான் இதையெல்லாம் அவர் முன்னாடியே போட்டு உடைக்கப் போகிறேன் இன்று. இந்த வீட்டில் ஒன்று மாமியார், இல்லை மருமகள்! ஐயோ இதோ ஒரு அவசரக்கேஸ்! வீட்டிற்குக் கிளம்பவே ரொம்ப லேட்டாகும் போல இருக்கிறதே! மாமியார் கதையை இன்னிக்கு முடிக்க முடியாது

படிப்பகம்

www.padippakam.com

போலிருக்கே" இப்படி சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது ஆஸ்பத்திரியில் பரபரப்புடன் காணப்பட்ட அந்தப் பெண் டாக்டருக்கு. (10A)

காட்சி பத்து

என் அப்பா உயிரோடு இருக்கும்போது அவருக்கு நேரிலும் எனக்கு மறைமுகமாகவும் ஆதரவா இருந்தீங்க. என் அப்பா போனதுக் கப்புறம் உங்க மகனையே கொடுத்து ஆதரவா இருக்கீங்க. உங்களுக்கு நான் எப்படி நன்றி செய்வேன் மாமி! - இப்படி யெல்லாம் கண்ணீர் தளும்ப சொல்லி விம்முவையே - இப்ப, எங்களைக் கண்டாலே ஏன் பிடிக்கல்ல ஒனக்கு? நான் உங்க வீட்டில சமையல்காரியா இருந்தவதான், இப்ப மாமியாரா வந்துட்டேன். நானாக வரிச்சிண்டதில்ல அது! என் மகன் செய்தது, அவன் எது செஞ்சாலும் எனக்கு அது சம்மதம். அவன் சந்தோஷம்தான் என் சந்தோஷம். மூஞ்சி யெல்லாம் வெந்துபோய் மூலையிலேயே குழம்பிண்டு ஏதோ குழம்பைக் காய்ச்சிண்டு இருக்கானே அவனுக்கு நீ கிளினிக்கு வெச்சு சம்பாதிக்கற பணமா வேணும்? பணம் கொட்டிக்கிடக்கறதடி, இன்னும் பத்து 'லேப்' கட்டலாம். பணமா வேணும் அவனுக்கு? ஆறுதலா கட்டின பெண்டாட்டி பக்கத்திலேயே இருந்துண்டு, கொஞ்சம் கண்குளிரப் பாத்துண்டு, பேசிண்டு, வேளாவேளைக்கு அவன் பசியாத்திண்டு இருக்க வேணாமோ? ஆனா அவன் மொகத்தையே பாக்கக் கூசிண்டு ஒன் ஆஸ்பத்திரிலேயே வாழ ஆரம்பிச்சுட்டே நீ! அங்க மட்டும் நீ பாக்கற மூஞ்சிகளெல்லாம் அழகு வடியறதோ? எல்லாமே வலியில் முனகும், பினாத்தும் கோரங்கள்! இப்பல்லாம் ஒன் பிள்ளையைக்கூடக் கவனிக்கத் தோன்றதில்ல ஒனக்கு. நீயெல்லாம் என்ன டாக்டர், என்ன அம்மா? இதோ நீ கிளம்பிட்டே, ஒங்கொழந்தை கிடந்து தவிக்கப் போறது! ஏ, குட்டிக் குழந்தே! சாப்பிடப்படுத்தாதேடா. அம்மா இல்லாவிட்டால் பரவாயில்லே. பாட்டி நான் பாத்துக்கறேன் வா. நீ நன்னா படிக்கணும். படிக் கறதுக்கான சக்தி கெடைக்க நன்னா சாப்பிடணும்! படிச்சு பெரிய வேலைல சேர்ந்து... பேரன் பெரிய வேலையில் சேர்ந்து யாரைக் காப்பாற்ற வேண்டும் என்று பாட்டிக்குத் தெரியவில்லை. காலம் சென்ற கோபாலனின் மனைவி குசலாம்பாளுக்குத் தெரியவில்லைதான். தன் பிள்ளை சுந்துவைக் காக்கக் கஷ்டப்பட்டது போல் இப்போது பேரனுக்கும் பட வேண்டுமோ? அப்போது ஒரு மாதிரி, இப்போது வேறு மாதிரியோ என்று நினைத்தாள் அந்தப் பாட்டி. (9)

அப்பாடா! காட்சிகளின் சுழற்சி ஒரு வழியாக முடிந்து ஓய்ந்தது. இனி இவற்றை எப்படிக் கோர்வைப் படுத்துவது என்று எண்ணியபடி பக்கத்துத் தெரு இன்ஸ்டிட்யூட் எடிட்டரிடம் சென்று காட்சிகளை விவரித்தேன். அந்தக் காட்சிகளைத் தொகுத்து ஒரு கதையாக்க முடியுமா என்றும் பார்க்கச் சொன்னேன். அவரும் கவனமாக எல்லாவற்றையும் கேட்டார். தன் மனதிலேயே காட்சிகளைத் திரும்பத் திரும்ப ஓடவிட்டுக் கொண்டார் போலும்! யோசித்து யோசித்து கத்திரிக்கோல், பசை, டேப் என்று மனதிலேயே பிரயோகங்களும் செய்து கொண்டார் போலும்! முதலில் நான் கூறிய காட்சிகளின் வரிசைக்கிரமத்தை மாற்றி அமைத்தார். (அவர்

பின்னே,
பூத்த புன்னை மரப்பூக்களுக்கும்,
முன்னே
விரிந்த வான நீலத்துக்குமாய்
ஆவேசமாய் ஆடுகிறது,
ஊஞ்சல். இரண்டையும் தொடமுடியாமல்
இடைவெளியில்
அது சுமந்த
குழந்தைகளின் கூச்சல்கள் மட்டும்
சிதறிய சிற்றிலைகளாய்,
இரைகிறது, பூங்காவெங்கும்.
தரையில்
பச்சைப் புல்லரும்புகள்
இங்குமங்கும் வளைந்து நெளிகின்றன,
காற்றின் மிரட்டலுக்கு
போக்குக் காட்டியவாறு.
நூறடி தள்ளி
மூங்கில் மரத்தடியில்
'ஹாய்யாக' குந்திய
பல வீட்டு ஆயாக்கள்,
தாடை வரை இலை வழிய
தலைகளை ஆட்டி ஆட்டி
காரமாக அரைக்கிறார்கள்
அவரவர் வீட்டு யஜமானிகளை

படிப்பகம்

www.padippakam.com

புதிதாக மாற்றி அமைத்த காட்சிகளின் வரிசைக்கிரம எண்கள் நான் கூறிய காட்சிகளின் இறுதியில் வட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன).

அவன், இளைஞன், இந்திய இளம் விஞ்ஞானி, மகன் என்று பொதுவாக வரும் இடங்களில் சுந்து அல்லது சுந்தரேசன் என்றும், அவள், இளைஞி, டாக்டர், பெண், மகள், மருமகள் என்று பொதுவில் வரும் இடங்களில் சுமதி என்றும் பின்னணியில் பெயர் பதித்தார். நான் கூறிய ஒன்பதாவது காட்சியை 10A என்று பிரிவினை செய்தார். அதே ஒன்பதாவது காட்சியில் என் மனம் விட்டிருந்த இடைவெளியை நிரப்பச் சொன்னார். அந்தக் காட்சியை 10B என்று எண்ணிட்டுப் பின்வருமாறு ஒட்டினார்.

காட்சி பத்து B

"அந்த அவசரக்கேசை வெற்றிகரமாகக் கவனித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வரும்போது மிகவும் நேரமாகிவிட்டிருந்தது. என் கணவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். எப்படி இந்த முகம்? ஏதாவது நாகஜோதி கிடைக்குமா அதைப்பழைய உருவுக்குமாற்ற? நினைத்துப் பார்க்க எவ்வளவு இன்பமாக இருக்கிறது! தூக்கத்தில் என் கணவர் முகத்தில் புன்னகை அரும்புகிறது. அவருக்கு மேலும் ஒரு ஆராய்ச்சி வெற்றி போலும்! இந்த ஞாயிறன்று நாங்கள் எல்லோருமே கூனூரில்! பொழுது புலர கோழி கூவுகிறது! குளிர்ந்த காட்சிகள் கனவுகளாகக் கண்களை நிறைக்கின்றன!" - சுமதியின் கனவு நனவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று அவள் உள்மனம் கூற அவளது முகம் மலருகிறது.

இன்ஸ்டிட்யூட் எடிட்டரின் முகமும் கூடவே மலருகிறது. "இப்போது உங்களுடைய காட்சிகள் தொடர்பு பெற்று முழுமையான சித்திரமாகி விட்டன பாருங்கள் சார்!" என்று கூறுகிறார் எடிட்டர். ஆம், காட்சிகளைத் திருத்தி அமைத்ததில் ஒரு கதை வந்து இருந்தது.

"எனக்கு ஒரு சந்தேகம் சார்! நான் கூறிய ஒன்பதாவது காட்சியை 10 A என்று மாற்றி 10 B என்று புதிதாக ஒரு காட்சியை இணைத்து முடித்திருக்கிறீர்களே அது ஏன் சார்" என்று நான் இன்ஸ்டிட்யூட் எடிட்டரைக் கேட்டேன்.

"அது அப்படித்தான் சார்! A சென்டர் ரசிகர்களும் B சென்டர் ரசிகர்களும் வெவ்வேறு ரசனை உள்ளவர்கள். அதனால் இரண்டுவிதமான முடிவுகள் இருக்க வேண்டும். உங்களுடைய பத்தாவது காட்சியில் குசலாம்பாளுக்குத் திரும்பவும் கஷ்டங்கள் தொடருமா என்ற சஸ்பென்ஸ் முடிவு A சென்டரில் எடுபடலாம். ஆனால் B சென்டருக்கு சுபமான முடிவுகள்தான் வேண்டும். அதேமாதிரி புதிய காட்சி எண் 10 A ல் வரும் மாமியாரை எதிர்க்கப்புகும் மருமகளின் தீரமும் அது கை கூடுமா என்ற சஸ்பென்ஸும் B சென்டர்களில் எடுபடும் ஆனால் A சென்டர்களில் எடுபடாது. அதனால்தான் இந்த மாற்றங்கள்" என்றார் இன்ஸ்டிட்யூட் எடிட்டர்.

அவருடைய வியாபார சாமர்த்தியம் என்னை வியக்க வைத்தது. எப்படியோ தொடர்பின்றிக் கிடந்த காட்சிகளைத் தொகுத்து ஒரு கதையாக்கிக் கொடுத்துவிட்டாரே என்று எனக்குச் சந்தோஷமாக இருந்தது. அவருக்கு நன்றி கூறிவிட்டு மனத்திரையில் புதுத் தொகுப்பாய்க் காட்சிகளை ஓடவிட்டுக் கொண்டு வீடு திரும்பினேன்.

இப்போதுகூட மனதை அடக்குவது மிகவும் கடினமான காரியமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இன்ஸ்டிட்யூட்காரர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் அதை அடக்க முடியாததைப் பற்றி நான் இப்போது கவலைப்படுவதில்லை.

இன்னும் கூட்டிப் போடாத
சம்பள பாக்கிக்கு ஈடாக
ஏச்சையும் எச்சிலையும்
கூட்டி விசிறுகிறார்கள்,
விஸ்தாரமாக
ஆடி முடிந்த ஊஞ்சல்
அந்தி முனையில் வீர்யம் கெட்டு,
தொங்கி நிற்கும் மங்கிய வேளையில்
மரத்தடி வாய்களின்
சளசளப்பு நிற்கிறது.
ஆயாக்கள் உன்னிப்பாகி
அப்படியே நிற்கிறார்கள்.
அவரவர்
கூட்டி வந்த குழந்தைகளின்
ஆங்கில அதட்டலைக் கேட்டவாறு,
சுமை தாங்கி நடக்க.

- எஸ். வைதீஸ்வரன்

படிப்பகம்

www.padippakam.com

பண்டைய இந்துக்களின் நகர அமைப்பும், கட்டட கலையும்

- வ.ந. கிரிதரன்

வேதகாலத்திலேயே இந்துக்களின் கட்டடக்கலைத் துறை, நகர அமைப்புக்கலை என்பன வளர்ச்சியுற்றிருந்தன என்பதை பண்டைய இந்துக்களின் கட்டடக்கலை நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. கட்டடக்கலை பற்றிய அறிவியற்துறை வாஸ்துவித்யா (Vastu-Vidya) என அழைக்கப்பட்டது. இதனை விளக்கும் நூல்கள் வாஸ்து சாஸ்த்திர நூல்களென அழைக்கப்பட்டன. ஆகம, புராண நூல்கள் பலவற்றில் ஆலய அமைப்பு பற்றிய விதிகளைக் காணமுடிகின்றது. மத்திய காலகட்டத்தில் மானசர (manasara), சிற்பப்பிரகாச (shilpa-prakasha) போன்ற நூல்கள் தோன்றின. தமிழிலும் சிந்தாமணி, சிற்பரத்தினம் போன்ற நூல்கள் கட்டடக் கலை பற்றிக் கூறுவன தமிழ் நூல்களைப் பொறுத்தவரை இவை சமஸ்கிருத நூல்களின் தமிழ் வடிவங்களாகவே கருதப்படுகின்றன. வட இந்தியக் கட்டடக்கலை நூல்களின் மூல ஆசிரியராக விசுவகர்மாவையும், தென்னிந்திய நூல்களின் மூல ஆசிரியராக மயனையும் குறிப்பிடுவர். மத்தியகாலம் வரையில் இத்துறை பற்றிய தகவல்கள் யாவும் வாய்வழி மூலமாகவே தந்தையிடமிருந்து மகனிற்கு என்ற முறையில் பேணப்பட்டு வந்தன. மத்திய காலகட்டத்திலேயே முதன்முறையாக இத்துறை பற்றிய தகவல்கள் யாவும் பனையோலைச் சுவடிகளில் எழுத்து மூலமாகப் பதிப்பிக்கப்படத் தொடங்கின. 1920 ம் ஆண்டில் Stella kramisch என்பவர் இச்சுவடிகள் பலவற்றை ஆராய்ந்திருக்கின்றார்.

இந்துக்களின் நகர அமைப்புக் கலையைப் பல காரணிகள் நிர்ணயித்தன. புவியமைப்பு, சாதிக்கட்டுப்பாடுகள் போன்ற சமுதாய அமைப்பு, சமய தத்துவங்கள் போன்றன. அவற்றில் முக்கியமானவை.

நில அமைப்பு :

மண்ணின் அமைப்பு முறைக்கேற்ப நிலத்தை மூன்றாகப் பிரித்தார்கள்.

1. யங்களா (Jangala) : நீர், நதி வளமற்ற வரண்ட நிலம்.
2. 'அநுபா' (Anopa) : நீர்வளம் மிகுந்த, குளிர்ந்த சுவாத்தியம் மிக்க, வளம்மலிந்த நிலம்.
3. 'சாதனா' (Sadhana) : 'யங்களாவிற்கும்' 'அநுபா'விற்குமிடைப்பட்ட சாதாரண வகையான நிலம்.

நில அமைப்பின் சாய்வும் கவனத்தில் கொள்ளப்பட்டது. வடக்கு அல்லது கிழக்கை நோக்கிய சாய்வைக் கொண்ட மண்ணின் மீதே நகரம் அமைக்கப்பட வேண்டும். தெற்கு நோக்கிய சாய்வு மரணத்தையும், தென்மேற்கு நோக்கிய சாய்வு துன்பத்தையும், மேற்கு நோக்கிய சாய்வு வறுமையையும், வடமேற்கு நோக்கிய சாய்வு

படிப்பகம்

www.padippakam.com

போரையும் கொண்டுவருமென இந்துக்கள் கருதினார்கள்.

மண்ணும் சாதிக்கட்டுப்பாடுகளும் :

மண்ணின் நிறம், மணம், அது எழுப்பும் ஒலி, சுவை என்பனவெல்லாம் இந்துக்களின் நகர அமைப்புக் கலையைப் பாதித்தன. மண்ணின் நிறம் அம்மண்ணில் குடியமர்த்தப் படக்கூடிய மக்களை இனங்காட்டியது. வெள்ளை நிறமண் பிராமணர்களுக்கும், சிவப்பு சத்தியர்களுக்கும், மஞ்சள் வைசியர்களுக்கும், கறுப்பு நிறமண் சூத்திரர்களுக்கும் உரியனவாகக் கொள்ளப்பட்டன. மண்ணின் சுவைக்கும் சாதியமைப்பிற்குமிடையில் கூடத் தொடர்பிருந்ததை அறிய முடிகின்றது. இனிமையான மண் பிராமணர்களுக்கும், காரமண் வைசியர்களுக்கும், கசப்பான மண் சூத்திரர்களுக்கும் உரியதாகக் கொள்ளப்பட்டன. தட்டும் பொழுது நரிகள் ஊளையிடுவதைப் போலவோ, நாய்கள் குரைப்பதைப் போலவோ, கழுதைகள் கத்துவதைப் போலவோ ஒலி எழுப்பும் மண்ணைத் தவிர்க்க வேண்டும் எனவும் அறியக் கிடக்கின்றது.

இந்துக்களின் படைப்புத் தத்துவமும் கட்டடக்கலையும் :

இந்துக்களின் உபநிடதங்கள் கூறும் தத்துவங்களில் 'பிரம்மம்' பற்றி விவரிக்கப் பட்டுள்ளது. உருவமற்ற 'ஆதி அந்தமற்ற', எங்கும் பரந்து, நீக்கமற நிறைந்திருக்கும் இப் பிரம்மத்தின் உருவ வடிவங்கள்தான் சிவன், விஷ்ணு, பிரம்மன் போன்ற தெய்வங்கள். இவ்வித உருவமற்ற மூலவடிவத்திலிருந்து உருவானவன்தான் 'வாஸ்து' புருஷன் அல்லது வாஸ்துதேவன் என்பவன். இவனை மையமாக வைத்தே இந்துக்களின் கட்டடக்கலைத் துறை வளர்ச்சியுற்று வந்திருக் கின்றது. இவ்வித உருவ வடிவான வாஸ்து புருஷனை வாஸ்து புருஷ மண்டலமென மேற்படி கட்டடக்கலை நூல்கள் கூறுகின்றன. இப்பிரபஞ்சத்தை இயக்கும் விதிகளின் உருவ வடிவமே இந்த வாஸ்து புருஷ மண்டலமாகும். ஆரம்பத்தில் எப்படி உருவற்ற பிரம்மத்திலிருந்து வாஸ்து புருஷன் படைக்கப்பட்டானோ அவ்விதமே கட்டடக் கலைஞர்களும் உருவமற்ற புறச்சூழலை உருவவடிவான கட்டடங்களாக வடிவமைக்கும் போது, அக்கட்டடங்கள் மேற்படி வாஸ்து தேவனைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே அமைத்தார்கள். பிரபஞ்சத்திற்கும் மனிதனுக் குமிடையில் நிலவிடும் தொடர்பை கட்டடங்கள் அமைப்பதிலும் இந்துக்கள் பேணினார்கள்.

வட்டமும், சதுரமும், வாஸ்து புருஷ மண்டலமும் :

இந்துக்களின் கட்டடங்களையும், பௌத்தர் களின் கட்டடங்களையும் நோக்குபவர்கள் ஒன்றை இலகுவாக அறிந்து கொள்வார்கள். பௌத்தர்களின் தாது கோபங்கள் வட்டவடிவில் அமைக்கப்பட்டன. இந்துக்களின் கட்டடங்களோ நகரங்களோ சதுர அல்லது செவ்வக வடிவங்களிலேயே அமைக்கப்பட்டன. அநுராதபுரம் பௌத்தர்களின் முக்கியமான நகரம். பண்டைய அநுராதபுர நகர அமைப்பில், அவற்றில் விளங்கிய கட்டட அமைப்பில் வட்டவடிவம் எவ்வளவு தூரம் பாதித்துள்ளதென்பதை அறிய முடிகின்றது. ரோலன் டி சில்வா என்ற சிங்கள பேராசிரியரின் ஆய்வு சந்தையை மையமாக வைத்து உருவான பண்டைய அநுராதபுர நகர அமைப்பில், இருவேறு வட்ட ஒழுக்குகளில் வட்டவடிவமான தாதுகோபங்கள் அமைந்திருந் ததைப் புலப்படுத்தும். வட்டவடிவம் இயக்கத்தைப் புலப்படுத்தும்; தோற்றமும், அழிவும், இரவும், பகலும் இவ்விதமாக ஒருவித வட்ட ஒழுக்கில் நகரும் காலத்தை மேற்படி வட்டவடிவம் குறிக்கும்; மேலும் இவ்வட்ட வடிவம் நாம் வாழும் பூமிக்குரிய இயல்பையும் குறிக்கும்.

மாறாகச் சதுரவடிவம் ஒரு இறுதியான, தெளிவான வடிவம். இந்துக்கள் இப்பிரபஞ்சத்தை வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு போன்ற திசைகளால் உருவான சதுரவடிவான வெளியாக உருவகித்தார்கள். அவ்வெளியில் நேரத்தின் பாதிப்பை இராசிகளால் விளக்கினார்கள். நவீன பௌதிகம் கூறுவதைப் போல் இந்துக்களும் இப்பிரபஞ்சத்தை ஒருவித வெளி (Space) நேர (Time) அமைப்பாகத்தான் விளக்கி வைத்திருந் தார்களென்பதை இதன்மூலம் அறியமுடிகின்றது. இவ்விதம் இப்பிரபஞ்சத்தைச் சதுரவடிவாக உருவகித்த இந்துக்கள் தாமமைத்த நகரங்களையும், கட்டடங்களையும் பெரும்பாலும் சதுர (அல்லது) செவ்வக் வடிவங்களிலேயே அமைத்தார்கள்.

இவ்விதம் சதுரவடிவில் அமைக்கப்பட்ட வாஸ்து புருஷ மண்டலத்திற்கேற்பவே நகரங்கள், கட்டடங்கள் என்பன அமைக்கப்பட்டன. மேற்படி சதுர வடிவை பல்வேறு சிறு சிறு சதுரங்களாகப் பிரித்தார்கள். இத்தகைய சிறு சதுரங்கள் 'படா' (Padas) க்களென அழைக்கப்பட்டன. பல்வேறு தெய்வங்களுக்கு அவரவர் முக்கியத்திற்கேற்ப மேற்படி சதுரங்களை ஒதுக்கினார்கள். இவ்விதமாக வாஸ்து புருஷமண்டலத்தை 32 வகைகளில் சதுரங்களாக உருவாக்க முடியும். ஒரு சதுர வடிவான வாஸ்து புருஷ மண்டலத்திலிருந்து.. 4,9,16,25,36,49,64,81... 1024 சிறு சிறு சதுரங்களை

படிப்பகம்

www.padippakam.com

உள்ளடக்கிய 32 வகையான சதுர வடிவங்களில் மேற்படி வாஸ்து புருஷ மண்டலம் உருவாக்கப்படலாம்.

வட இந்தியக் கட்டடக்கலை நூல்கள் கூறும் வாஸ்து புருஷ மண்டலத்திற்கும், தென்னிந்தியக் கட்டடக்கலை நூல்கள் கூறும் வாஸ்து புருஷ மண்டலத்திற்குமிடையில் தத்துவார்த்த ரீதியில் சிறு வித்தியாசம் காணப்படுகின்றது. வட இந்திய வாஸ்து புருஷ மண்டலம் படைப்பைப் பற்றிக் கூறினால், தென்னிந்திய வாஸ்து புருஷமண்டலமோ படைக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தில் காணப்படும் ஒழுங்கைப் பற்றிக் கூறும். தென்னிந்திய ஆலய நகரங்களின் அமைப்பில் குறிப்பாக மதுரை, ஸ்ரீரங்கம் போன்ற ஆலய நகரங்களின் அமைப்பை நோக்கினால் இதனை இலகுவாக அறிந்து கொள்ளலாம். பல்வேறு செவ்வக அல்லது சதுரவடிவான மதில்களுடன் கூடியதொரு அமைப்பாக இவ்வாலய நகரங்கள் விளங்குகின்றன. இலங்கைத் தமிழ் மன்னர்களான, ஆரியச் சக்கரவர்த்திகளின், ராஜதானியாக விளங்கிய நல்லூர் ராஜதானியின் நகர அமைப்பிலும் மேற்படி ஒழுங்கு காணப்பட்டதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

பெரும்பாலும் நகரங்கள் சதுரவடிவில் (இயலாத பட்சத்தில் செவ்வகவடிவில்) அமைக்கப்பட்டன. நகர வடிவங்களிலும் சாதியின் பாதிப்பைச் சில சுவடிகள் கூறும். 'பூரணமான சதுர வடிவ நகரங்கள் பிராமணர்களுக்கு மட்டுமே உரியன; ஏனைய சாதியினரைப் பொறுத்த வரையில் செவ்வக வடிவான நகரங்களிலேயே வாழ வேண்டுமென்பதை' அறிய முடிவதாக Andleas Volwahsen என்பவர் `living architecture : Indian' என்ற நூலில் கூறுவார். சூத்திரர்கள் மட்டுமே வாழ அனுமதிக்கப்பட்ட நகரங்களும் விளங்கின. இவை பூரணத்துவமற்ற வடிவங்களில் அமைக்கப்பட்டன. சிறிய நகரங்கள் இரு பிரதான வாயில்களுடன் அமைக்கப்பட்டன. வேறு சில நகரங்களோ நடுவில் ஆலயத்தைக் கொண்டு, நான்கு திசைகளில் நான்கு வாயில்களைக் கொண்ட மதிலுடன் விளங்கின. இந்நான்கு வாயில்களையும் இரு பிரதான ராஜபாட்டைகள் இணைத்தன. இப்பாதைகள் சந்திக்குமிடத்தில் சந்தை அமையப்பெற்றிருந்தது. நல்லூர் ராஜதானி பற்றிய ஆய்வு மேற்படியான, நடுவில் பிராதான முருகன் ஆலயத்தையும், நான்கு திசைகளிலும் நான்கு பிரதான வாயில்களையும், நான்கு வாயில்களை இணைக்கும் இருபிரதான வீதிகள் சந்திக்குமிடத்தில் 'முத்திரைச் சந்தை'யையும், மேலும் நான்கு வாயில்களுக்கும் பாதுகாப்பாக நான்கு ஆலயங்களையும் கொண்டு விளங்கியதொரு அமைப்பாகவிருந்ததைப் புலப்படுத்தும்.

இவையெல்லாம் இந்துக்களின் நகரஅமைப்பு கட்டட அமைப்புத் துறைகளில் புவியியலமைப்பு சமுதாய அமைப்பு மற்றும் சமயம் போன்றவை முக்கிய காரணிகளாக விளங்கியதைப் புலப்படுத்துவதைக் காட்டி நிற்கின்றன.

உசாத்துணை நூல்கள், கட்டுரைகள் :

1) `The Arts and Crafts of India and Ceylon' - Ananda Coomarasamy

2) `Living Architecture : Indian' - Andeas Volwahsen

3) Monumental Art and Architecture of India - K. Sundaram

4) Urban Geography - Prof. Jeyasingam

5) Urban and Regional Planning - Rame Gowda.

6) Anuradhapura Town Planning (Essay) - Rowland De Silva

7) நல்லூர் ராஜதானி : நகர அமைப்பு (கட்டுரைத் தொடர், கட்டுரைகள்) - வ.ந. கிரிதரன்

8) யாழ்ப்பாணத்துப் பெரிய கோயில் (கட்டுரை) - க.;குணராசா

வெளிவந்துவிட்டது

நீல பத்மநாபனின் புதிய நாவல்

கூண்டினுள் பட்சிகள்

"நீல பத்மநாபனின் இந்நாவல் தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறந்த நாவல்" - நகுலன் முன்னுரையில்

விலை ரூபாய் : 32/-

விவரங்களுக்கு :

வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.

படிப்பகம்

www.padippakam.com

ஜெகப்ரியன் கவிதைகள்

சிரத்தையாய்
அலைபோல சுருண்டு
மறுபடி மறுபடி
உன் மடிதேடி வந்த வண்ணமிருந்தும்
உன்னை அறிய முடியவில்லை
நல் புணர்ச்சியின் போதும்
காரணம் புரியாமல் கண்ணீர் வருவதை
தவிர்க்க இயலவில்லை
வெறி திமிரும் உள் அலறல் மெலிந்து பணிந்து
உன் முன்
சன்னக்குரலில் அழுவதும் காதுகளில்
விழவில்லை
உனக்குள்ளே
நான் யார் என்றும்
புரியவில்லை
துரத்தித் துரத்தி மூச்சிறைக்கும்
நிர்மல வாத்சல்யம்
பளிங்கு மனசில்
சஞ்சல பயங்கள்
கவிந்து மிரளும்
ஆனால் சலனங்களில்லாத
சாதுர்ய பதில்கள் உண்டு
உன்னிடம்
என்னைக் கரைத்து நீயானேன்
உன்னை நானாக்க மொழிகள் தோற்றபின்பு
என்ன செய்வேன்
அன்பைப் போல் மனசையும் சேர்த்து
மெல்லக் கொல்லும் விஷமுண்டா உலகில்?

சூரியன் சுட்டெரிக்கும் என்பதற்காக
நீர் எங்கே போய் ஒளிய முடியும்
நீ தரும்
மனப் பதட்டங்களையும்
தண்டனைகளையும்
விரும்பி ஏற்றபடியேதான்
உன்னைத் தொடர்கிறேன்
எதற்கும் உசிதமென்ற அன்பின் சிரசை
பாறையில் மோதிப் பார்க்கிறாய்
விஷம் நிறைந்த காட்சிகளை
கண்முன்னே நிகழ்த்துகிறாய்
திராவக வார்த்தைகளை
அள்ளித் தெளிக்கிறாய்
கரையின் நிராகரிப்புகளுக்கா
அலை சோர்ந்துவிடும்
இன்னமும்
நீ
என் அமுதம்
ஜீவிதம்
வாழ்வு
சாவும்.

படிப்பகம்

www.padippakam.com

வட்ட வட்ட சிற்றலைகள்
நிறைந்து ததும்பும்
குளத்து நீர் சுருங்கிவிட்டது
சூரியன் சுடும் நடுப்பகலில்
காகங்கள் வட்டமடிக்க
சில மீன்கொத்திகளும்.
சொற்பத் தண்ணீரில்
சிறார்கள் இறங்கி
தண்ணீரைச் சளக் சளக் கென
காலால் எத்தித் துள்ளிக் குதிக்கும்
மீன்குஞ்சுகளைப் பொறுக்கிப்
பாட்டிலில் போட்டுக் கொள்கிறார்கள்.
எத்திய தண்ணீர் முகத்தில் தெளிக்க
அட நீங்க கட்டையில போவ என்கிறாள்
கவுச்சித் துணி அலசும் ஒருத்தி.
கூடவே
வேடிக்கை பார்க்கும் சிறுவர்களோடு
முன்னும் பின்னும்
ஓட்டமும் நடையுமாய்
ஒரு நாய்.
யாரோ அடித்த கிரிக்கெட் பந்து
தண்ணீரில் வந்துவிழ
பாய்ந்து எடுத்து
கிழிந்த டிராயரில் துடைத்துக்கொண்டே
ஓடுகிறான் ஒருவன்.
துவைகல்லில் முழங்கால் தெரிய
துணி மடக்கி
மீனுராயும் வாலைக்குமரியைப்
பார்த்தபடி
மீசைப்பூனைகள் இரண்டு.
வாளியில் நிறைந்த
துணிகளைச் சுமந்த பெண்கள்
ஊற்றுத் தண்ணீர் நோக்கிக் கடக்கிறார்கள்
சிப்பிகள்
குப்பைகள்
கொஞ்சம் காய்ந்த கோரைகள்
மாடுகள் மட்டும்
நின்றும் படுத்தும்
அசைபோட்டுக் கரைநிழலில்.
வேர்களின் தெம்பில்
காற்றோடு சல்லாபிக்கும்
சுற்றியிருக்கும் மரங்களுக்கென்ன
எல்லாம் ஒன்றுதான்
தண்ணீர் இருந்தாலும்
இல்லாவிட்டாலும்

மசகு எண்ணை இன்றி
அடிக்கு அடி
இழுத்து அழுகிறது
கைபம்பு
அதன் முனகலை கேட்க நேரமில்லை
அவள் குளிக்கணும்
நான் குளிக்கணும்
பிள்ளைகளைக் கிளப்பணும்
ஆசுவாசமாய் வரும் அம்மாவுக்கு
அடித்து ரொப்பி வைக்கணும்
அதிகாரிக்கு பதில் சொல்ல
எழுதி வைச்ச
கோப்பைப் பாக்கணும்
கேஸ் பதியணும்
எல் ஐ சி கட்டணும்
உறுத்தல்களை சரி செய்ய
ஏதெனக்கு நேரம்
வேறு யாருக்கும் கேட்காத சத்தமெல்லாம்
எனக்குக் கேட்டுத் தொலைக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

வரம்

பிச்சுமணி கைவல்யம்

வழியில்தான் சந்திராக்காவின் வீடு இருந்தது. இப்போது அங்கே ஒரு சின்ன விஸிட் செய்தால் என்ன? பொன்ராஜ் தன்னிடம் தோன்றிய யோசனையை மணியிடம் வெளியிடவும் மணிக்கும் அது பிடித்திருந்தது. தெரு கதவைத் திறந்து அவர்கள் உள்ளே வரும்போதே சந்திராக்கா பார்த்துவிட்டாள் "வாங்கடா பொடியன்களா" என்று வரவேற்றாள். தார்சாவைத் தாண்டி உள்அறையில் கிழக்குப் பக்கமாய் ஜன்னலை ஒட்டிப் போடப்பட்டிருந்த மேஜை முன்னிருந்த நாற்காலியில் சந்திராக்கா. அதற்குப் பக்கவாட்டில் சுவரைஒட்டி ஒரு பெஞ்சு இருந்தது. அதிலே பொன்ராஜும் மணியும் ஒன்றும்பேசத் தோன்றாது கல்லுளிமங்கனாட்டம் உட்கார்ந்திருந்தார்கள் சற்றுநேரம்.

"என்னடா விஷயம், அக்கா என்னமும் சொல்லிவிட்டாங்களா?"

சந்திராக்காவும், பொன்ராஜின் சகோதரியான பார்வதியும் ஒரே பள்ளியில் வேலைபார்க்கும் ஆசிரியைகள். ஆத்ம சிநேகிதிகளும்கூட. அவர்களது சொகுசான ஸ்நேகப் பரிவர்த்தனைக் கருவியாக விளங்கினார்கள், பொன்ராஜும் மணியும். பார்வதி தன் தம்பியான பொன்ராஜின் மீதும், அவனது இணைபிரியாத் தோழனான மணிமீதும் மிகுந்த அதிகாரம் கொண்டிருந்தாள். அந்த அதிகாரத்தை மறைக்கவே மிகுந்த பிரியம்காட்டினாளா அல்லது அந்தப் பிரியத்தின் அடிப்படையில்தான் அந்த அதிகாரத்தைத் தனக்காகவும், அவர்களுக்காகவும் கூட (குறித்த நேரத்தில் ஒழுங்காக உட்கார்ந்து பாடங்களைப் படித்தாக வேண்டும் அவர்கள்) எடுத்துக் கொண்டாளா என்பது ஒரு புதிர். அவர்களும் அவள்மீது குருபக்தியும், ஏவின வேலைகளைச் செய்வதில் ஆனந்தமுடையவர்களாயும் இருந்தனர். பார்வதியக்கா முற்பிறவிகள் ஒன்றில் ஒரு ராணியாக இருந்திருக்கக் கூடும்.

பிரஜைகளானாலும் அடிமைகளானாலும் அவர்களுக்கென்றும் சொந்த அபிலாஷைகளும் சுதந்திர எண்ணங்களும் இருக்கத்தானே செய்யும். மணிதான் சந்திராக்காவின் கேள்விக்குப் பதிலளித்தான் : ''ஒன்றுமில்லை, நாங்கள் லைப்ரரிக்குப் போய்த் திரும்பிக் கொண்டிருந்தோமா, வழியில்தானே உங்கள் வீடு, சும்மா பார்த்துவிட்டுப் போனாலென்ன என்று வந்தோம்".

பேச்சுக்குரல் கேட்டு பாட்டியம்மா - சந்திராவின் அம்மா - வந்தார்கள். வயசாகிவிட்டது. கண் பற்றவில்லை. "யாரு, பொன்ராசுவா? வாப்பா, வா" என்ற குரலில்தான் என்ன பிரியம்! என்ன சந்தோஷம்!" யம்மா, பையன்களுக்கு ஏதாவது கொண்டாம்மா'' என்றாள் சந்திராவும். அந்த அறைதான் சந்திராக்காவின் படிப்பறை போலும். அதில் ஒரு தூய்மை குடிகொண்டிருப்பதாகப்பட்டது. ஒவ்வொரு பொருளுக்கும் அந்த அறையில் உரிய கௌரவம் கொடுக்கப்பட்டிருந்ததாகப் பட்டதே காரணமாக இருக்கலாம். சுயகௌரவம் பெற்ற அந்தப் பொருள்கள் ஒவ்வொன்றுமே - அந்த மேஜை அதன் மீதுள்ள ரேடியோ, பூக்குவளை, ஜன்னல் திரைகளை ஒட்டி ஜன்னல் விளிம்பில் அமர்ந்திருந்த ஒரு ஆங்கில டிக்ஸனரி, மற்றும் ஒரு மைப்புட்டி, நிலைக்கண்ணாடிக்கருகேயுள்ள சீப்பு, பவுடர் டின், குங்குமச் சிமிழ் எல்லாம் - தங்கள் அடுத்த வேலையான தியானத்தில் கவலையற்று ஆழ்ந்திருந்தன. பாட்டியம்மா காபியும் பிஸ்கெட்டுகளும் கொண்டு வந்து தந்ததைப் பருகிக் கொண்டிருந்தார்கள் இருவரும். ஒரு விநோத

படிப்பகம்

www.padippakam.com

பகிற்குள் முதன்முதலாக நுழைந்தது பாலிருந்தது அவர்களுக்கு. அந்த விருந்து பசாரம்தான் முதன்முதலாக அவர்கள் வாழ்வில் வர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டதன் நிகுறியாக விளங்கியது. அரைடிராயரில் ட்கார்ந்த கோலத்தில் துடைகள் சற்றுப் பரியதாகத் தெரிவதுபோல் அவர்களுக்குக் ச்சமாக இருந்தது. ஒரு வேஷ்டி அல்லது பாண்ட் ந்த வேண்டுமென்று தெரிவித்தால் அப்பாவும் ம்மாவும் அதற்கு இன்னும் காலம் வராததுபோல் பசுகிறார்கள். கூட கொஞ்சம் காசு செல்வாகுமே. து ஒரு காரணம். அதுதான் காரணம்.

"அதென்ன புத்தகம்? இங்கே கொடு பார்க்கலாம்"

பொன்ராஜ் கொடுத்தான். மணி சும்மா உட்கார்ந்திருக்க வேண்டியிருந்தது. சந்திராக்கா புத்தகத்தைப் புரட்டினாள். அது ஒரு வாராந்தரியின் தொடர்கதையின் பைண்ட் வால்யூம். கண்ணீர்வழியத் தலையணையில் புதைந்திருந்த ஒரு பெண்ணின் முகம். ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கும் நிலவும், காற்றை அனுப்பும் தென்னங்கீற்றும். "கண்கள்



படிப்பகம்

www.padippakam.com

ரவோ" என்ற தலைப்பு எழுத்துக்கள். படம் துக் கொண்டே வந்த சந்திராவுக்கு யெல்லாம் புரிந்துவிட்டதோ? ஓர் இளம் வ. அவளுக்கு வாழ்வுகொடுக்க, தன் பத்தை எதிர்த்து, பழக்கவழக்கங்களை து, ஜாதியை எதிர்த்து, சம்பிரதாயங்களை து இந்த சமூகத்தையே எதிர்த்துப் போராடத் ம் இளைஞன், ஆண்மகன்...

நீ பெரிய படிப்பாளியாயிருப்பே ிருக்கே'' என்றாள் சந்திரா. ராஜுக்குப் பெருமையாயிருந்தது. "நீங்கள் ங்கள் படிக்கிறதுண்டா? எந்த மாதிரிப் ங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?" என்றான். மனிதனாகவல்லவோ ஆகியிருந்தான் அந்த நிமிஷம்.

மணிக்கு அவர்கள் பேச்சில் கலந்துகொள்ள வில்லை. தானும் இனி பொன்ராஜுவைப் படிக்கவேண்டுமென்று அப்போது ுக்குள் ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று.

'எனக்கு மர்மநாவல்கள், துப்பறியும் ்கள்தான் பிடிக்கும். பெரும்பாலும் களைத்தான் படிப்பேன்".

'அய்யய்ய'' என்பதுபோல் பார்த்தான் ராஜ். "காலத்தை வீணடிக்கும் புத்தகங்கள்" ான் ஓர் ஆங்கிலச் சொற்றொடர் வழக்கில். அப்படிப் பார்த்ததற்கும் பேசியதற்கும் ப்படுவதுபேல் விளக்கமளித்தான். இல்லை, மையிலேயே வருந்தினான். "அவைகள்ல ட்டியே இருக்காதே" என்றான். ஆனால் ும் கூட தோரணையத்தான் வெளிப்படுத்தி டதோ எனவும் ஒரு நாகரிக அச்சம் ண்டான்.

'நோ, நோ, யார் சொன்னா? இந்தப் கங்கள்லதான் மனுஷர்களோட மனோ ங்கள், கொடூரங்கள் பற்றிய உண்மைகள் இருக்கு" என்றது சந்திராக்காவின் குரல்.

மணிக்கு தான் படிக்கத் தொடங்குகையில் கைப் புத்தகங்களைத் தேர்ந்து கொள்வது தில் குழப்பமுண்டாயிற்று.

பொன்ராஜுக்கும் சந்திராக்காவுக்குமிடையே புறிவார்ந்த விவாதம் நடந்து கொண்டிருந்தது. ன்ராஜ் ரொம்பவும் களைத்துப் போனான். ாகளை நாம் வெகுகாலம் வீட்டிற்குள்ளே வைத்துவிட்டோம். அவர்களுக்கு இன்னும் விரிந்த அறிவு ஏற்படவில்லை. பாவம், பெண்கள். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் காரணமும் ஆண்கள்தாம். அந்த ஆண்வர்க்கத்தில் அவனும் ஒருவன். அன்று அங்கிருந்து விடைபெற்றுச் செல்லும்போது கனிவார்ந்த சிந்தனைகள் தன் சிரசை ஒரு ஒளிவட்டம்போல் சூழ்ந்திருந்ததாய் நடந்தான் பொன்ராஜ்.

அன்றிலிருந்து நூலகத்திற்குப் போய்விட்டுத் திரும்பும்போதெல்லாம் சந்திராக்கா வீட்டுள்போய் சில வினாடிகளாவது இருந்துவிட்டுப் போவதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். சந்திராவும் அவர்கள் அம்மாவும் அந்த வீட்டில் தனித்து வாழ்கிறார்கள். சந்திராக்காவின் கணவர் - அவரும் ஒரு ஆசிரியர்தான் - பக்கத்திலுள்ள கிராமம் ஒன்றில் வேலை பார்க்கிறார். அவர்கள் ஒற்றுமையாக இருந்தால் இங்கிருந்தே தினசரி டவுண்பஸ்ஸில் அங்கு போய்வரலாம். அவர் குடிகாரர். குடியால் தன்னை அழி த்துக் கொண்டு தன் மனைவியையும் அழிக்க நினைக்கிறவர். ''அவரிடம் அவள் பட்ட கஷ்டங்களைச் சொன்னால் உங்களால் தாங்க முடியாது. அவள் அவரோடு எல்லா அடி உதைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை யாருக்கும் வரக்கூடாது கடவுளே!" என்று பார்வதியக்கா தனது ப்ரிய சிநேகிதியின் கதையை அவர்களிடம் ஒருநாள் சொன்னாள். அதன்பிறகு அவர்களுக்கும் சந்திராக்காவின் மீதுள்ள அன்பு பன்மடங்காய்ப் பெருகிற்று. மேலும் இப்போது அவர்களுக்கு ஒரு வில்லனும் கிடைத்து விட்டான். அந்த வில்லன் ஒரு குடிகாரன்; கணவர். அந்தக் கணவர் சந்திராக்காவிடம் இணைந்து வாழவே விரும்புகிறார். ஆனாலும் குடியையும் உதையையும் விடாத அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டு அவள் தன் சொந்தக் காலின் பலத்தில் நிற்கிறாள். அந்தத் தனிமை அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. துக்கமற்ற சமாதானம் ததும்பும் தனிமை. அதில் ஒரு கம்பீரம் இருந்தது. அது அவர்களை மேலும் கவர்ந்தது.

அன்று அவர்கள் நுழையும் போது ரேடியோவில் சிலோன் ஒலிபரப்பும் தமிழ் சினிமா பாட்டு ஒன்று கேட்டுக் கொண்டிருந்தது. சந்திராக்கா அந்தப் பாடலின் இனிமையில் லயித்திருந்தாள். அவர்களை வரவேற்று உட்காரச் சொல்கையிலும் அந்த லயிப்பை விடாதிருந்ததற்குத் தன்விளக்கமளிக்க முனைந்ததுபோல் அவள் பேசினாள் ''இந்த பாட்டு ரொம்ப நல்லா இருக்கில்லா; நல்ல குரல்; நல்ல இசை" என்றாள். ஒரு காதலி தன் விரகதாபத்தை குதூகலக் குரலில்

படிப்பகம்

www.padippakam.com

பளிப்படுத்துவதுபோல் அமைந்திருந்தது அந்தப் பாடல். "சிட்டுக் குருவி முத்தம் கொடுத்துச் சேர்ந்திடக் கண்டேனே" என்றும் அதுபோல இன்னும் பலவாறு சாகித்யங்கள். அவர்களுக்கு அந்தப் பாடல் பிடிக்கவேயில்லை. அதிலும் அக்காவுக்கு அப்பாடல் பிடித்தது என்பது அவர்களுக்கு மிகவும் பிடிக்கவேயில்லை. சந்திராக்காவின் ரசனை மிகவும் மட்டமாக இருப்பதாக இருவருமே நினைத்து அருவருப்படைந்தார்கள். ஒருவருக்கொருவர் அதைப் பற்றிப் பேசிக்கொள்ளாமலேயே தனித்தனியே வருந்தினார்கள். என்றாலும் அவர்கள் வாரம் ஒருமுறை பத்து நாட்களுக்கொருமுறை லைப்ரரிக்கு வரும்போதெல்லாம் சந்திராக்கா வீட்டிற்கு வருகை தருவதை நிறுத்தவில்லை.

அன்று அவர்கள் தார்சாவரை வந்துநின்றபோது உள்ளறையில் பனியன் அணிந்த ஒரு ஆள் நடமாடுவது கண்டு திடுக்கிட்டார்கள். அவர்தான் கணவரா? அந்தக் குடிகாரன்? சந்திராக்காவும் அவர்களை வரவேற்றவுடன் தன் கணவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். பார்த்த பார்வையிலேயே அவர்களுக்கு அவரைப் பிடிக்கவில்லை. இவன் எதற்கு வந்தான் என்றிருந்தது. அதே சமயம் அக்காவும் அவள் அம்மாவும் அவர் வருகையில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்ததும் ரொம்ப நன்றாகத் தெரிந்தது. அவர் அப்போது பையன்களின் ஏமாற்றத்திற்கும், பெண்களின் எதிர்பாரா சந்தோஷத்திற்குமிடையே எல்லாம் ஒன்றுதான் என்னும் ஒரு துறவிபோல் அங்கே நடமாடிக் கொண்டிருப்பதாகப்பட்டது.

"கவனிச்சியா பொன்ராஜ், அந்த ஆளு கண்ணு ஒரே சிவப்பா இருந்ததை?"

"சே! சே! இப்பவும் குடிச்சிருப்பார்ங்கிறியா?

"இல்லை, குடிச்சுக் குடிச்சே குடிகாரங்க கண்ணு எப்பவும் இப்படி ஆயிடறது உண்டு".

"என்னமோ. பாவம், சந்திராக்கா. இல்ல?"

"பாவம்தான்".

ஆனால் அதுரொம்பநாள் நீடிக்கவில்லை. பழையபடியம் சந்திராக்கா தனிமையானாள்; அந்தக் குடிகாரனை விரட்டி விட்டு நிம்மதியானாள்.

பொன்ராஜும் மணியும் அடிக்கடி அங்கே சென்று கொண்டிருப்பதைப் பார்த்த அந்தத்

குழந்தைத் தொழிலாளர் பற்றிய உண்மைகள்

குழந்தைத் தொழிலாளர் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவற்றில் பல பொய்யான தகவல்களும் உலவி வருகின்றன. அவற்றில் சிலவற்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்:-

வேலையில்லாத ஆட்களுக்கு நிகராக 550 லட்சம் குழந்தை அடிமைகள் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இந்தக் குழந்தைகளை மீட்பதன் மூலம் 550 லட்சம் ஆட்களுக்கு வேலை தர முடியும். இது வேலையில்லா வயது வந்தோர் அனைவருக்கும் வேலை தரும்படியாக இருக்கும். எனவே வேலையின்மை என்பது களைந்தெறியப்பட்டு விடும்.

குழந்தை உழைப்பே வறுமைக்கு காரணம். ஏனெனில் இந்தியாவில் 550 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் 1500 லட்சம் ரூபாய்களை நாளொன்றுக்குக் கூலியாகப் பெறுகின்றனர். ஆனால் இதுவே 550 லட்சம் பெரிய தொழிலாளர்களைக் கொண்டு செய்யக்கூடுமானால் அவர்களது வருமானம் 15,000 லட்சம் ரூபாய்களாக உயரும். இதனால் அத்தனை குடும்பங்களினதும் வாங்கும் திறன் பெருகும். இதனால் வறுமை அகலும். அதே சமயம் குழந்தை உழைப்பு தொடர்வதென்பது நாளைய தேசத்தில் மக்களை, வருங்காலத் தலைமுறைகளை உடலளவில் தகுதியற்றவர்களாக மாற்றும் செயலாகும். சுருக்கமாகச் சொன்னால், எதிர்காலத்தில் நோயாளிகளும், கல்லாதவர்களும், ஏழைகளும் நிறையப் பேர் இருப்பார்கள்.

குழந்தை உழைப்பே மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் காரணமாகிறது. 1981-91 ஆம் ஆண்டுகளின் கணக்கெடுப்பின்படி உழைக்கும் குழந்தைகள் நிறைந்த பகுதிகளில்தான் மக்கள் தொகைப் பெருக்கம் தெரிய வருகிறது. அதாவது அக்குடும்பங்கள் ஏற்கெனவே குறைந்த வருமானம் கொண்டவையாக இருந்தன. கூடுதலான குழந்தைகள் பிறந்தால் கூடுதல் வருமானம் வரும் என்று நினைக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

தெருவிலிருக்கும் சீனியர் மாணவப் பையன்கள் அவர்களை ஒரு மாதிரியாகக் கேலி செய்தனர். பார்வதியக்காவும், "எலே, நீங்க என்ன சும்மாச் சும்மா அங்கே போய்க்கிட்டிருக்கீங்க. உங்களுக்கு வேற ஜோலி இல்லையாடா!" என்று கேட்கவும் இவர்களும் வெகுகாலமாய் அங்கே போகாமல் இருந்தார்கள். அக்கா ஏதோ ஒரு ஜோலியாக அனுப்பிவைத்த போது - லீவு லட்டர் கொடுக்கவா? ஏதோ ஒரு ஜோலி - சந்திராக்காவாவது கேட்டார்களா என்றால் இல்லை. "என்னடா முன்னைப்போல இந்தப் பக்கமே வர்றதில்லை. லைப்ரரிக்கெல்லாம் வர்றதேயில்லையா?" என்று கேட்கவேயில்லை. கேட்டிருந்தால் அவர்களும்தான் என்ன சொல்லியிருப்பார்கள்.

அப்புறம் அவர்களுக்குள் என்ன சமரசம் நடந்து முடிந்ததோ? சந்திராக்காவும் அவள் கணவரும் மீண்டும் சேர்ந்து வாழத் தொடங்கிவிட்டனர். அவர் தினசரி காலை எட்டுமணிக்கே பஸ்பிடித்து வேலைக்குப் போய்விட்டு சாயந்திரம் விளக்குப் பொருத்தும் வேளைக்கு வீடு வந்து சேர்கிறார். களைத்துப் போய்வரும் அவரை பாட்டியம்மாவும் சந்திராக்காவும் விழுந்து விழுந்து கவனிக்கின்றனர். அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். அக்கா பணிக்கும் வேலையின் நிமித்தம் பொன்ராஜும் மணியும் அங்கே போகும்போது அந்தக் கோலத்தைப் பார்க்கிறார்கள்" அத்தான் ரொம்ப மாறிட்டார்டா" என்று சந்திராக்காவும் ஒருமுறை பேச்சோடு பேச்சாய் அவர்களிடம் கூறினாள். பார்வதியக்காவுக்கும் தன் தோழியினுடைய வாழ்க்கை கடைத்தேறியதில் ரொம்பத் திருப்தி. சந்திராவின் அப்போதைய மறுமலர்ச்சி பெற்ற வாழ்க்கைகுறித்து சந்தோஷப்பட்டாள். அவர் - சண்முகசுந்தரம் கூட - வீதியில் வைத்து பஸ்ஸைவிட்டு இறங்கி நடந்தபோது தற்செயலாய்ச் சட்டென்று அவர்கள் கண்ணில்பட்ட ஒருநாள் அவர்களைப் பார்த்து அவர் எவ்வளவு அழகாகச் சிரித்தார்! என்றாலும் அவரைப் பார்த்தாலே பையன்கள் இருவருக்கும் பிடிக்கவில்லை. அந்த ஆள் மூஞ்சும் முகறையும்! அவருடையது எதுவுமே அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பெண்கள் பாவம்; வேறு வழியே இன்றித்தான் அவர்கள் இத்தகைய ஆண்களுடன் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் போலும் என்று அவர்கள் நினைப்பது போலிருந்தது. ஆகவே சந்திராக்காவின் மகிழ்ச்சிகூட ஒரு பொய்த் தோற்றம்போலும் தோன்றி அவர்களை வெறுக்க வைத்தது. சந்திராக்காவையும் பிடிக்காமல் போய்விட்டது. சந்திராக்கா தப்பு செய்கிறாள். தோற்றுப்

அதனால் மேலும் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுகின்றனர். எனவே குழந்தை உழைப்பினால் மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படுகிறது. குழந்தை உழைப்பு அகற்றப்பட்டால் இதே மக்கள் ஒன்றுக்கு இரண்டு முறை, குழந்தை பெற்றுக் கொள்ளச் சிந்திப்பார்கள்.

குழந்தை உழைப்பு கல்லாமையை ஊக்குவிக்கிறது. குழந்தைகள் பள்ளியில் இருந்து பாதியோடு படிப்பை நிறுத்திவிடுகின்ற விழுக்காட்டளவு குழந்தை உழைப்பு இல்லாத பகுதிகளில் 40 ஆகவும், குழந்தை உழைப்பு நிலவும் பகுதிகளில் 85 ஆகவும் உள்ளது. இங்குள்ள பள்ளிகள் முறையாகப் பேணப் படாமல் உள்ளன. பெற்றோர்கள் தொழிலுடைமையாளர்கள் தரகர்கள் பிடியில் சிக்கித் தங்களது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். கட்டாய இலவசக் கல்வியால் மட்டுமே கல்லாமையை ஒழிக்க முடியும்.

மரபான கைத்திறத் தொழில்களில் குழந்தைகள் பணிசெய்வதைப் பலர் நேர்மைப் படுத்துகின்றனர். உண்மையில் கைத்திறத் தொழிலிலோ, வேளாண்மையிலோ, ஈடுபட்டுள்ள குழந்தைகளின் கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற ஏதாவது ஒன்று கிட்டாமல் போனாலும் அது குழந்தை உழைப்புத்தான். சிறிது நேரம் பெற்றோர் செய்யும் தொழிலில் உதவியாக இருந்து கற்றுக் கொள்வது குழந்தை உழைப்பாகக் கருதப்பட மாட்டாது.

இன்று புதிய பொருளாதாரக் கொள்கையினால் பெருகி வரும் ஏராளமான பெருந்தொழில்கள் மறைமுகமான குழந்தைத் தொழிலாளர்களை உருவாக்கும். ஏனெனில் ஒன்றிணைக்கப்பட்ட பெரிய தொழிலாளர்கள் தங்களது கூலி உயர்வு போன்ற தொழிற்சாலை, தொழிலாளர் நல உரிமைகளைக் கோருவார்கள். இது ஒரு புறமிருக்க மரபான தொழில்களான வேளாண்மை, பானை செய்தல், கண்ணாடி வேலைகள், நெசவு போன்ற தொழில்களிலும் குழந்தை உழைப்பாளிகள் பெருகிவிட்டனர். •

படிப்பகம்

www.padippakam.com

போய்விட்டாள். அவளுடைய கம்பீரம், அழகு, உன்னதம் எல்லாமே பாழ்பட்டுவிட்டதாகப்பட்டது.

அன்று மாலை இருவரும் வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு இனி விளக்குப் போட்டபிறகு படிக்கத் தொடங்கலாம் என எண்ணியவாறு சற்றுக் காலார வெளியே புறப்பட்டார்கள் அக்காவின் பாஷைப்படி சொன்னால் 'ஊர் சுற்றக் கிளம்பிவிட்டார்கள்'. அப்போதுதான் ஒரு ஆள்வந்து சொன்னான். ஓடுகிற பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த சந்திராவின் கணவர், பக்கத்தில் வந்து கொண்டிருந்த இன்னொரு பஸ் உரசி... அந்தக் கொடுமையைச் சொல்வதற்குள் அந்த ஆள் அழுதுவிட்டான். உடனே அக்கா எல்லோரும் ஓடிப் போய்ப் பார்த்தார்கள். சந்திராக்கா தன் உடலே கிழிந்து சிதறும்படியாய் கதறிவிட்டாளாம். அழுது ஓய்ந்து அவள் சிதறிக் கிடந்த கோலம் பார்க்க ரொம்ப பயங்கரமாய் இருந்தது. இவளும் தன் உயிரை முடித்துக் கொள்வாளோ என்று இருந்தது. அந்தக் காட்சியை மறக்க முடியவில்லை.

எல்லாம் நடந்து முடிந்தன. அக்காவுக்குச் சின்ன வயது. இந்த வயதிலேயே இவளுக்கு இப்படி ஒரு கஷ்டம் வரணுமா? என்று பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். அத்தகைய ஆழ்ந்த அனுதாபத்தையும் தாண்டி சந்திராவின் நிலைகுறித்து வெகு தீவிரமானதோர் துக்கத்திற்காளானார்கள் பொன்ராஜும் மணியும். அப்போது அவர்களுக்கு ஆண்டு இறுதித் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. பாடங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. ரிவிஷன், ரிவிஷன், ரிவிஷன் என்று படிப்பு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று படிப்பை முடிக்கையில் மணி பத்து. தன் நண்பன் மணியை அடுத்த தெருவிலிருக்கும் அவன் வீட்டில் கொண்டு போய்விட வேண்டும். இருவரும் தெருவில் இறங்கி நடந்தார்கள். ஒரு மௌனமான அழுகை தெருவிளக்குகளாக நின்று கொண்டிருந்தது. அதை அறியாததுவாய் ஆளரவமற்ற தனிமையின் சோகத்தில் தெரு கிடந்தது. அப்போதுதான் பொன்ராஜ் தனது ஆருயிர்த் தோழனான மணியிடம் சொன்னான், ஆழமும், தெளிவும், தீவிரமுமிக்கதோர் குரலில் : "நான் சந்திராக் காவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்".

மணி பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். கடைசிவரை ஒன்றும் பேசவில்லை. மறுநாள் பள்ளிக்கூடம் விட்டுவந்த சாயங்காலம் வீட்டுக்குப் போய் முகம் கால் கை கழுவிவிட்டு மீண்டும் தன் நண்பன் பொன்ராஜைத் தேடிப் போவதற்கு சந்திராக்காவின் வீட்டிற்குப் போனான். "
என்றாள். சந்திராக்கா, அடைத்துப்
தொண்டையுடன். முகம் இன்னும் வீங்கியி
இன்னும் துக்கப்படுக்கையைவிட்டு
எழவில்லை. அந்த இழப்பு, அவள் மீது
இடி சாமான்யமானதில்லை. ஆனால் அதை
அவன் சரிசெய்துவிட வந்துவிட்டானே!

அக்கா தன் கட்டிலருகேயுள்ள ஸ்
உட்காரும்படி சைகை செய்தாள். அவன்
துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத்
வந்திருக்கிறான் என்பதை அறிந்தவள்
அவனை ஏக்கத்தோடு நோக்கினாள். தொ
அடைத்திருந்ததால் குரல் எழும்பவி
இன்னும் அவள் துக்கம் ஆறவில்லை. இ
தனியாக இருக்கும்போதும் இரவிலும்
அழுதே தன் சக்தியையெல்லாம் போ
கொண்டிருப்பவளாகக் காணப்பட்டாள்
மணி, அவள் கட்டிலருகே மிகவும் நெருக்
வந்து நின்றபடி சொன்னான் :" அக்கா,
உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிடறேங்க

சந்திராவுக்கு அதுவரை இருந்த 'மூட்
வெடி வெடித்தது போல் வெடித்துப்
போயிற்று. அடக்கமுடியாமல் ஒரு சி
படபடவெனச் சிறகடித்து எழு
கலவரமடைந்து ஓடிவந்தாள் அவள் தா
மனசை வேறு விஷயங்களில் திருப்பி
கலகலவென்று பேசிச் சிரிக்கத் தொடங்கிவிட்
நல்லதுதான். ஆனால் பதினாறாம் நாளு
இவள் இப்படிச் சந்தோஷமாகச் சிரி
நாலுபேர் காதில் விழுமே என்ற கவ
அவளுக்கு. அப்போது மணி அந்தப்
திரும்புகையில் பொன்ராஜு வாசலில்
போல் நின்று கொண்டிருக்கிறான்.

"போங்கடா பொடிப்பசங்களா,
ஒழுங்கா பாடங்களைப் படிச்சு நல்ல
எடுக்கற வழியைப் பாருங்கடா" என்றாள்.

மணி ராஸ்கல் தன்னை முந்திக் கொ
பார்த்தானா. அவனுக்கு நன்றாக வேண்
ஆனால் நல்லவேளை. தான் சொல்லியிருந்த
தனக்கும் இந்தக் கதிதானே ஏற்பட்டிருக்கும்
நினைக்கையில் அவன் தன் நண்பனை
மன்னித்துவிட்டான்.

சந்திராக்கா, இரண்டுபேரையுமே "போங்
பொடிப்பசங்களா" என்று செல்லமாக ஒரு
தள்ளியதில் அவர்கள் மிகுந்த வேதனையுற்றா
தாங்கள் குழந்தைகளாகவே சபிக்கப்பட்டுள்ள
போன்ற வேதனை அது.

படிப்பகம்

www.padippakam.com

பொய்க்கும் சமன்பாடுகள்

எஸ்.எம்.ஏ.ராம்

சரியாய்க் காலை ஐந்தரை மணிக்கெல்ல
கண்ணம்மா காலிங் பெல்லை அடித்துவிடுவா
அவள் தரும் காலிங் பெல் சத்தத்தைக் கொண்
கடிகாரத்தைச் சரி செய்து கொள்ளலா
அவ்வளவு துல்லியம். அவள் காலிங்பெ
பித்தானை அழுத்துவதில் கூட ஒரு மென்மை
அழகும் இருப்பதாய்த் தோன்றும். ஓர் அன்ப
தோழமை உணர்வு அந்த சத்தத்தில் இருக்கு
அதை எப்படி புரியவைப்பது என்பது தெரிய
ஓர் உள்ளுணர்வாய்த்தான் அதைப் புரி
கொள்ள வேண்டும். கொஞ்ச நேரத்திலேயே வ
போகும் பால்காரன், பேப்பர்காரன் இவர்
எல்லாரும் அழுத்துகிற அழைப்புமணி சத்தங்க
வெளிப்படும் நிதானமின்மை, பரபர
முரட்டுத்தனம் இவை எதும் கண்ணம்மாவ
காலிங் பெல்லில் இருக்காது.

கண்ணம்மா வேலைக்குச் சேர்ந்து
காலத்திலேயே அவளை மிகவும் பிடித்துவிட்
சுலோசனாவுக்கு. பம்பாயிலிருந்து அ
கணவனுக்கு சென்னைக்கு மாற்றலாகி இ
புதிய ஃப்ளாட்டிற்குக் குடியேறிய கடந்த
மாதங்களில் வீட்டு வேலைகளைச் செய்ய
வேலைக்காரி கிடைக்காமல் அவள் நிறைய
சிரமப்பட்டாள். பம்பாயில் வேலைக்க
கிடைப்பது குதிரைக் கொம்பு மாதிரி. அப்ப
கிடைத்தாலும் அவர்கள் போடுகிற கண்டிஷன்
மதராஸிகளுக்கு மயக்கத்தைத் தந்துவிடும்.
உ.பி. காரப் பெண்ணிடம் மாட்டிக் கொண்டு ப
சங்கடங்களை எல்லாம் சுலோசனா சென்
வந்தும் மறக்கவில்லை. இங்கே அத்தன
பிரச்சனைகள் இல்லை என்றாலும், ந
நம்பகமான முகம் சுளிக்காத, கை நீளாத
சமயம் மாத பட்ஜெட்டிற்கும் ஒத்துவரு
பெண்ணாய்த் தேடவேண்டி இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

ரொம்பச் சின்னப் பெண்ணாகயிருந்தாலும் சரி, ரொம்ப வயசானவளாயும் இருந்தாலும் சரி - க்ஷ்டமான வேலைகளைச் செய்யச் சொல்ல மனசு வராது. ஆனால் அதற்காக அழகான, மதர்ப்பான இளம் பெண்ணாய்த் தேடுவதிலும் ஓர் அசட்டு பயம் இருந்தது. எப்போதாவது தான் வீட்டில் இல்லாமல் இருந்து, அந்த நேரம் அவளும் தன் புருஷனும் மட்டும் தனியாக இருந்து, டைனிங் டேபிளுக்குக் குறுக்காக சாஸ் பாட்டிலை எடுக்க அவள் குனிகையில் சற்றே உத்தரீயம் விலகி விட, இவனும் கண நேர சபலங்களுக்கு ஆட்பட்டு... இந்த சினிமாத்தனமான மூடக்கற்பனை குறித்து சுலோசனா தனக்குள்ளேயே வெட்கமடைந்தாலும், எந்தவித ரிஸ்கும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்தாள். 'ஆண்பிள்ளைகளை அவ்வளவு எளிதில் நம்பி விடாதே' என்று அவளுடைய அம்மாவே ஒரு தடவை எச்சரித்திருந்தாள்.

ஆக, இத்தனை முன் ஜாக்கிரதைகளுக்கும் ஒத்து வருகிற சகல யோக்கியதாம் சங்களோடு, கிட்டத்தட்ட 'மெனோபாஸை' நெருங்கிக் கொண்டிருக்கிற வயதில் ஒரு பெண்மணி, கண்ணம்மா ரூபத்தில் அவளுக்குக் கிடைத்தது பெரிய அதிர்ஷ்டம்தான். பெருங்களத்தூரில் இருக்கிற அவளுடைய ஒன்றுவிட்ட அக்காள் மூலமாகத்தான் கண்ணம்மாள் அறிமுகமானாள்.

கண்ணம்மாவுக்குப் பூர்வீகம் எல்லாம் இராமநாதபுரம் பக்கத்தில் ஒரு சின்னக் கிராமம். ஆரம்பத்தில் பேருக்குக் கொஞ்சம் நிலம் இருந்தும், மழையை நம்பி வாழ்கிற நிச்சயமற்ற வாழ்க்கை. வறுமையின் எரிச்சல்களோடும், வசதியான வாழ்க்கை குறித்த கனவுகளோடும், எவனோ துபாயில் வேலை வாங்கித் தருகிறேன் என்று ஆசை காட்டியதில் மயங்கி, இருந்த சொற்ப நிலத்தையும் விற்றுவிட்டுச் சென்னைக்கு வந்தானாம் அவள் புருஷன். துபாய்ப் பேர்வழி இவனை லாட்ஜில் தங்கவைத்துவிட்டு, 'இதோ வருகிறேன்' என்று பணத்தோடு போனவன்தானாம். 'இந்த மனுஷனை நம்பியதற்குப் பேசாமல் மழையை நம்பி இருக்கலாம்' என்று பிற்பாடு ஞானம் வந்து புலம்பியிருக்க வேண்டும். கண்ணம்மா, ஏமாளிப் புருஷனை நொந்தபடி, வேறு வழியின்றி ஜீவனத்திற்காக சென்னைக்கே வந்துவிட்டாள். யாரோ இரக்கப்பட்டு, கிண்டி தொழிற்பேட்டையில் ஒரு சின்னத் தொழிற்கூடத்தில் அவனைக் கேஷுவல் லேபரராகச் சேர்த்துவிட, வண்டி ஏதோ ஓடத் தொடங்கியது.

கண்ணம்மாவுக்குக் குழந்தைகள் எதுவும் இல்லை. அதனாலேயே சுலோசனாவின் இரண்டு வயதுப் பையனைக் கவனித்துக் கொள்கிற வேலை என்பதில் அவளுக்கு ஓர் ஈடுபாடு வந்திருக்க வேண்டும். விடிகாலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்து சோறாக்கிவிட்டுச் சரியாய் ஐந்தரைக்கெல்லாம் வேலைக்கு வந்துவிடுவாள். முதல் அழைப்புமணிச் சத்தத்தை அனேகமாக அவளேதான் எழுப்புவாள். வாசல் கதவில் தொங்கும் துணிப்பையில் பால்காரன் வைத்துவிட்டுப் போகும் பால்கவர்களை எடுத்து வந்து ஃபிரிட்ஜைத் திறந்து உள்ளே வைத்து மூடுவதிலிருந்து அவளுடைய அலுவல்கள் ஆரம்பித்துவிடும். சுலோசனா, ஆறுமணிக்குப் பாதித்தூக்கம் நிறைந்த விழிகளோடு கைவிரலைச் சொடுக்கிக் கொட்டாவிவிட்டுக் கொண்டே படுக்கை அறையிலிருந்து வெளிவரும்போது, வீடு பெருக்கி, பினாயில் தண்ணீரால் தரையை மெழுகி, பாத்ரூமில் பாத்திரங்களை அலம்பி, டர்க்கி டவலால் அவற்றைத் துடைத்து சமையலறை ஷெல்புகளில் அழகாய் அடுக்கி வைத்திருப்பாள். அப்புறம், கதவு இடுக்கில் பேப்பர்காரன் உள்ளே செருகி வைத்திருக்கும், மடிப்புக் கலையாத இங்கிலீஷ் பேப்பரைக் குனிந்து எடுத்துத் தூசு தட்டி டீப்பாயின் மீது வைப்பாள். சில சமயம், அவள் ஒருவித ஆவலோடு முன்பக்கத்தில் பெரிசாய்ப் புகைப்படம் ஏதாவது வந்திருந்தால், பேப்பரை முகத்திற்கெதிராகப் பிடித்தபடி சிலகணம் அதை உற்றுப் பார்ப்பாள். சுலோசனா, அதைக் கவனித்துவிட்டு, "என்ன கண்ணம்மா, இங்கிலீஷ் பேப்பர் படிக்கிறியா?" என்று கிண்டலாகக் குரல் கொடுத்தால் உடனே வெட்கத்துடன் அதை டீப்பாயின் மீது அவசரமாய் வைத்துவிட்டு, "ஆமா, நான் தமிழ் படிச்சு வாழ்ந்தேன், இப்ப இங்கிலீஷ் படிக்க..." என்று ஒரு விரக்திச் சிரிப்புடன் அலுத்துக் கொள்வாள்.

சுலோசனாவுக்குக் கண்ணம்மா மீது அனுதாபம் வரும். தனக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்ற ஆதங்கமும் வேதனையும் கண்ணம்மாவுக்கு நிறையவே இருந்தன. ஒரு குக்கிராமத்து விவசாயக் குடும்பச் சூழலில், பள்ளிப்படிப்பு பற்றிய எந்த அக்கறையும் யாருக்கும் இருக்கவில்லை. ஏழுவயசிலிருந்து பதினாறு வயசு வரையில் தலையில் சும்மாடு கட்டி, வயல் காட்டில் வேலை செய்யும் அப்பனுக்குச் சோறு சுமந்தவள், அதன்பின் கல்யாணம் ஆகிப் புருஷன்காரனுக்குச் சோறு சுமந்தாள். அவளது இளமைக்காலம் அப்படித்தான் எந்த சுவாரஸ்யமும் இன்றிக் கழிந்திருந்தது. எப்போதாவது டவுன் பள்ளிக்கூடத்து யூனிஃபார்ம் போட்ட பையன்களைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடுவதோடு சரி.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு நாள் மத்தியானம், சாப்பாடெல்லாம் முடிந்து, குழந்தையைத் தூங்கப் பண்ணிவிட்டு, கூடத்து மொஸைக் தரையின் வழவழப்பை ஸ்பரிசித்தபடி, சுலோசனா ஒருக்களித்துப் படுத்துக் கொண்டே கண்ணம்மாவின் பழைய கதைகளைக் கிளறிக் கொண்டிருந்தாள். கொஞ்சம் தள்ளிக் கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு, சுலோசனா பக்கம் திரும்பிப் படுத்திருந்தாள் கண்ணம்மா. "அதை ஏம்மா கௌர்றீங்க... படிப்பறிவு இல்லாத மனுசாளுக... உப்புச் சப்பில்லாத வாழ்க்கை. வயலு, வரப்பு, களத்து மேடு, கேப்பங் கூழு... மறுநா திரும்பவும் வயலு, வரப்பு, களத்து மேடு, கேப்பங்கூழு... இதான் பொளுதன்னிக்கும் வாழ்க்கை..." என்று அலுத்துக் கொண்டாள்.

சுலோசனா சொன்னாள். ''நான் நகரத்துலயே பொறந்து நகரத்துலயே வளர்ந்தவ; கிராமத்தைப் பத்தி எல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது. ரொம்பச் சின்னவயசுல, அப்பாவோட பூர்வீகக் கிராமத்துக்குப் போன ஞாபகம். அப்பாவோட பெரியப்பா ரயில்வே ஸ்டேஷனுக்கு டயர் வண்டி அனுப்பிச்சிருந்தார். அப்பல்லாம் டயர்வண்டி வச்சிருந்தா, இப்பக் கார் வச்சிருக்கிற மாதிரி. கிராமங்களுக்கெல்லாம் எலக்ட்ரிசிட்டி வராத காலம். வீட்டு வாசல்ல ஒரு பெரிய புளியமரமும் வைக்கோல் போரும் இருக்கும். பக்கத்துலயே மாட்டை அவுத்துத் தனியாகக் கட்டிப் போட்டு வண்டி மட்டும் சாச்சு வச்சிருக்கும். ஆறுமணி வரைக்கும் அந்த வண்டி மேல ஏறிக் குதிச்சு வௌயாடுவோம். உன்னை மாதிரியே எங்க கிராமத்துத் தாத்தா வீட்டுலேயும் ஒரு நல்ல வேலைக்காரி இருந்தா. அவ பேரு கூட எனக்கு இப்ப மறந்துபோச்சு. அவ, அந்த வண்டிக்குள்ள எங்களுக்குச் சரியா உக்காந்துக்கிட்டுக் கதை எல்லாம் சொல்லுவா. ஆறுமணி ஆனாப் பேய்க் கதை சொல்லுவா. நாங்க அரைக் கண்ணத் தொறந்து வைக்கப்போரையும் புளியமரத்தையும் பார்ப்போம். வெளிச்சம் மங்கி இருட்டுப் பரவப் பரவ அந்தப் புளியமரமும் வைக்கப்போரும் ரெண்டு பிசாசு நிக்கிறமாதிரி தெரியும். நாங்க வண்டியிலேருந்து கீழே குதிச்சு ஒரே ஓட்டமா உள்ளே ஓடுவோம். அவ எங்களத் துரத்திக்கிட்டே, ''கதையை முழுசாக் கேளுங்கடி பொண்டுகளா..."ன்னு கத்திக்கிட்டு ஓடி வருவா... 'ஏண்டி, கொழந்தைங்ககிட்ட எந்த நேரத்துல எதைச் சொல்லணும்னு தெரியாதா... நாலு எழுத்துப் படிச்சிருந்தா இல்ல நல்ல விஷயம் நாக்குல வரும்...? களிமண்ணு...' - அப்படீன்னு தாத்தா அவளத் திட்டுவாரு. ஆனா, அதுக்காகவெல்லாம் அவ முகம் சுளிக்கவே மாட்டா... கண்ணம்மா... உனக்கும் அவளுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அவ, உன்னை மாதிரி தனக்கு எழுதப் படிக்கத் தெரியலையேன்னு எப்பவுமே வருத்தப்பட்டதே இல்ல..."



கண்ணம்மா சுலோசனா பேசியதை ஆர்வமாய்க் கேட்டபடி இருந்தாள். கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் எதையோ யோசித்தபடி

படிப்பகம்

www.padippakam.com

படுத்திருந்தாள். "என்ன தீவிரமான யோசனை?" என்று கேட்டுவிட்டு, சுலோசனா எழுந்துபோய் ரெகுலேட்டரைத் திருகி மின்விசிறியின் வேகத்தைச் சற்றுக் குறைத்துவிட்டு வந்து, சோபாவின் மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். கண்ணம்மாவும் இப்போது மரியாதை கருதி, எழுந்து உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள்.

"அம்மா, நான் நாலெழுத்துப் படிக்க லேயேன்னு வருத்தப்படறதுக்கு ஒரு காரணம் உண்டு. பூர்வீகத்துல எங்கப்பாவுக்குக் கொஞ்சம் நெலம் இருந்தது. யாருகிட்டயும் கையேந்தி நின்னு சீவனம் பண்ணத் தேவையில்லாத அளவுக்குன்னு வச்சுக்குங்களேன். மிராசுதாருப் பய, இவருக்குப் படிக்கத் தெரியாதுங் கறதைப் பயன்படுத்திக்கிட்டு, இவரை நல்லா ஏமாத்தி இவரோட நிலத்தை வாயில போட்டுக்கிட்டான்..."

கண்ணம்மாவின் முகத்தில் சோகம் தெரிந்தது. இப்போது சுலோசனா ஆர்வமும் அனுதாபமும் கலந்த குரலில், "இது எப்படிக் கண்ணம்மா நடந்தது?" என்று கேட்டாள்.

கண்ணம்மா தொடர்ந்தாள் : "எங்கூரு மிராசுதாரு இருக்கானே, அவன் நம்ம சினிமாவுல வர்ற மிராசுதாருங்க மாதிரியே ரொம்பவும் அயோக்கியன். என்னென்னமோ தில்லுமுல்லுப் பண்ணி ஊருல இருக்குற முக்கால்வாசி நிலத்தை எப்படியோ வளைச்சிப் போட்டிருந்தான். எல்லாம் பினாமி பேருலதான். எங்கப்பாரு நிலம் மட்டும் நடுவுல மாட்டிக்கிச்சு. ஒரு நா வீடு தேடி வந்து 'அந்த நிலத்தை ஒரு வெலை போட்டுக் கொடுத்திடுங்கண்ணே, நான் வாங்கிக்கிறேன்...'ன்னு ஒரு அடிமாட்டு வெலைக்குக் கேட்டான். 'சோறு போடற பூமா தேவியை யாருக்கும் விக்கமாட்டேன், போடா'ன்னு எங்கப்பாரு வீராப்பா அவனை வெரட்டி அடிச்சிட்டாரு.. ஆனா, அந்த வீராப்பெல்லாம், எனக்குக் கண்ணாலம்னு வந்தப்போ எங்கியோ பறந்து போச்சு. கண்ணால செலவுக்கு ஒரு அய்யாயிரம் கொறைஞ்சிது. அந்த வருசம், பருவமழை தப்பிப் பயிரெல்லாம் காஞ்சு கருவாடாப் போன நேரம். தெரிஞ்சவங்க யாராருகிட்டியோ கேட்டும் பணம் பொறளல. கடைசியில சாட்சிக்காரன் கால்ல உளுவறதுக்குப் பதிலா சண்டைக்காரன் கால்லயே உளலாம்னு பொலம்பிட்டு, அந்த மிராசுகிட்டயே போயி, 'பூமி அடமானமா வச்சுக்கிட்டு அய்யாயிரம் கொடுங்க, அடுத்த வெள்ளாமையில திருப்பிக் கொடுத்துடறேன்'னு வெக்கமில்லாமக் கேட்டாரு..."

"சோறு போடற பூமாதேவியை விக்கக் கூடாதுன்னு சொன்ன அப்பாவா..." என்று ஆச்சரியமாய் இடைமறித்தாள் சுலோசனா.

"விக்கத்தான் கூடாது. அடமானம் வக்கலாமே. பூமாதேவி வெறும் மண்ணுதானே. பொஞ்சாதி இல்லியே. ஆனா, காசு மொடைன்னு வந்தா கட்டின பொஞ்சாதியையே அடமானம் வைக்கும்மா நம்ம படிப்பறிவில்லாத பாமர சனம்.. எல்லாம் கெட்டநேரம்தான். அடகு வச்சது கூடப் பெரிய தப்பாப் படல எனக்கு. ஆனா, பத்திரத்துல என்ன எழுதியிருக்குன்னு தெரியாமலேயே இது கைநாட்டு வச்சிதே, அந்தக் கண்ணறாவிய எங்க போயிச் சொல்ல? மிராசுதாரு வாசிச்சுக் காட்டினது ஒண்ணு. ஆனா, அதுல அவன் எழுதிக்கிட்டது வேற ஒண்ணு. நிலம் முழுசையும் தனக்கே வித்துப் பணம் வாங்கிக்கிட்டதா அவன் அதுல எழுதியிருந்தானாம். இதுக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியாதே. ஊருப் பெரிய மனுசன் வாசிச்சுக் காட்டினது சரியா இருக்கும்னு நம்பிடுச்சு".

சுலோசனாவுக்கே இப்போது அசாத்தியக் கோபம் வந்தது. "இது என்னடீ, அக்கிரமமா இருக்கு. இவருக்குத்தான் படிக்கத் தெரியாதுன்னா, ஊருல படிக்கத் தெரிஞ்ச யாருகிட்டயாவது காட்டி என்ன எழுதியிருக்குன்னு கேட்டிருக்கலாம் இல்ல..."

"பக்கத்துலயே ஊருக் கணக்குப் புள்ளயும் இருந்துருக்கான். எல்லாம் சரியாகத்தான் இருக்குன்னு அந்தப் பரதேசி மவனும் சொல்லியிருக்கான். எல்லாம் கூட்டுக் களவாணிங்கம்மா... இந்த அறிவு கெட்ட மனுசனுக்குத்தான் புத்தி எங்க போச்சு? நிலம் கை நழுவிப் போச்சு. கோர்ட்டு கேசுன்னு போவறதுக்குக் கையில துட்டும் இல்ல. அப்பறம், குய்யோ முறையோன்னு புலம்பி நடுத்தெருவுல நின்னு மண்ண வாரி இறைச்சதோட எல்லாம் முடிஞ்சு போச்சு..."

கண்ணம்மாவின் கதை சுலோசனாவை ரொம்பவுமே உலுக்கிவிட்டது. இப்படியுமா ஒரு மனுஷன் ஏமாற முடியும். கண்ணம்மாவின் அப்பாவுக்கு மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் இப்படி ஏமாந்து போயிருப்பாரா? படிப்பு மனிதனுக்கு எத்தனை பெரிய பாதுகாப்பு, கவசம்... கண்ணம்மாவின் அப்பாவுக்கு இது ஏன் புரியாமல் போனது... அந்த மனிதர் தான் படிக்காமல் போனதோடு, தன் சந்ததியையும் அல்லவா படிப்பறிவின்றிக் கெடுத்துவிட்டிருக்கிறார். ஆனால், கண்ணம்மா தனது இழப்பை நன்கு உணர்ந்திருக்கிறாள். தனது இழப்பு வெறும் நாலு ஏக்கர் நிலம் இல்லை., அதற்கும் மேல் ஏதோ ஒன்று என அவள் உணரத் தொடங்கியிருக்கிறாள். வாழ்வின் வெறுமையைப் படிப்பினால் நிரப்பிவிடமுடியும் என்று அவளுக்குத் தோன்றியிருக்கிறது. ஆனால், காலம்

படிப்பகம்

www.padippakam.com

கடந்த ஞானம். வெறும் ஒரு பஸ்ஸையோ ரயிலையோ தவறவிட்ட தற்காலிக இழப்பா அது...?

சுலோசனா ஒரு முடிவுக்கு வந்தாள். "கண்ணம்மா, தினமும் சாயங்காலம் நான் பள்ளிக்கூடம் முடிஞ்சு வந்தவுடனே உனக்கு ஒரு மணிநேரம் எழுதப்படிக்கக் கத்துத்தரப் போறேன். உங்கப்பா பண்ணின தப்பை நீயோ வேற யாரோ வாழ்க்கையில மறந்தும்கூடப் பண்ணக் கூடாது. என்ன சொல்றே..." என்று கண்ணம்மாவிடம் ஆவேசமாய்க் கேட்டாள்.

கண்ணம்மாவின் கண்களில், சட்டென்று ஓர் ஒளிப்பொறி தெறித்தது. "நெசமாவா சொல்றீங்கம்மா. இத்தனை வயசுக்கப்பறம் எனக்குப் படிப்பு வருமா.."

"எல்லாம் வரும். மனசுல முதல்ல வைராக்கியம்தான் வரணும். படிப்புக்கும் வயசுக்கும் எந்த சம்பந்தமும் கெடையாது." என்றவள், "நாளைக்கு நான் ஸ்கூல்லேருந்து வரப்போ ஒரு சிலேட்டும் அரிச்சுவடிப் புஸ்தகமும் வாங்கிட்டு வருவேன். நீ ரெடியா இரு. நாளையிலேருந்து உனக்குத் தினமும் சாயங்காலம் ஒரு மணிநேரம் ட்யூஷன். உன் புருஷன்கிட்ட, தினமும் இனிமே ஒரு மணி நேரம் வீட்டுக்கு லேட்டாத்தான் வருவேன்'னு சொல்லிடு..." என்று தீர்க்கமாய்ச் சொன்னாள்.

சுலோசனா ஒரு மெட்ரிக்குலேஷன் பள்ளியில் ஆசிரியையாக வேலைக்குச் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு மாதமே ஆகி இருந்தது. பம்பாயில் ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில் நாலைந்து வருஷம் வேலைபார்த்துக் கைநிறைய சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவள், கணவன் சென்னைக்கு வர நேரிட்டதால் அந்த வேலையை விடும்படி ஆகிவிட்டது. இங்கே வந்த பின்னும் அவள் வேலைக்குப் போவது அவசியமாய் இருந்தது. புதிதாய் வாங்கிய Flat - க்காக ஒன்றரை லட்சம் வரை கணவன் தன் கம்பெனி மூலமாக சொஸைட்டியில் கடன் வாங்கியிருந்தான். மாதம் ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய் வரை வீட்டுக் கடனுக்காகக் கட்டவேண்டி இருந்தது. ஆகவே அதை ஈடுகட்ட சுலோசனா வேலை பார்த்தாக வேண்டிய கட்டாயம் வந்தது.

குழந்தையைப் பார்த்துக் கொள்கிற பிரச்சனையும் கண்ணம்மா கிடைத்ததின் மூலம் தீர்ந்து விட்டதால், பக்கத்திலேயே இருந்த ஒரு பெரிய இங்கிலீஷ் மீடியம் பள்ளிக்குக் கணித ஆசிரியை வேலைக்கு மனுப்போட்டாள். நிறையப் பள்ளிகளில் சம்பளம் படு கேவலமாக இருந்ததால் அவற்றில் சேர மனம் வரவில்லை. இந்தப் பள்ளி மட்டும் அரசாங்க சம்பளம் என்று விளம்பரம் செய்திருந்ததால் அவள் ஒத்துக் கொண்டு வேலைக்குச் சேர்ந்தாள்.

நாளைக்குத் தான் முதல் மாத சம்பளம் வாங்க வேண்டும். ஒரு முதுகலைப் பட்டதாரி ஆசிரியரின் அடிப்படை சம்பளம். அதற்குமேல் சமீபத்திய பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி இத்தியாதி எல்லாம் சேர்ந்து நாலாயிரத்துக்கு மேல் வரவேண்டும் என்று கணக்குப் போட்டு வைத்திருந்தாள். கடனுக்கான பிடித்தம் போக, கணவன் கொண்டுவருகிற மூவாயிரத்தைந்நூறோடு இதையும் போட்டால்தான், சற்றுத் தாராளமாகச் செலவு செய்ய முடியும். குழந்தைக்கு முணுக்கென்றால் உடம்புக்கு வந்துவிடுகிறது. இப்போதெல்லாம், குழந்தைக்கு மூக்கொழுகுகிறது என்று டாக்டரிடம் போனால் கூட முன்னூறு ரூபாய்க்கு மருந்து எழுதித் தருகிறார்கள்...

மறுநாள் பள்ளிக்கூடம் கிளம்புகிறபோது, இன்றைக்கு முதல் சம்பளத்தில் வாங்குகிற முதல் சாமான் கண்ணம்மாவுக்கு எழுத்தறிவிப்பதற்கான சிலேட்டும் அரிச்சுவடிப் புத்தகமுமாகத்தான் இருக்க

படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். அந்தப் பொருள்கள் விலையில் அற்பமானவையாக இருந்தாலும் அவற்றின் மூலம் சாதிக்கப்போகிற லட்சியம் எத்தனை அற்புதமானது என்று நினைத்தபோது மனசு முழுவதும் மகிழ்ச்சி பொங்கியது.

பஸ்ஸைப் பிடித்துப் பள்ளிவாயிலில் நுழைகிற போதும் சுலோசனாவின் மனம் லேசாகவே இருந்தது. வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போடுகிற போது, கூட வேலை பார்க்கிற கல்யாணி டீச்சர் குட்மார்னிங் சொன்னாள். "என்ன சுலோ... புடவை புதுடிஸைனா இருக்கே. எங்க வாங்கினீங்க.." என்று கேட்டாள். சுலோசனாவுக்கு எரிச்சல் வந்தது. பதில் சொல்லாமல் முகத்தில் புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டாள். இவள் இதுவரைக்கும் புடவை, நகை சமாசாரங்களைத் தவிர வேறு அகடமிக்காக எதையுமே அவளிடம் பேசிக் கேட்டதில்லை.

சுப்புலட்சுமி மிஸ் சுலோசனாவைப் பார்த்து முறுவலித்தாள். "இன்னிக்குத் தானே முதல் சம்பளம்! அப்படியே கொண்டு போயி ஆம்படையான் கிட்டக் கொடுத்துடாதே. சங்கரா ஹால்ல பூனம் சாரீஸ் எக்ஸிபிஷன் போட்டுருக்கான். எல்லாம் பாதி வெல. நறுக்குன்னு நாலு வாங்கிண்டு போ. வேணும்னா நானும் வரேன்..." என்று காதருகில் கிசுகிசுத்தாள். சுலோசனா, மறுபடியும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சிரித்து வைத்தாள்.

ஆரம்ப மணி அடிப்பதற்கு இன்னும் ஐந்து நிமிஷம் இருந்தது. அக்கவுண்டன்ட் மேஜையைச் சுற்றி சம்பளக் கவரை வாங்கிக் கொள்வதற்காக நிறையப் பெண்கள் நின்று கொண்டிருக்கவே, முதல் பீரியட் முடிந்து ஓய்வாக இருந்த இரண்டாம் பீரியடில் அக்கவுண்டன்டிடம் போனாள். அனேகமாக எல்லோருமே வாங்கிக்கொண்டு போய்விட்டனர்.

"என்னம்மா.. முதல் சம்பளம் வாங்கறீங்க. முதல் ஆளா வராமக் கடைசியா வர்றீங்களே. காசு விவகாரத்தை இல்ல முதல்ல முடிக்கணும்!" என்று சிரித்துக் கொண்டே அவளுடைய சம்பளக் கவரை எடுத்துக் கையில் கொடுத்தார் அக்கவுண்டன்ட்.

எதுவும் சொல்லாமல் சுலோசனா கவரைப் பிரித்துப் பணத்தை எண்ணத் தொடங்கினாள். பணத்தை எண்ணி முடித்தபோது சுலோசனாவின் முகத்தில் ஏமாற்றம் பரவி இருந்தது. மேஜை மீது விரித்துக்கிடந்த சம்பளப் பதிவேட்டில் அவளது பெயருக்கு நேராக, ரெவின்யூ ஸ்டாம்பிற்குப் பக்கத்தில் எழுதியிருந்த தொகையைப் பார்த்ததும் ஏமாற்றம் அதிர்ச்சியாக மாறியது. முகம் சட்டென்று சிவந்தது. "என்ன சார் இது, கவர்ல ரெண்டாயிரம் ரூபாதான் இருக்கு. ஆனா, லெட்ஜர்ல நாலாயிரத்து ஐந்நூறுன்னு எழுதியிருக்கீங்க..." குரலில் பதட்டம் வந்தது.

அக்கவுண்டன்ட் தலை குனிந்தபடி இருந்தார். "ஏம்மா, வேலைக்குச் சேர்ந்து ஒரு மாசம் ஆகுது. மத்த டீச்சர் யாரும் இதப்பத்தி உங்ககிட்ட எதுவுமே சொல்லலியா...?"

"எந்தெந்தக் கடையில புடவை, மேட்சிங் பிளவுஸ் எல்லாம் மலிவா வாங்கலாம்னு சொன்னாங்க... ஆனா நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலே. கவர்ல ஒரு அமவுன்டை வச்சிட்டு, ரிஜிஸ்டர்ல இன்னொரு அமவுன்டை எழுதிக் கையெழுத்துப் போடச் சொல்றீங்களே - அது என்ன விஷயம்னு கேட்டேன்..."

அக்கவுண்டன்ட் இப்போது அவளை நேருக்கு நேராகப் பார்த்தார். "இந்தப் பள்ளிக்கூடத்துல இதாம்மா வழக்கம். நெறைய பிரைவேட் பள்ளிக்கூடங்கள்ல இப்படித்தாம்மா நடக்குது. கையில ஒரு தொகை கொடுப்பாங்க. ரிஜிஸ்டர்ல இன்னொரு தொகை எழுதிப்பாங்க. அதெல்லாம் ஒரு அட்ஜஸ்ட்மெண்ட். ஆடிட்டிங்ல கவர்ன்மென்ட் சம்பளம் கொடுக்கறதாக் கணக்கு காட்டுவாங்க. மூணு வருஷத்துக்கு ஒரு தடவை ரெகக்னிஷனை ரினியூ பண்ண அப்ளை பண்றப்போ கவர்ன்மெண்ட் சம்பளம் கொடுக்கறதாக் காட்டணும்."

"ஆனா, விளம்பரத்துல கவர்ன்மெண்ட் சம்பளம்னு தானே போட்டுருந்தது? இன்டர்வியூவில கூட இதப்பத்தி ஒண்ணும் சொல்லலியே. நான் உங்க கரெஸ்பான்டெண்ட் கிட்டயே பேசிக்கறேன்..."

"கரெஸ்பான்டெண்ட் ஊருல இல்லம்மா. குடும்பத்தோட சிங்கப்பூர் டூர் போயிருக்காரு. வர்றதுக்குப் பத்து நாளாச்சும் ஆகும். நல்லா யோசிச்சு முடிவு பண்ணிக்குங்க. அவரு வந்தாலும் ஒண்ணும் ஆவப் போறதில்ல. நியாய அநியாயங்களப் பத்தி எல்லாம் இந்தக் காலத்துல யாரும்மா கவலைப்படறாங்க...?"

பீரியட் மணி அடித்துவிட்டது. சுலோசனா கோபமாக சம்பளக் கவரை மேஜை மீது போட்டாள். "அதெல்லாம் எனக்குத் தெரியாது

படிப்பகம்

www.padippakam.com

சார். டோன்ட் ட்ரீட் மி அஸ் இல்லிடரேட். இந்த ஃப்ராடுல எல்லாம் என்னால கையெழுத்துப் போட முடியாது'' என்று தீர்மானமாகச் சொன்னாள்.

அக்கவுண்டன்ட் வெலவெலத்துப் போனார். "என்ன டீச்சர், உங்களோட பெரிய வம்பாப் போச்சு.... ரொம்பக் கான்ஷியன்ஸியஸ் பர்சனா இருக்கீங்களே. ஒண்ணும் அவசரமில்லை. நிதானமாக யோசியுங்க. உங்க ஹஸ்பெண்டைக் கன்ஸல்ட் பண்ணுங்க. அப்பறமா ஒரு முடிவெடுங்க... இப்ப கிளாஷுக்குப் போங்க..." என்றபடி கவரை எடுத்து மேஜை டிராயருக்குள் வைத்துப் பூட்டிவிட்டு, அவளை நிமிர்ந்து பார்க்காமலேயே குனிந்து எதையோ எழுதத் தொடங்கினார்.

சுலோசனா கனத்த மனத்தோடு வகுப்புக்குப் போனாள். காலையில் வரும்போது அத்தனை லேசாக இருந்த மனசு அதற்குள் எப்படி இத்தனைக் கனமாயிற்று என்று நினைத்தாள். வகுப்பில் பாடம் நடத்துவதில் மனம் செல்லவில்லை. ஒரு சமன்பாட்டைக் கரும்பலகையில் எழுதி, இடதுபக்கம் வலது பக்கத்திற்குச் சமம் என்று நிருபிக்கச் சொல்லிவிட்டு நாற்காலியில் மௌனமாக உட்கார்ந்து கொண்டாள். லேசான சலசலப்போடு வகுப்பு சமன்பாட்டில் மூழ்கியது. சற்று நேரம் கழித்து, ஒரு மாணவன் மட்டும் நோட்டுப் புத்தகத்தோடு தயங்கித் தயங்கி அவளிடம் வந்தான்.

"என்ன ப்ரூஃப் பண்ணிட்டியா?'' என்று குரலில் சுரத்தில்லாமல் கேட்டாள் சுலோசனா.

அவன் சொன்னான். "எவ்வளவு தடவை ட்ரை பண்ணினாலும், ப்ரூஃப் கெடைக்கவே மாட்டேங்குது மிஸ். ஐ திங் தி ஈக்வேஷன் மே பீ ஃபால்ஸ்..."

சுலோசனாவுக்கு இப்போது அசாத்தியக் கோபம் வந்தது. பளார் என்று அவன் கன்னத்தில் அறைந்தாள். "ஹவ் டேரிங். டு டாக் லைக் திஸ்... ஈக்வேஷன்ஸ் நெவர் ஃபெயில் ... உனக்குப் போடத் தெரியலேன்னு சொல்லு...'' என்று கத்தினாள். வகுப்பே அவள் கோபத்தைக் கண்டு ஆடிப்போன மாதிரி இருந்தது. இந்த ஒரு மாதத்தில் அவள் அப்படிக் கோபப்பட்டு அவர்கள் பார்த்ததில்லை. ஆனாலும், 'இந்தப் பையன் ரொம்பவும் தான் அதிகப் பிரசங்கி. அவனுக்கு இது நன்றாக வேண்டும்' என்று வகுப்பில் நிறையப் பேர் நினைத்துக் கொண்டார்கள்.

மதிய உணவு இடைவேளையின் போது, சுலோசனா பள்ளிக்கு வெளியே வந்து எதிர்த்தாற் போலிருந்த ஒரு பப்ளிக் பூத்திலிருந்து தன் கணவன் ஆபிசுக்குப் போன் பண்ணினாள். அவன் தான் போனை எடுத்தான். இவள் படபடப்பு அடங்காத குரலில் எல்லாவற்றையும் விவரித்தாள். இப்போதைக்குத் தனக்கு மூன்று வழிகள்தான் இருப்பதாக அவனிடம் சொன்னாள். ஒன்று: தனக்கு நியாயமாய்ச் சேர வேண்டிய நாலாயிரத்து ஐந்நூறைத் தரும்படி நிர்வாகத்திடம் கேட்பது. இரண்டு: கையில் தருகிற உண்மையான தொகையையே ரிஜிஸ்டரிலும் எழுதச் சொல்லிப் பின் கையெழுத்திடுவது. மூன்று : இரண்டுமே சாத்தியம் இல்லை என்றால் வேலையை ராஜிநாமா செய்துவிடுவது...

சுலோசனாவின் புருஷன் அந்தப்புறம் ரொம்ப நிதானமாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டு சற்று நேரம் மௌனமாக இருந்தான். இவளுடைய படபடப்பு எதுவுமே அவனிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ''என்ன பதிலே பேச மாட்டேங்கறீங்க... இந்த மூணுல எதைச் செய்யலாம், சொல்லுங்க..." என்று சுலோசனா மறுபடியும் படபடத்தாள்.

அவன் அமைதியான குரலில் பேசினான். "லுக் சுலோ... இந்த மூணுமே நடக்கப் போறதில்லே. ஏன்னா, முதல் ரெண்டுக்கும் மானேஜ்மென்ட் நிச்சயம் ஒத்துக்காது. மூணாவதை உன்னால, இப்ப இருக்கற நெலைல செய்யமுடியாது. கொஞ்சம் நெனைச்சுப்பாரு. எனக்கு மாசம் சம்பளத்துல வீட்டுக் கடனுக்காக ரெண்டாயிரம் ரூபா போயிடுது. உன்னோட இந்த ரெண்டாயிரம் இருந்தா எவ்வளவு சௌகரியமா இருக்கும்னு யோசி. நம்ம கொழந்தையோட மெடிக்கல் பில் மட்டும் போன மாசம் எவ்வளவு ஆச்சுன்னு கொஞ்சம் ஞாபகப்படுத்திக்கோ... பை தி வே, டூ தவுஸண்ட் இஸ் நாட் தட் மச் ய பேட் சாலரி. யூ கான்ட் அஃபோர்ட் டு லூஸ் இட்... பேசாமக் கையெழுத்துப் போட்டுடு..."

சுலோசனா இன்னும் அதிக அதிர்ச்சிக்கு ஆளானாள். அடிவயிற்றில் ஏதோ சங்கடம் செய்தது. "பட் வி ஆர் நாட் அன்எஜுகேட்டட்... கண்ண மூடிட்டுக் கையெழுத்துப் போடறதுக்கு..." குரல் கம்மியது. தொண்டை கரகரத்தது. கண்ணில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. போனின் அந்தப் பக்கத்தில் அவன் குரலில் திடீரென்று ஒரு கண்டிப்பு தோன்றியது. ''பேசாம நான் சொன்னதை செய்யி..."

படிப்பகம்

www.padippakam.com

இவள் மீண்டும் ஏதோ சொல்வதற்குள் அவன் போனை வைத்துவிட்ட சப்தம் கேட்டது. சுலோசனாவுக்குப் பெரியதாய் அழுகை வந்தது. எல்லார் மீதும் கோபம் வந்தது. யதார்த்தங்களின் சன்னிதியில், தான் செயலிழந்து போவதை உணர்ந்து அவமானமாயும் இருந்தது. கைக்குட்டையை எடுத்து முகத்தில் வழிகிற வேர்வையைத் துடைக்கிற சாக்கில், கண்களில் ஊற்றாய்ப் பெருகும் நீரை யாரும் பார்த்துவிடாமல் ஜாக்கிரதையாய்த் துடைத்துக் கொண்டாள்.

அன்றுமாலை பள்ளி முடிந்து, வீடு திரும்புவதற்காக பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்கிறபோது அவள் யாரிடமும் பேசவில்லை. கைப்பையில் அந்த முழுமையற்ற சம்பளக் கவர் கூட கனக்கிற மாதிரித் தோன்றியது.

மனசில் என்னென்னமோ எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. வகுப்பில் அந்தப் பையன் அதிகப் பிரசங்கித்தனமாய்க் கேட்ட கேள்விக்கு அத்தனைக் கோபமாய் அவனை அறைந்திருக்க வேண்டாம் என்று தோன்றியது. அவன் அப்பாவித்தனமாய்க் கூட அப்படிக் கேட்டிருக்கலாம். ஆனால், ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட சமன்பாடுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய்ப்பதில்லை என்பது ஒரு பக்கம் இருக்க, நிரூபிக்கப்பட்டதாய் நாம் நினைத்துக் கொண்டிருக்கிற வேறு சில சமன்பாடுகள் பொய்யாகவும் போய்விடலாம்.

பஸ் ஸ்டாப்பிற்குப் போகிற வழியில்தான் நோட்டுப்புத்தகக் கடை இருந்தது. வாசலில் விதவிதமாய் சிலேட்டுகள் தொங்கிக் கொண்டிருந்தன. சிலேட்டைப் பார்த்தவுடன் கண்ணம்மாவிடம் தான் காலையில் கிளம்பும் போது கூறிவிட்டு வந்தது ஞாபகம் வந்தது. ஒரு நிமிஷம் நின்றவள், என்னவோ சட்டென்று உறுத்த, அவற்றை வாங்க மனசு இடம் கொடுக்காமல் பஸ்ஸ்டாப்பை நோக்கி சோர்வோடு நடக்கத் தொடங்கினாள்.

அவள் பஸ்ஸுக்காகக் காத்திருந்த அத்தனை நேரமும், வீட்டிற்குப் போனவுடனேயே எதிர்ப்படும் கண்ணம்மாவுக்கு என்ன பதில் சொல்வது என்பதைப் பற்றியே தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com

தலித்கலை - இலக்கியம் - அரசியல்

(324 பக்கங்கள் கொண்டது இந்நூல்)

விலை : ரூ. 65/-

தொகுப்பாசிரியர் : ரவிக்குமார்

வெளியீடு : தலித்கலை விழாக்குழு, நெய்வேலி - 1.

கிடைக்குமிடம் : விடியல் பதிப்பகம், 3, மாரியம்மன், கோயில் தெரு, கோயமுத்தூர் 641 015.

"எண்பது ஆண்டுகளுக்கு முன்பு (1916) அது நடந்தது. சாதியின் தோற்றுவாய் குறித்து புதிய விளக்கமொன்று முன்வைக்கப்பட்டது. அதுவரையிலும் செய்யப்பட்டிருந்த மேலைநாட்டுச் சிந்தனையாளர்களின் ஆய்வுகளிலிருந்த போதா மைகள் அம்பேத்கரால் சுட்டிக்காட்டப்பட்டன. 'வெளிநாட்டு அறிஞர்கள் சாதியை இளந்தென்றல் போன்று... மிக எளிமையாகக் கையாளுகின்றனர். அதற்கு முற்றிலும் மாறாக நாம் சாதியைத் தொடர்ந்து சுமப்பதென்பது நான் ஏற்கனவே விளக்கியுள்ளபடி இனிமேலும் இயலாத ஒன்றாகும். ஏனெனில் சாதியால் ஏற்படும் துன்பங்கள் மிகப் பேரளவின' என்றார் அம்பேத்கர்"

- இப்படி நூலின் தொடக்கமே சாதியினால் ஏற்படும் சமுதாயப் பின்னடைவை இடித்துரைக்கும் "நடுக்கடல் - தனிக்கப்பல்" என்ற தலைப்புக் கட்டுரையாக அமைந்துள்ளது. பெரியார் ஈ.வெ.ரா, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஆகியோரின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டுரைகள் உட்பட பல்வேறு எழுத்தாளர்களின் மொத்தம் 27 கட்டுரைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. அதாவது 27 சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு கோணத்தில் இன்றைய சமுதாயச் சீர்கேடுகளையும், தலித்களின் விடிவுக்கான வழிகாட்டுதல்களையும் பறைசாற்றுகின்றன.

ஒவ்வொரு கட்டுரையும் நிறைந்த மூலா தாரங்களை உள்ளடக்கியதாகவும், அன்றுதொட்டு இன்றுவரை சாதி எப்படி எப்படியெல்லாம் பல்வேறு தரப்பினரின் சுயநலத்திற்குகே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை

பார்வைகள்

தமிழ் எம். அழகு

இரண்டு கண்களில்
ஊசிமுனைப் பார்வைகள்
சதைப்பிடிப்புகளில் பதிந்து
மேலும் கீழும் மேய்கின்றன.

என் கண்களை பார்க்க
திராணியற்ற பொய் பார்வைகள்
என் உடம்பின் மீது புழுக்களாக
நெளிகின்றன.

ஏழை, பணக்கார,
இளைய, முதிய
கண்கள்
பெண்களை
வெறித்துப் பார்க்கின்றன.

நாக்கை தொங்கப் போட்டபடி
நாய்ப் பசியுடன்
ஓநாயின் கோரமான வெறிப்பிடிப்புடன்
என் கனவுகளை சுற்றி வருகின்றன.
கனத்த கானகத்தில்
இருளா ஒளியா
தெரியவில்லை;
இந்த பார்வையிலிருந்து
ஓய்வு இல்லை.

தெருவில்
பயணத்தில்
வகுப்பறையில்
என்னை துரத்துகின்றன.

இந்த நச்சுப்பற்கள்
என்னை கத்தியால் கிழிக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

தெளிவுறுத்துவதாகவும் அமைந்துள்ளன.

- "கானா" பாட்டு என்றால் என்ன?
- கிராமப்புற அடிமைத்தனம் என்றால் என்ன?
- தலித் உளவியல் என்பது என்ன?
- தலித் பிரச்சினையில் பெரியாரும் காந்தியாரும் செய்ததென்ன?
- தலித் மக்களும் தாசி மக்களும் ஒன்றா?

- என்பது போன்ற கேள்விக்கணைகளை எழுப்பி அதற்கான பதில்களும் அமைந்தவைகளாக ஒவ்வொரு கட்டுரையும் பரிணமிக்கின்றன.

இந்தியாவின் 22 மாநிலங்களிலும் தலித்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் விவரங்கள், குற்றச்சாட்டுக்கள், வழக்குகள் எண்ணிக்கையும் தொகுக்கப்பட்டு பட்டியலாக இடம்பெற்றுள்ளன.

தலித்கள் பிரச்சினை பற்றி விளக்கும் நூலாக மட்டுமில்லாமல் பொதுவாக ஒட்டுமொத்த சமுதாயக் கண்ணோட்டத்துடன் ஏராளமான ஆதாரக் குறிப்புக்களை அள்ளித்தந்து இளைய சமுதாயத்தை எழுச்சிபெறச் செய்யும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக இந்நூல் அமைந்துள்ளது.

- பகலவன் சேது

நான் பீதி அடைகிறேன்.

நான் பறந்து செல்ல
சூன்யத்தில் மறைய
ஆசை கொள்கிறேன்.

ஆனால் பூமி எனக்கும் சொந்தம்
நான் எதிர்த்துப் பார்க்கிறேன்
சூரிய கண்களால்

பார்வைக்கு பதில் பார்வை
என் யுத்தம் தொடர்கிறது, இப்போது.
கோழைப் பார்வைகள்
என் கண்களுக்குப் பயந்து
பாதாளத்திற்கு பாய்கின்றன.
பெண்ணின் கண்கள் மட்டுமின்றி
முழு உடம்பும் சிலிர்த்தெழும்
நாளை நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.

தோப்பில் முஹம்மது மீரானின்

"சாய்வு நாற்காலி"

தோப்பில் முஹம்மது மீரானின் நான்காவது நாவலிது.

விலை ரூ.80 பக்கம் 408
2, மேலரத வீதி, திருநெல்வேலி.

தென்பத்தன் கிராமத்தின்
இரண்டரை நூற்றாண்டுக் கால
வரலாற்று விளிம்பதைத் தொட்டு
நீண்டு நீள்கின்ற நீளும் நெடுங்கதையே
கனவாய், களங்கமாய், கற்பழிப்பு நிகழ்வுகளாய்
காரணவர் பதவியேற
பவுரீன்பிள்ளை - நூர்முகம்மது-முஸ்தபாக்கண்ணு
மரியம்பீவி-ஆசியாவும்மாள்-பெண்மைக்கே
துரோகமிழைத்து-பாத்தும்மா-சபியா-வேலம்மை, சைனபா,
மணமான பெண்கள்-விதவைகள், கவர்ச்சியான நடுத்தர
வயதுடையவர்கள் - இப்படி எத்தனை பெண்கள்
கதையாய் மாறும் காமமும் அதீதம் - பெயர் சூட்டி
கண்குத்தும் கொம்பசைவு, குழைகின்ற கொடியழகு
வம்புக்கிழுக்கின்ற வேளையில் - 'ஜின்' னாய்
மாய்மாலம் காட்டி, காரணவரை
சாய்வு நாற்காலி - ஈர்த்துக் கொள்ள - முக்காலமும்
சுழல்கிறது. அடிவானம் போல - சாத்திரம் குறி தப்பி வழிமாற
சரித்திர விளிம்பில் மேலேற
உப்பரிகையும் உல்லாசமும்... ஓர் சுழலில் சிக்குண்டு
சவ்தா மன்ஸில் - பொலிவிழக்க பல்பொருளும்
பதம் கெட்டழிய - காமதாகியாகி
கதை முழுதும் நீட்டி - தங்கைக்கும் - தாரத்துக்கும்
பெண்ணடிமைக்கும் - அதுபு பெரம்பு கொண்டு - மிரட்டித்திரியும்
முஸ்தபாக் கண்ணு கடைசியில் துட்பல்தெறிக்க

படிப்பகம்

www.padippakam.com

துடித்து துவண்டுவீழும் அவலமே
சாய்வு நாற்காலி!

என்னதான் முஸ்லீம் மக்களின் வாழ்வியல் முறையில் வட்டார வழக்கில் - பேசும் தமிழில் நாவல் விரிந்தாலும் கதை சொல்லும் ஒரே தீர்மானம் படர்ந்துள்ளதை உணரமுடிகிறது. நிறைய கதாபாத்திரங்களை சாமர்த்தியமாகவே கையாளுகிறார்.

"ஆடிக்குளிர் நல்கிய இன்பமயக்க சுகத்தில் உணர்ச்சி அடங்கி மரங்கள் புதுத்தளிர்களை, மொட்டுக்களை கர்ப்பம் தரித்தன. வெயில் முகம் காட்டவே இல்லை. கருமேக காட்டிற்குள் எங்கோ மறைந்து கொண்டிருக்கும் நக்ஸலைட் சூரியன்!"

"எங்கெல்லாமோ சுற்றித் திரியும் போக்கிரிக் காற்று. அது கடந்து போகும் வழிகளில் காட்டும் எத்துவாளித் தனங்களுக்கு கையும் கணக்குமில்லை".

"பட்டினியின் கூரிய நகங்களுக்கிடையில் கிடந்து ஜனம் நெளிந்தது"

"நரைத்த தாடியை நோக்கி சாய்ந்த சிகரெட்டுக் கறைபடிந்து கறுத்துப் போன உதட்டில் புன்னகையின் பிரேதம் தலை உயர்த்துவதாய் தோன்றியது".

"உதட்டில் புன்னகையின் பிரேதம் அழுகி நாற்றமெடுத்தது. மனம் பறந்து திரிந்த பூவனங்களில் பூக்களெல்லாம் நெட்டு அழுகி உதிர்ந்தன". "குளமும் புன்னை மரமும் ஆத்திப் புதர்களும் இருகல்புகளுக்கிடையில் சுவர் வளர்த்தின. நுரைத்துப் பதைத்த உணர்ச்சிகளின் வெப்பத் தீவிரத்தில் சுவர் சுக்கு நூறாகியது".

"குளத்தில் பாசி நிறைந்தது. தண்ணீர் கறுத்தது. கல்புகளுக்கு இடையில் காட்டுச் செடிகள் முளைத்தன. புன்னை இலை உதிர்ந்து குளத்திலிருந்து கெட்ட வாடை வீசியது. நீர் கோலிப் பாம்புகள் செத்து மலர்ந்தன, குளக்கரையில் உள்ள பொந்துகளில், புதர்களில் பாம்புகள் அடை கிடந்தன. எங்கும் பாம்பின் வீச்சம். வழியெங்கும் வெள்ளைத்துணி, பாம்புகள் கழற்றி வீசிய சட்டைகள்".

"ஆனி, ஆடி மழையில் அங்கு புற்களும் காட்டுச் செடிகளும் துளிர்த்து நின்றன. புல் முனைகளில் புட்டான்கள் துள்ளித்திரிந்தன. காற்றில் கரும்புல்லின் வாசனை, சங்கு புஷ்ப செடிகளில் வெள்ளைப் பூக்கள் விரிந்தன! பட்டுப்போகும் நிலையில் நின்றிருந்த பூவரசு தளிர்த்தது! மஞ்சள் பூக்கள் பூத்து நிற்கும் பழம் மூடு சீலாந்தி மரம். பல தித்திப்பு நினைவுகளை மனத்தில் கிளறிக் கொண்டு உயர்ந்து நிற்கிறது".

இப்படி சில சொற்பிரயோகங்கள் - உருவகங்கள் பிரமிக்கவைக்கின்றன. இவரது நாவலில் காமதாக உரை வீச்சுகள் அசாதாரணமாக சொல்லப்பட்டிருப்பது படிப்பவர்களை மயக்கத்தில் ஆழ்த்தும் லாகிரிகள்!

"கஸவு தட்டத்தால் முலைக்கச்சை கட்டியிருந்தாள். வட்டக் கொண்டையில் பூச்சூடி, நெற்றியில் சந்தனக்குறி போட்டிருந்தாள். மனத்தைக் கழற்றிக் கிறங்க வைக்கும் அதி அழகு! கொட்டினால் இரத்தம் கொட்டும் கது கதுப்பான மேனி!"

"உருண்டு திரண்டிருந்த பிருஷ்டம் தாளச்சீரில் அசைந்தது. துறவிகளைக் கூட வெறியூட்டவைக்கும் நடை!"

"இரத்த திளைப்புள்ள உடல். கொழுத்து உருண்ட முலை மொட்டுக்கள் கூரியதாக காணப்பட்டன. அவளுடைய மூக்கு நுனி சிவந்திருந்தது. உதட்டிலிருந்து ஊறிய ஏதோ திராவகத்தின் ஈரத்தில் உதடும் சிவந்திருந்தது. கருமை விழிகளில் காமதாகம் முற்றியிருந்தன. அவள் உதடுகள் எதற்காகவோ விதும்பிக் கொண்டிந்தன".

"மனக் கட்டுகள் உலைந்த ஒரு பலவீன நிமிடங்களில் சங்கிலியை இழுத்து அறுத்துக் கொண்டு இணை தேடி ஓடிய போதிலும் மனித இயல்பான உணர்ச்சி நரம்புகளில் காய்ந்து கருகிப் போனதால் அந்த இணையைக் கண்டு மிரண்டோடி அகலும் மற்ற இணை!"

"அவளுடைய உருண்டு திரண்ட குசங்கள், கதுகதுப்புக் கன்னத்துடம், காந்த ஈர்ப்புக் கண்முனை, சேலைக்குள் நெருங்கித் திணறிய துடைகள், பேற்றுக் கோடுகள் இல்லாத வழுவழுப்பு வயிறு - அவளை அப்படியே கட்டி அணைத்து இறுக்கி, மிருது எலும்புகளை நெருநெரா ஒடிக்க வேண்டும் போலிருந்தது!"

"மீனாட்சியின் கொண்டையிலிருந்து சாமந்திப்பூ வாசம் வீசியது. மாராப்பு கட்டியிருந்த நேரியலில் மடிப்பு கசங்கவில்லை. புது மாராப்பைத் துளைத்துக் கொண்டு தூக்குவிளக்கின் வெளிச்சத்தைக் காண்பதற்கு வெளியே குதிக்கத் துடிக்கும் கொழுமையான முலை முனைகள். ஜரிகை வேட்டிக்குள் தப்புக்கொட்டும் பின் கதுப்பு. வெற்றிலைச் செவ்விதழில் மலர்ந்த வசீகரமான பூ புன்சிரிப்பு.

படிப்பகம்

www.padippakam.com

தழை தழைத்த முலைகளைப் பார்த்தார். நிர்வாண மாமிச தோள்பட்டையின் வடிவையும் மினுமினுப்பையும் கண்ணால் துளாவினார்".

இந்நாவலின் பொது அமைப்பில் அராபிய 1001 இரவு கதை போல - ஜின்களின் - அதீத கற்பனையும், பெயர் சூட்டலில் 'அப்பா' வின் வருகையும் - அந்துருஷாவிற்கு பணம் வந்த விதமும் - நாட்டுப்புற - செவிவழி கதைகளை - நாவலில் புகுத்தி பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எழுத்தில் காட்டி - (அதனால் அவர்களுக்கு எந்த தீர்வுக்கும் வழிவகை செய்யவோ எழுச்சிபூட்டவோ.... பயன்படாத எழுத்து) முஸ்தபாக் கண்ணுவின் - பாத்திரபடைப்பில், மட்டுமே - கதையை நகர்த்தி "சாய்வு நாற்காலி" சாதிப்பதென்ன?

க்ருஷி சொல்கிறார் : நூற்றாண்டுக்கால தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றுப் பாதையைப் புதிய திசைக்கு நகர்த்துகிறதாம்.

எனக்கென்ன - இந்நாவல் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாதையைப் புதிய திசைக்கு நகர்த்தவும் இல்லை - "புஷ்பா தங்கதுரையின் பழைய நாவல்களை - சிவப்பு விளக்கு கதைகளையே" - வட்டார வழக்கில் - முஸ்லீம் மாந்தர்களின் பேச்சுத் தமிழில் - (மலையாளத்தில் எண்ணி - தமிழ்ப் படுத்தி) வழங்கப்பட்ட மலிவு சரக்காகத்தான் தோன்றுகிறது.

வியக்கும்படியான பல மாற்றங்கள் இன்றைய தமிழ் வாசகர்களிடையே காணப்படுகின்றன. அவர்களுக்கு "தீனி போட" (அறிவுப்பசிக்கு) எழுத்தாளனின் கிட்டங்கிக் கையிருப்பு போதுமானதல்ல. (தசைநுகர் அவாவுக்கா) பசியாறாத அவர்களுடைய பசித் தளர்ச்சியை இது கொஞ்சமேனும் தணிக்குமானால் செய்த பணி மனப்பூரிப்பைத் தரும்'' என நாவலாசிரியர் எதிர்பார்ப்பது விந்தையாக உள்ளது. ஒரு ஜெயகாந்தனோ, கு. சின்னப்பாரதியோ, தி. ஜானகிராமனோ, லா.ச.ரா.வோ, நீல பத்மநாபனோ, பிரபஞ்சனோ, பொன்னீலனோ, புதிய திசைக்கு மாற்றதா இலக்கிய வரலாற்றுப் பாதையா இது!

"இலக்கியம் லாபம் தரலாம். லாபம் மட்டுமே தரக்கூடாது. இன்று சிருஷ்டி செய்ய முற்படுபவர்களுக்கு இலக்கியம் அமைதி காண உதவ வேண்டும். அதில்லாவிட்டால் அந்த இலக்கியம் செத்த இலக்கியமே ஆகும்'' என்ற க.நா.சுவின் வரிகள்தான் நினைவிற்கு வருகிறது.

கோவி. பரஞ்ஜோதி
ஆற்காடு.

மல்லிகை முகங்கள்

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

விலை ரூ.60

வெளியீடு : மல்லிகைப் பந்தல்
234, ஆ, காங்கேசன் துறைவீதி
யாழ்ப்பாணம்,
ஜனவரி '96.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் 'மல்லிகை' சஞ்சிகைக்கும் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கும் முக்கிய இடமுண்டு.

முற்போக்கு இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்று வளர்ப்பவர் டொமினிக் ஜீவா. அவரின் பணிகளுக்குத் தளமாக அமைந்த 'மல்லிகை' முப்பது ஆண்டுகளாக வெளிவருவதே மிகப்பெரிய சாதனை.

மல்லிகை இதழ்களில் படைப்பாளிகள், கலைஞர், சாதனையாளர் என்று பலர், அட்டைப்படங்களுடனான கட்டுரைக் குறிப்புக்கள் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் '35 மூத்த சாதனையாளர்களை ஒழுங்கு சேர்த்து' "அட்டைப்பட ஓவியங்கள்" என்ற பெயரில் ஒரு நூல் 1985-ல் வெளிவந்தது. 'மல்லிகை முகங்கள்' என்ற இந்நூல் 65 பேரைப் பற்றிய குறிப்புகளைத் தாங்கி இப்பொழுது வெளிவந்துள்ளது.

இந்நூலில் காணும் பெருமக்கள் சிறுகதை, நாவல், நாடகம், இலக்கியம், இசை, கவிதை, ஆசிரியத் தொழில், சமயம் என்று பலதுறைகளில் பணிபுரிந்து தம் திறமையை வெளிப்படுத்தியவர்கள். இவர்களில் சிலர் இப்பொழுது எம்முடன் இல்லை. இந்நூல் மூலம் ஈழத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சியையும் அறிய முடிகிறது.

ஈழத்துச் சாதனையாளர், படைப்பாளிகள் பலர் இந்நூலில் இடம்பெறவில்லை. எல்லோரையும் இத்தகைய ஒரு நூலில் அறிமுகப் படுத்துவதென்பது இயலாததொன்று. மல்லிகைக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்புள்ளவர் பற்றிய, தொடர்புள்ளவரால் எழுதப்பட்ட, கட்டுரைகளே இதிலுள்ளவை. ஈழத்தின் பங்களிப்பை பொதுவாக எல்லாத் தமிழரும், குறிப்பாக ஈழத்துக்கு வெளியே உள்ளவரும் அறிந்துகொள்ள இந்நூல் ஓரளவு உதவுகிறது. இந்த வகையில் இதனை வெளியிட்ட ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை வளர்ச்சிக்கு ஈழத்தில் வித்திட்ட மும்மூர்த்திகளென்று 'இலங்கையர்கோன்', சி.வைத்தி லிங்கம், சம்பந்தன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இந்நூலின் முதற்கட்டுரை சம்பந்தன் பற்றியது. சிறந்த எழுத்தாளரான செங்கை ஆழியான் எழுதியது. சம்பந்தன் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். மூதறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடம் பாடம் கேட்டவர்; காந்தியவாதி; மரபு போற்றுபவர்; புதுமையை விரும்புவர். இத்தகைய பல்வேறு ஆளுமைக் கூறுகள் கொண்ட அவரின் நோக்கு முழுமையானது. அவரின் படைப்புக்கள் சிறந்து மிளிர்ந்தன. "அவரின் சிறுகதைகளைப் படித்து முடிந்ததும் எஞ்சி நிற்கின்ற உணர்வுகள் அற்புதமான அனுபவங்கள் என நான் கருதுகிறேன்" என்ற செங்கை ஆழியான் வார்த்தை சம்பந்தன் கதைகளைப் படித்தவர்களால் மறுக்கமுடியாததொன்று.

ஈழத்தின் இன்னொரு பெரும் எழுத்தாளர் வ.சு. இராசரத்தினம் குறித்து டொமினிக் ஜீவா அவர்களே எழுதியுள்ளார். "மல்லிகையின் அடிப்படைக் கருத்துக்களுக்கு எதிராக உள்ளவர்களைக்கூட மல்லிகை காலாகாலத்தில் அன்னாரது தகைமைகளைப் பாராட்டி வந்துள்ளது'' என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது.

முற்போக்குச் சிந்தனையாளர் என்று தம்மைக் கருதுபவர் பலருக்கு, முரண்பட்ட கொள்கையுடையவரை ஒதுக்குவதும், அவரின் படைப்புக்களை இருட்டடிப்புச் செய்வதும் இயல்பானதொன்று. இதனாலேயே இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பலர் சாடினார்கள். சிறந்த எழுத்தாளரான எஸ். பொன்னுத்துரை (எஸ்.பொ) பல்கலைக்கழகப் பேராசிரியரான கலாநிதிகள் (முனைவர்கள்) இருவரைக் 'கல்லாநதிகள்' என்று கிண்டல் செய்ய நேரிட்டதும் இதனால்தான். ('கணையாழி' ஏப்ரல் '96 இதழில் எம்.எஸ். ராகுலதாசன் எழுதிய 'ஈழத்துச் சிறுகதைகளும் வரலாற்று முரண்பாடுகளும்' என்ற கட்டுரையையும் பார்க்க). மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா இத்தகையவரிடமிருந்து சிறிது மாறுபட்டவர். அவரின் எழுத்துக்களில் சமுதாயத்தின் அடிமட்டத்திலிருப்பவரைத் தூக்கிவிடும் வேட்கையும் ஒருவித நேர்மையும் இருக்கும். இதனாலேயே மாறுபட்ட கொள்கைகள் கொண்டோரையும் மல்லிகைமூலம் அறிமுகம் செய்ய அவரால் முடிகிறது.

பழம்பெரும் நாடக நடிகர் கலையரசு சொர்ணலிங்கமும் தற்கால நாடகத்துறையில் புதுப்புது உத்திகளைக் கையாளும் குழந்தை சண்முகலிங்கம், தாசீஸியர் போன்றவரும் இந்நூலில் வருகின்றனர். அவர்கள் மூலம் ஈழத்து நாடகத் துறையின் வளர்ச்சியைக் காணமுடிகிறது.

ஈழம், பல சிறந்த கவிஞர்களை உருவாக்கியுள்ளது. இவர்கள் குறித்த கட்டுரைகள் ஈழத்துக் கவிஞர் பாரம்பரியத்தை உணர்த்துகின்றன.

கலைஞர் பலர் ஈழத்துக்கு வெளியேயும், தமிழ்நாட்டிலும், தம் முத்திரையைப் பதித்துள்ளனர். இவர்களில் முக்கியமான ஒருவர் நாதஸ்வர இசைமேதை என்.கே.பத்மநாதன். இவர் 'மரபு' வழியில் குருகுல முறையில் இசைபயின்று அதன் எல்லைகளைத் தொட்டு நின்றவர். 'பொறுமையோடு மரபு வழியே ஆழமான அத்திவாரமிட்டுக் கொண்டதால்தான் திரு.என்.கே. பத்மநாதன் போன்றவர்களால் இசைத்துறையில் கோபுரமாய் வளர்ந்துகொண்டே போக முடிகிறது' என்ற கட்டுரையாசிரியரின் வார்த்தைகள் அர்த்தமுள்ளவை; இளந்தலைமுறையினர் சிந்திக்க வேண்டியவை.

இந்நூலில் ஓவியர்கள், தேர் செய்யும் விற்பன்னர்கள் என்று பலரையும் காணலாம். முற்போக்குச் சிந்தனையாளர் பொதுவாக அணுகவிரும்பாத ஒரு துறை சமயம். இந்தத் துறையிலே தன் வாழ்நாளைக் கழிக்கும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொல்வன்மையையும் சமயப்பணிகளையும் இந்நூலில் பார்க்க முடிகிறது.

பள்ளிக்கூட ஆசிரியரும் பல்கலைக்கழகப் பேராசிரியருங்கூட இந்நூலில் இடம் பெறுகின்றனர். பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் "தமிழ் இலக்கிய வரலாறு", "தமிழ் உரைநடை வரலாறு" ஆகியவை சிறந்த ஆராய்ச்சி நூல்கள். பேராசிரியர் நா. சுப்பிரமணியம் சிறந்த நடுநிலை ஆய்வாளர். "ஈழத்தமிழ் நாவல் இலக்கியம்" என்ற சிறந்த நூலை எழுதியவர். "இந்தியச் சிந்தனை மரபு" என்ற தலைப்பில் அவர், தம் மனைவி கௌசல்யாவுடன் இணைந்து எழுதிய நூல் இலங்கை அரிசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. தமிழகத்தில் பாராட்டப்பட்டது. இவர்கள் போன்ற பெருமக்கள் பற்றிய கட்டுரைகள் அறிவியல் உலகுக்கும் தமிழுக்கும் ஈழத்தமிழர் ஆற்றும் பங்களிப்பை உணர்த்துகின்றன.

பரந்துபட்ட துறைகளில் பணிபுரிந்து பங்களிப்புச் செய்த பல ஈழத்துப் பெருமக்களை அறிவதற்கு 'மல்லிகை முகங்கள்' ஒரு முன்னோடி நூலாக அமைந்துள்ளது.

- க. கணேசலிங்கம்

சென்னை - 90.

படிப்பகம்

www.padippakam.com

மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கணையாழியின் இந்த இதழ் (ஆகஸ்ட் 67) இரண்டாவது ஆண்டுமலராக வெளியாகியது. இனி இதழ் தோறும் பிரபல எழுத்தாளர்களின் கதை ஒன்றைத் தொடர்ந்து வெளியிட இருப்பதாகவும், இதழ்பற்றிய அபிப்பிராயங்களை வாசகர்களிடமிருந்து கட்டுரை வடிவில் வரவேற்பதாகவும், சிறந்த கட்டுரைக்கு சன்மானமாக ரூ.10 வழங்கப்படும் என்றும் ஆசிரியர் தெரிவித்திருந்தார். பரிசுத் தொகை குறைவுதான் என்றாலும், அப்போதைய கணையாழியின் பொருளாதார நிலைக்கு அது அதிகம் என்பதோடு, ஆரம்பத்திலிருந்தே இப்படி தரமான விமர்சனங்கள், விவாதங்கள், கடிதங்கள் ஆகியவற்றை ஆசிரியர் ஊக்குவித்து வந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

இந்த இதழ் முதல் கணையாழி, பொறுப்பாசிரியர் ஐ.தியாகராஜன் (அ.மி) அவர்களது பொறுப்பில் - சென்னையில் தீபம் அச்சகத்தில் அச்சாகி டில்லிக்கு அனுப்பப்பட்டு வினியோகம் ஆகியிருக்கிறது. அட்டையிலும், மூன்றாம் ஆண்டிலிருந்து சிறுபத்திரிகைகளின் அடையாளமான படங்கள், ஓவியங்கள் இல்லாமல், உள்ளடக்கத்தைப் பிரசுரிப்பது - 4,5 இதழ்கள் வரை தொடர்கிறது.

23

கணையாழியின் பரிணாம வளர்ச்சி

- வே.சபாநாயகம்

கவிதைக்கு, டில்லி சாலை இளந்திரையனை விட்டால் ஆளில்லை என்று நினைக்கிறபடி, அவரது மரபுக்கவிதைகளே அநேகமாக எல்லா இதழ்களிலும் வெளியாகி வந்துள்ளன.

புதுக்கவிதைகளோ, சோதனை முயற்சிகளோ இன்னும் கணையாழியில் தலைகாட்டவில்லை.

கணையாழியின் சிறப்பம்சங்களில் ஒன்றான விவாதமேடை பிரச்சினைக்குரிய கலை விமர்சகர் திரு. சுப்புடு அவர்களால் இந்த இதழ் முதல் தொடங்கப்பட்டிருக்கிறது. 'சென்னையில் நாடகக்கலை சீரழிவதேன்!' என்ற தலைப்பில் சுப்புடு வங்க நாடகங்களை உதாரணம் காட்டி விவாதித்து இருந்தார்.

'தீபத்'தில் பட்டிமன்றம் என்று க.நா.சுப்ரமண்யம் அவர்களும் கு.அழகிரிசாமியும் தொடங்கி வைத்த விவாதம் நடக்கிறது. தமிழ்ச் சிறுகதை பற்றி இந்த விவாதம். சுப்ரமண்யம் அவர்கள் ஒரேயடியாக 'மினி ஸ்கர்ட்' போல் நல்ல எழுத்தாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டார். அழகிரிசாமி ஜானகிராமனை அதன் விவாத மதிப்பிற்காகப் புறக்கணித்துவிட்டார். இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் மற்ற எழுத்தாளர்களுக்கு முதல் வெறுப்பு லிஸ்டில் தத்தம் பெயர்கள் இல்லாதது. கு.ப. ராஜகோபாலன் (அ.ஆ. சாந்தி அடைவதாக) எல்லோரும் குடல் ஆபரேஷன் பண்ணுகிறார்கள். செக்ஸ், ஃப்ராய்ட் அது இது என்று. (அவருடைய பண்ணைச் செங்கான் என்ற கதை இந்த அலசல்களுக்கு எல்லாம் அகப்படுமா?) ஒரு விசேஷம், விவாதத்தில் ஒருத்தராவது சிறுகதைகளின் பெயரைக் குறிப்பிடுவதில்லை. இதில் நாலு அதில் இரண்டு என்று பட்டாஸ் விளம்பரம் பண்ணுகிறார்கள். சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் புன்சிரிப்புடன் ஓரத்திலிருந்து சிறுவர்கள் சண்டையைப் போல் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

- சுஜாதா.

படிப்பகம்

www.padippakam.com

'வளரும் தமிழ்' பகுதியில் இ.பா, ஆனந்தவிகடன்; குமுதம், கல்கி, தாமரை, இதழ்களில் அவ்வப்போது வெளியான முத்திரைக் கதைகள், சிறப்புக் கதைகளை இனங்காட்டிப் பாராட்டியிருந்தார்.

இபா.வின், 'புலிவேட்டை', நமுத்துசாமியின் 'செம்பனார் கோயில் போவது எப்படி?', லாசராவின் தலைப்பில்லாத கதை ஆகிய சிறுகதைகள் இந்த ஆண்டுமலருக்குச் சிறப்புச் சேர்த்திருக்கின்றன.

இஸ்ரேலின் இரும்புமனிதன் ஒற்றைக்கண் 'மோஷேதயன்' பற்றி சுவராஸ்யமான தகவல்கள் கொண்ட கட்டுரை ஒன்றை லா.சு.ர எழுதி இருந்தார்.

'குறைவற்ற செல்வம்' என்ற தலைப்பில் ஆயுர்வேத மருத்துவர் ஸ்ரீஹரி, வாசகர்களின் ஐயங்களுக்கு இந்த இதழ் முதல் விளக்கமளித்து வந்ததுடன் 'குயிலி' என்ற தொடர்கதையையும் எழுதத் தொடங்கி இருந்தார்.

இடையில் சில மாதங்களாகக் காணாமல் போயிருந்த ஸ்ரீரங்கம் எஸ்.ஆர். (சுஜாதா) இந்த இதழ் முதல் மறுபிறவி எடுத்து, 'கடைசிப் பக்கத்தில்' எழுதத் தொடங்கினார்.

தீபம் இதழில் 'தமிழ்ச் சிறுகதைகள்' பற்றி நடந்த ஒரு விவாதத்தைப் பற்றி அதில் சுஜாதா அலசி இருந்தார். 'கடைசிப் பக்கம்' என்கிற அவரது இந்தப்பகுதி பல ஆண்டுகள் சமீபகாலம் வரை, தொடர்ந்து வெளியாகி வந்ததுடன் 'கடைசிப் பக்கம்' என்ற தலைப்பில் தொகுப்பாகவும் பின்னர் வெளியாயிற்று.

இந்தப் பக்கத்தில் நான் மறுபிறவி எடுத்திருக்கிறேன். உங்கள் ஞாபக சக்தி சுமாராக இருந்தால் நான் சில இதழ்களுக்கு முன் வரை 'நீர்க்குமிழிகள்' எழுதிக் கொண்டிருந்தது நினைவிருக்கும். அந்தப் பகுதி இயல்பாகவே நின்றுவிட்டது. அதை எழுதினவிதம் அப்படி. எழுதலாம்; எழுதிக்கொண்டே இருக்கலாம். நிறுத்திவிடலாம். நிறுத்தின பின் கொஞ்சம் ஆக்ஸிஜன் கொடுத்து மீண்டும் தொடங்கலாம். அந்தத் தொடக்கம் இது. தலைப்பு மாறிவிட்டது. (பெண்கள் இதைப் புரிந்து கொள்வார்கள்). மேலும் திரும்பத் திரும்ப எம்.ஜி.எம். சிங்கத்தைப் போல் இரண்டு தடவை கர்ஜித்துவிட்டு அன்றைய ஆட்டுக் குட்டியைச் சேகரித்துக்கொண்டு போகும் பணி எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் நின்றேன்.

மறுபடி தொடங்கும்போது எழும் கேள்வி இது. பழையபடி இந்த வர்ணத்தில் கொஞ்சம், அந்த வர்ணத்தில் கொஞ்சம் என்று ஈஸ்ட்மன் கலரில் ஆரம்பிக்கவா இல்லை 'ப்ளாக் அண்ட் வைட்'டில் எழுதவா. இப்பொழுது இந்த செகண்ட் வரை இந்த 'ரை' யன்னாவை எழுதும் வரை எனக்குத் தெரியவில்லை.

'கடைசிப் பக்கத்' தில் சுஜாதா

வங்கத்தைப் பாருங்கள்!

பிறக்கப் போகும் குழந்தைக்கு மேஜோடு பின்னுகிறாள், ஊசியும் கையுமாய்.

யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் வெட்கம் கலந்த பார்வை.

எதிரே பெரிய அளவில் வரையப்பட்டிருக்கும் காலண்டர்.

பத்துப் பின்னல்களுக்கு ஒருமுறை எழுந்து சென்று குழந்தையின் பக்கத்தில் வைத்து அளவு சரியா என்று பார்க்கிறாள்.

ஒரு வசனம் கிடையாது.

பின்னணி சங்கீதமும்-மூச்! இதையே நமது நிபுணர்கள் கையாண்டிருந்தால் எவ்வளவு விரஸமாக இருந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடிகிறது. ஸாம்பிள் கீழே.

மருமகளை 'மலடி' என்று குற்றஞ்சாட்டும் மாமியார், மருமகள் ஸம்பாஷணை-7 நிமிஷம்.

தான் 'மலடி' என்று மாய்ந்து பெருமூச்செறிந்து உரத்த பின்னணி சங்கீதத்துடன் பாடும் ரம்பதாஸன் பாட்டு - ஸாம்பிள் (10 நிமிஷம்)

"கருத்தரிக்கா வயிறை

அறுத்தெறிய வேண்டாமோ?

பருத்திருந்தால் போதுமா

நிறுத்து மனமே நிறுத்து?"

இதை அவளே பாடலாம். அல்லது ஒரு பிச்சைக்காரன் பாடலாம்.

நாஸுக்குக்கு இடமே கிடையாது ஐயா! எல்லாம் அப்பட்டமாய் பச்சையாய் சொல்லிவிட வேண்டியது தான்.

- விவாத மேடையில் 'சுப்புடு'

படிப்பகம்

www.padippakam.com

தியாகு

மார்க்ஸின் தூரிகை

மாணவப் பருவம் - இளம் உள்ளங்கள் இறக்கை கட்டிக் கொண்டு கனவுகளின் வான வெளியில் சஞ்சரிக்கிற காலம்! காதல் கனவுகளாகவும் இருக்கலாம், இலட்சியக் கனவுகளாகவும் இருக்கலாம். மார்க்சுக்கு இரண்டுமே.

உயிர் போனால் மற்றவர்களுக்கு சோகம், தனக்கு ஒன்றுமில்லை. மாணவப் பருவம் முடிந்து போவது அதற்கீடான சோகம் - தனக்கு! மார்க்சுக்கும் அப்படித்தான் இருந்ததோ, அறிவுக் கோயிலின் பிராகாரங்களை இன்னுங் கொஞ்ச காலம் சுற்றி வரவே ஆசைப்பட்டார். மாணவராக இல்லையென்றால் ஆசிரியராக.

பெர்லினிலிருந்து முனைவர் பட்டத்தோடு ஊர் (டிரியர்) திரும்பிய கார்ல் மார்க்ஸ் அங்கிருந்து பான் சென்று பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக விரும்பினார். இந்த விருப்பத்தை அவரிடம் வளர்த்தவர் இளம் ஹெகலிய நண்பரும், பான் பல்கலைக் கழகத்தில் பேராசிரியருமான புருனோ போயர்.

கார்ல் வந்துவிட்டால், இறையியலார் மீது தத்துவத் தாக்குதல் தொடுப்பதிலும் 'நாத்திகச் சுவடிகள்' ஏட்டை வெளியிடுவதிலும் உற்ற துணை வாய்க்கும் என்று நம்பிக் காத்திருந்த போயர் 1842 தொடக்கத்தில் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். விரிவுரையாளராகும் ஆசை மார்க்சுக்கும் விட்டுப்போனது.

அடுத்த சில மாதங்களில் கார்ல் மார்க்ஸ் ஏட்டுலகில் முதலடி எடுத்துவைத்தார். 1842 பிப்ரவரியில் பிரஷ்ய அரசின் ஏட்டுத் தணிக்கை விதிகளைக் கண்டித்து ஒரு கட்டுரை எழுதினார். தணிக்கை அதிகாரிகள் அனுமதிக்காததால் இந்தக் கட்டுரை அப்போது வெளிவரவில்லை. ஓராண்டு கழித்து சுவிட்சர்லாந்தில் வெளியிடப்பெற்ற தொகுப்பில் - தணிக்கையாளரின் கோபத்துக்கு ஆளான வேறு பலரின் கட்டுரைகளோடு - மார்க்ஸின் கட்டுரையும் இடம்பெற்றது.

புதிய ஒருவர் ஆள்வதற்கு அரியணை ஏறும்போதெல்லாம் பளபளப்பாய்த் தெரிவதும், ஆளப்படுவோர் மலைப்புடனும் மனம் நிறைய நம்பிக்கைகளுடனும் கண்கூசி நிற்பதும் இன்று நேற்றல்ல, தொன்றுதொட்டு நிகழ்வது தான். 1840 கோடையில் பிரஷ்ய நாட்டின் புதிய மன்னராக நான்காம் பிரெடெரிக் வில்ஹெல்ம் முடிசூடிய போது, கட்டுகள் அவிழ்க்கப்படாவிட்டாலும் தளர்த்தப்படும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியது. சனநாயக உரிமைகள் வழங்கும்படியான ஓர் அரசமைப்பேகூட எதிர்பார்க்கப்பட்டது. மன்னரும் கூட வாய்வீச்சிலும் வசனப் பேச்சிலும் வல்லவர்தான். இன்சொல்லின் பட்டுத் திரை மறைவில் முடியரசின் அதிகாரத்தையும் கிறித்துவத் திருச்சபையின் அதிகாரத்தையும் வலுப்படுத்திக் கொண்டார்.

உரிமைவாதிகள் பலரும் மன்னரின் பேச்சில் மயங்கிக் கிடந்த போது, அந்தப் பேச்சின் வல்லாண்மை உட்பொருளை வெளிப்படுத்திக் காட்ட இளம் மார்க்சால் முடிந்தது.

"நான் உங்கள் வீட்டுப் பிள்ளை" என்பது முடியரசுக் கால வசனம். "நீங்கள் என் பிள்ளைகள்" என்பது குடியரசுக் கால வசனம். சில நேரம் வசனங்கள் காலம் மாறுவதும் உண்டுதான்! வில்ஹெல்ம், ஜெர்மானிய மக்களைத் தன் பிள்ளைகள் என்றார். பக்குவப்படாத பிள்ளைகள், முதிர்ச்சியுறாத குழந்தைகள்! பிரம்புக் குச்சியும் இஞ்சி ரொட்டியும் கொண்டு பழக்கிப் பயிற்றுவிக்க வேண்டிய சிறார்!

பிரம்பு யாருக்கு? துணிந்து சமயத்தை எதிர்த்துப் பேசி வந்த இளம் ஹெகலியர்களுக்கு! தத்துவ ஞான விவாதம் என்ற மெல்லிய

படிப்பகம்

www.padippakam.com

பூச்சிட்டு முடியரசுக்கு எதிர்ப் பானவற்றை வளர்த்து வந்தவர்களுக்கு! அவர்களில் முக்கியமானவர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள். புருனோ போயரும் இப்படித் தான் நீக்கப்பட்டார்.

'அமைப்பு வழிப்பட்ட முடியாட்சி' குறித்து இளம் ஹெகலியர்களுக்கு மிச்சமிருந்த பிரமைகளும் கலைந்து போய் இடதுசாரிகளின் அணி வலுத்தது. இடதுசாரிகளை இடதுசாரிகளே வளர்ப்பதை விடவும் வலதுசாரிகள் வளர்த்து விடுவதுதானே வாடிக்கை!

கருத்துக்களின் வெப்பம் தாளாமல் கருத்துரிமையை நசுக்க முற்பட்டது அரசு. இதன் முக்கியக் கூறாக ஏட்டுரிமையைக் கட்டுப்படுத்தத் தணிக்கை விதிகளைக் கடுமை யாக்கியது. இதற்கெதி ராகத்தான் மார்க்ஸின் முதல் ஏட்டுப் படைப்பு (மேலே குறிப்பிட்ட கட்டுரை) பிறந்தது.

ஏட்டுரிமை என்பது பொதுவான அரசியல் உரிமைகளும் குறிமுள் என்று இளம் மார்க்ஸ் கருதினார் :

"ஏட்டுரிமை இல்லாத போது ஏனைய எல்லா உரிமைகளும் கானல் நீராகிப் போகின்றன."

1842 மார்ச்சில் ரைனிஷ் ஜைட்டங் ஏட்டில் சேர்ந்தார் மார்க்ஸ். அதே ஆண்டு அக்டோபரில் அவரே அந்த ஏட்டின் ஆசிரியர் ஆகி விட்டார். 1843 மார்ச் வரை அவ்வேடு மார்க்ஸின் கட்டுரை களைத் தாங்கி வந்தது. அந்தக் கட்டுரைகளில் முதன்மையான ஒன்று ஏட்டுரிமை தொடர் பானது.

ஈவிரக்கமற்ற திறனாய் வாளர் மார்க்ஸ் :

"நிலவிக் கொண்டிருப் பதை எல்லாம் ஈவிரக்கமின்றி திறனாய்வு செய்தல் என்பது இரு பொருளிலும் தான். திறனாய்விலிருந்து வரப்பெறும் முடிவுகளை எண்ணி அஞ்சா திருத்தல், அதிகாரத்தில் இருப் பவர்களோடு பிணிக்கு வருவதை எண்ணி அஞ்சா திருத்தல் ஆகிய இரு பொருளிலும்தான்".

இளம் வயதில் கைக் கொண்ட இந்த அறநெறிகளை, அறிவியல் நேர்மையும் அரசியல் துணிவுமான இந்தக் கோட்பாடுகளை இறுதி நாள் வரை இழைபிசகாமல் கடைப் பிடித்தவர் மார்க்ஸ். அறநெறி களைப் பற்றிக் கவலைப்படாத அரசியல் சூழ்ச்சிக்காரராக அவரைக் கற்பித்துக் கொண்டி ருப்பவர்கள், பாவம், அறியாத வர்களாய் இருக்க வேண்டும், அல்லது ஆதிக்க பீடங்களின் முன் மண்டியிடுவதையே முதற்பெரும் 'அறநெறி'யாகக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும். இந்த அறிவியல் நேர்மைக்காகவும் அரசியல் அஞ்சாமைக்காகவும் மார்க்ஸ் எத்தகைய விலைகள் தரவேண் டியிருந்தது என்பதை அறிய, அவரது வாழ்க்கையின் புவியி யல் தடத்தை அறிந்தாலே போதும்.

இந்தத் திறனாய்வுக் கோட்பாடுகளில் ஊன்றி நின்றே பிரஷ்ய அரசின் தணிக் கை விதிகளை மார்க்ஸ் ஆராய்ந்தார். ஆனால் இன்ன மும் மார்க்ஸ் ஒரு சோசலிச

"கட்டுண்ட புரோமிதியஸ்" ரைனிஷ் ஜெய்ட்டங் தடைசெய்யப்பட்டது பற்றிய கருத்துப்படம்

படிப்பகம்

www.padippakam.com

வாதியோ பொதுவுடைமை வாதியோ அல்லர். வர்க்கப் போராட்டம், அரசின் வர்க்கத் தன்மை பற்றியெல்லாம் இன்னமும் அவர் தெளிவு பெறாத நிலை! ஆனால் அவரிடம் புரட்சித் துடிப்பும் சனநாயக உணர்வும் இருந்தன. ஆதிக்கத்தை எதிர்க்கவும் அநீதியைத் தட்டிக் கேட்கவுமான ஆவேசம் இருந்தது.

ஏடுகளில் இடம் பெறும் எழுத்துக்களை ஓர் அரசதிகாரி தணிக்கை செய்வதென்ற கருத்தே மார்க்சைக் கோபமுறச் செய்தது.

சிந்தித்து எழுதுகிறவர்களைப் பற்றித் தீர்ப்பளிக்க வேண்டிய அதிகாரி எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு மேலானவராய் இருந்தாக வேண்டும்! "அரசுக்குத் தெரிந்த அனைத்துலக மேதைகளின் கூட்டமே'' பிரஷ்யாவில் வசிக்கிறது போலும் என்று மார்க்ஸ் கேலி செய்கிறார். அப்படியானால் இந்த "அறிவுக் களஞ்சியங்களே" எழுத்தாளர்களாகவும், அறிவியலாளர்களாகவும் வெளிவராமல் இருப்பது ஏன்? தங்கள் அறிவியல் புலமையாலும் அறிவுத் திறமையாலும் அற்ப எழுத்தாளர்களை நசுக்கி உருக்குலைக்காமல் இருப்பது ஏன்?

நம் தமிழ்நாட்டில் இன்றளவும் கூட (?) ஒரு நாடகத்தின் கதை வசனத்தைப் படித்துப் பார்த்து (?) அனுமதி வழங்கவோ மறுக்கவோ, காவல் துறை உதவி ஆய்வாளருக்கு அதிகாரம் உண்டு என்பதைச் சொல்லி வைக்கலாம். கம்பளங்கள் ஆளை ஏற்றிக் கொண்டு பறக்கும் கதைகளை நம்புவதுபோல் காக்கிச் சீருடையின் இலக்கிய மகிமையையும் நம்ப வேண்டியதுதான்!

பிரஷ்ய அரசின் தணிக்கை ஆணைப்படி, தணிக்கையாளர்கள் அரசத் துரோக எண்ணங்களின் வெளிப்பாட்டைத் தடுப்பதில் கவனமாய் இருப்பதோடு, காரசாரமான தொனியில் எழுதுவதையும் கண்காணிக்க வேண்டும்; ஆவேசமான நடையில் யாரும் எழுதிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசின் தணிக்கை அதிகாரிகளை எழுத்து நடையின் கண்காணிப்பாளர்களாக மாற்றுவதை மார்க்சால் பொறுக்க முடியவில்லை.

"சட்டம் என்னை எழுத அனுமதிக்கிறது. ஆனால் நான் என் நடையில் எழுதக் கூடாதாம்! நான் என் மனத்தைப் படம் பிடித்துக் காட்டலாம். ஆனால் அதிகாரி ஆணையிடும் பாவத்தை முதலில் அதன் மேல் பதித்திட வேண்டுமாம்! அறிவுக்கு ஒவ்வாத இத்தகைய கோரிக்கையை மானமுள்ள எவராவது கூசாமல் ஏற்பாரா?"

இந்தத் தணிக்கை விதிக்கு எதிரான போராட்டம் ஏட்டியலுக்கான போராட்டம் மட்டுமல்ல, இலக்கியத்துக்கான போராட்டமும் ஆகும் என மார்க்ஸ் கருதினார், தணிக்கை விதிகளை எதிர்த்து மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் இலக்கியத்துக்கான போராட்டமாக மட்டுமல்ல, இலக்கியத்துக்கான பங்களிப்பாகவும் அமைந்தன. இந்தக் கட்டுரைகளும் சரி, ரைனிஷ் ஜைட்டங்கில் மார்க்ஸ் எழுதிய ஏனைய கட்டுரைகளும் சரி, எகதே, ஷில்லர், வால்டேர், ஷேக்ஸ்பியர் முதலானோரைத் துணைக்கு அழைக்கின்றன. ஓர் அரசியல் ஏட்டின் கட்டுரைகளில் இப்படி உலகப் பேரிலக்கியங்கள் பலவும் சரிகையிட்டு அணிசெய்வதைப் பார்க்கும் போது வியப்பு மேலிடுகிறது - இளம் மார்க்சின் இலக்கிய வளமை குறித்து மட்டுமல்ல, ஜெர்மானிய வாசகர்களின் இலக்கியச் சுவை குறித்தும் தான்!

இத்தனையையும் அந்த வாசகர்கள் படித்தும் சுவைத்தும் இருக்கிறார்கள்! மார்க்ஸ் எழுதத் தொடங்கிய பிறகும் ஆசிரியப் பொறுப்பேற்ற பிறகும் ரைனிஷ் ஜைட்டங் விற்பனை கூடிச் சென்றதைக் குறித்துக் கொள்க!

மார்க்ஸ் எழுதினார் :

"தணிக்கைக்கு சரியான சிகிச்சை அதை ஒழித்து விடுவதுதான்".

அரசோ ஜைட்டங்கைத் தணிக்கை மூலமே ஒழிக்க முனைந்தது. முடிவில் பிரஷ்ய அமைச்சரவை 1843 ஏப்ரலில் அதனைத் தடைசெய்துவிட்டது. பிற்காலத்தில் பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதினார்.

''ரைனிஷ் ஜைட்டங் போல் அதே துணிச்சலுடன் பத்து ஏடுகள் இருந்திருப்பின்.. 1843 இலேயே ஜெர்மனியில் தணிக்கையை இயலாமற் செய்திருக்கலாம்."

ஆனால் கதை அத்துடன் முடியவில்லை. செத்தும் கொடுத்தது ஜைட்டங் என்னும் படி, அதன் வாழ்வில் போலவே முடிவிலும் இலக்கியம் மணத்தது. ஆம், அது தடை செய்யப்பட்டது பற்றி வேறோர் ஏட்டில் ஒரு கருத்துப்படம் வந்தது. அந்தக் கருத்துப் படத்துக்குத் தரப்பட்ட பெயர் : கட்டுண்ட புரோமிதியஸ்!

மலைப் பாறையில் கட்டப்பட்டுக் கழுகினால் கொத்தப் படும் புரோமிதியஸ்! மார்க்சுக்குப் பிடித்தமான ஒரு குறியீடு!

படிப்பகம்

www.padippakam.com

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பல முன்னோடித் திட்டங்கள்!

அத்தனையும் வாடிக்கையாளர்மீது அக்கறையும் ஈடுபாடும் கொண்ட ஐஓபியின் திட்டங்கள்!

இதோ, உங்களுக்காக இரண்டு புதிய திட்டங்கள்!

வெளிநாட்டு இந்தியருக்கும் அவர் உறவினர்களுக்கும் ஓர் இனிப்பான செய்தி !

ஐ.ஓ.பி-யின் 'வீட்டுக்கடன்' திட்டம்
(Home Loan Scheme)

இந்தியாவில் இருக்கிற, அயல் நாட்டு இந்தியரின் உறவினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் வீட்டு மனை வாங்க, விடுகட்டிட, கட்டிய வீட்டைப் புதுப்பிக்க அல்லது பழுதுபார்க்க எளிதான, சமமான மாதாந்திர தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் ரு 10 லட்சம் வரை கடன் உதவி வழங்கப்படும்.

ஐ.ஓ.பி. -யின் 'உரிய காலக் கடன்' 'திட்டம்
(On-time Money Scheme)

இந்தியாவில் இருக்கிற, அயல்நாட்டு இந்தியரின், உறவினர்களுக்கு அயல்நாட்டிலிருந்து பணம் வருவதில் தாமதம் ஏற்பட்டால்,, உங்களது அவசரத்தேவைகளை பூர்த்தி செய்ய உடனடியாக கடன் உதவி வழங்கப்படும்.

வளம்பெற வாழ்த்தி வரவேற்கிறது ஐஓபி.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்.
மத்திய அலுவலகம்: 763,அண்ணாசாலை,சென்னை: 600 002
இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் 1,400-க்கும் மேலான அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

MAC/1737A

வெளிநாட்டு இந்தியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தாரின் நலன் காப்போர் நாங்கள்.

படிப்பகம்

www.padippakam.com
Kanaiyazhi Monthly Regn. No. TN/MS(C) / 1417

9, First Lane, Vijaya Raghava Road, T.Nagar Madras - 600 017.
Phone : (91) 44 - 8283298, 8263635 Fax : (91) 44 - 8250875 Tlx : (81) 41 - 8856 JAIN IN
படிப்பகம்